
# தமிழகத்திற் கதா காலட் சேபம்

31491



இரா. குருநாதன்

சாய் முத்துக்குமரன் பதிப்பகம்

# தமிழகத்திற் கதாகாலட்சேபம்

இரா. குருநாதன்
பேராசிரியர்,
தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக்கலைக்கல்லூரி, தஞ்சை.

சாய்முத்துக்குமரன் பதிப்பகம்.
1315, மண்டபம் சந்து, தஞ்சாவூர்.

முதற்பதிப்பு : 1988
பதிப்புரிமைப் பெற்றது.

காணிக்கை :

இறைநாமம் கூறும்
இனிய இதயங்களுக்கு

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்
நிதியுதவிப் பெற்றது.

விலை : ரூ. 12—00

அச்சிட்டோர் :

ஸ்ரீ வெங்கடாஜலபதி பிரிண்டர்ஸ்,
தஞ்சை. போன் : 20038.

# அருளுரை

## குரு. கோவிந்தராசன்,
**தஞ்சை.**

உலகஉயிர்கள் மும்மலத்தில் உழன்றுஇருவினை கூட்டித் துன்புறும் போதெல்லாம் அருளாளர்கள் பட்டறிவு காட்டி இறையடிஉணர்த்தி வழிகாட்டுவர் முத்தமிழால் பரமன் புகழ் பரப்பினாலும் எளியோர் உய்யும் வகைகாண இசைச்சொற்பொழிவினை (கதா காலட்சேபம்) ஆன்றோர் கண்டனர். தமிழகத்தில் இம்முறை தோன்றிப் பக்தி இயக்கத்திற்கு மேலும் வலுவூட்டக் காரணமான பெரியோர்களின் வாழ்வினை நோக்கி அவர்தம் வாக்கினை அறிந்த இந்நூலாசிரியர் திரு. இரா. குருநாதன் அவர்கள் அத்துறையில் ஈடுபாடு கொண்டவர். இசையறிவும், சொற்றிறனும் கேட்பார் பிணிக்கும் நகைச்சுவையும் இயல்பாய் கைவரப்பெற்ற அவர்தம் தமிழ்த்தெய்வத் தொண்டு சிறக்க, எல்லாம் வல்ல பகவான் பாபா அவர்களின் திருவருளினை வாழ்த்தி வணங்குகின்றேன்.

அன்பன்,

**குரு. கோவிந்தராசன்.**

# அணிந்துரை


## பி. விருத்தாசலம் எம்.ஏ

முதல்வர்,
தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக்
கலைக்கல்லூரி,
தஞ்சை.


தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரியில் தமிழ்த்துறையில் பணிபுரிந்து வரும் பேராசிரியர் **இரா. குருநாதன்** அவர்கள் நகைச்சுவையுடன் பேசுவதிலும், அதற்குரியசெய்திகளைத் திரட்டுவதிலும் மிகவும் வல்லவர். ஆகவே, இவர் கலைவளம் மிக்க தஞ்சையில் நடைபெறும் இன்னிசைச் சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயன்பெற்றுத் தாம் பெற்ற பேற்றினைப் பிறரும் பெற வேண்டுமென்று விரும்பித் **தமிழகத்திற் கதாகாலட்சேபம்** என்னும் தலைப்பில் ஆய்வு செய்து, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் மெய்யியல் நிறைஞர் (எம்.ஃபில்.) என்னும் பட்டமும் பெற்றுள்ளார். தமது ஆய்வேட்டை இப்போது தமிழகஅரசின் தமிழ் வளர்ச்சி இயக்கத்தின் பொருளுதவி கொண்டு நூலாக வெளியிடுகின்றார்.

தமிழகம் தொன்மையான நாகரிகமும்,பண்பாடும் கொண்டது. தமிழ்நாட்டை உலகக் கலைகளின் பிறப்பிடம் என்று சொல்லலாம் தமிழ்நாட்டில்பிறந்த

கலைகள் அனைத்தும் வடக்கே பரவிப் பெரும்புகழ் ஈட்டிச் சிற்சில மாற்றங்களுடன் மீண்டும் தெற்கே திரும்பும். அவ்வாறு திரும்பும்போது அக்கலைகள் வடநாட்டில் பிறந்தனபோலவும், கலைகளேஇல்லாத தமிழ்நாட்டில் புதிதாகப் புகுந்தன போலவும் ஒரு பொய்ம்மாயத் தோற்றத்தைப் பரப்புவோர் உண்டு. தஞ்சையில் இன்று நிலை கொண்டுள்ள பொய்க்கால் குதிரை ஆட்டம் மராட்டியமாநிலத்திலிருந்து இங்கே வந்ததாகச் சொல்வோர்உளர். ஆனால், உண்மையில் அக்கலை சோழநாட்டில் பிறந்தது. ஆயிரத்தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு சோழநாட்டுத் துறைமுகப்பட்டினமாகிய பூம்புகார் நகரத்தில் நடைபெற்ற இந்திரவிழாவில் கலையரசியாகிய மாதவி ஆடிய பதினொரு வகையான ஆடல்களில் ஒன்று தான் இந்தப் பொய்க்கால்குதிரை ஆட்டம் இதனை மாதவி ஆடிய மரக்கால் ஆடலும் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடும். அந்தப் பொய்க்கால் குதிரை ஆட்டம் போலவே கதாகாலட்சேபமாகிய இன்னிசைச் சொற்பொழிவும் விளங்குகிறது. பெயரைப் பார்த்த உடனேயே இது தமிழ்நாட்டுக்கு உரிய கலையன்று, வடநாட்டிலிருந்து வந்தேறிய கலையாக இருக்கக் கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆயினும் உண்மையில் கதாகாலட்சேபமும் தமிழகத்துக் கலைதான். தமிழ்நாட்டுக் கல்லூரி மாணவியருள் சிலர் பஞ்சாபியர்க்குரிய சல்வார்கம்மீசு அணிந்து பஞ்சாபி பெண்களைப் போல் காட்சியளிக்கின்றனர் அல்லவா அதுபோல் இக்கலையின் வடிவம் புதியது, பொருள் பழமையானது. ஆனால் உண்மையைச் சொன்னால் யார் கேட்கிறார்கள்? தமிழாசிரியர்க்கு வேறு வேலை இல்லை, எல்லாக் கலைகளும் தமிழ்நாட்டில் தான்

பிறந்தன என்று சொல்லாவிட்டால் தமிழாசிரியர்களுக்குத் தலை வெடித்துவிடுமே என்று ஏளனம் பேசும் அதிமேதாவிகள் வாழ்கிறநாட்டில் உண்மையைச் சொல்லக்கூடத் தயக்கமாகத்தான்இருக்கிறது.

பேராசிரியர் குருநாதன் அவர்கள் இந்த ஆய்வு நூலின் இ ர ண் ட ா ம் இயலில் கதாகாலட்சேபக் கலையின் தோற்றம், வளர்ச்சி, திரிபுகளைப் பற்றிக் கூறுங்கால், ''மராட்டிய மன்னர்கள் தஞ்சையை ஆண்டபோது இக்கலை தமிழகம் வந்தது'' (பக்.17) என்று தெளிவாகக் கூறினும், நான்காவது இயலில் ''ஒரு நாட்டுக்கலை இன்னொரு நாட்டுக்கலையோடு இணைகிறதுஎன்றால், இருகலைகளில் அடிப்படைக் கூறுகள் ஒன்றாக இருத்தல் வேண்டும். மராட்டிய மாநிலக் கலையான இக்கதாகாலட்சேபம் தமிழகத்தில் வந்து சிறப்புப் பெற்றது என்றால் அக்கலையின் கூறுகள் தமிழ்நாட்டுக் கலைக் கூ று க ளோ டு இணைந்தவை என்றே பொருளாகும். கதாகாலட்சேபக்கலையின் அடிப்படைக் கூறுகள் தமிழ்நாட்டு நாட்டுப்புறக் க லை க ளி ல் பொருந்தியிருக்கும் தன்மையினை உணர்தல் அவசியமாகும்'' (பக்.68) என்று கூறுவது நோக்கத்தக்கதாகும்.

ஆசிரியர் தம் நூலின் முதல் இயலில் கதாகாலட்சேபத்தின் சி ற ப் பு க் க ளை எடுத்துரைக்கின்றார். மேலும், இவ்வியலில் இக்கலையின் இலக்கியப்பயன்களைக் கூறுவதுடன், ''அரசியல், சமுதாயம், மதம், பொருளாதாரம் மனிதஉடம்பு கல்வி உணவுதொழில் ஆகிய எண்வகைக் கோணங்களில் ஏறபடும் சிக்கல்-

களைத்தீர்ப்பதற்கானவழிகளை நமதுமுன்னோர்கள் இதிகாச புராணங்களில் பதிய வைத்துள்ளனர்'' என்றும், ''அதை வெளிப்படுத்தி மக்களை நல்வழிப்படுத்தும் பெரும் பொறுப்பு இக்கலையை மேற்கொண்டபாகவதர்களுக்குஉரியதாகும்''(பக்.11) என்றும் எடுத்துரைக்கிறார்.

இரண்டாம் இயலில்,''ஆந்திராவில்இக்கலைக்கு ''ஹரிகதாகாலட்சேபமு'' என்று பெயர், கர்நாடகத்தில் ''கதாபிரசங்கம்'' என்று பெயர். மராட்டிய மாநிலத்தில் இந்தக் கலையைக் ''கீர்த்தன்'' என்று அழைத்தனர். இக்கலையில் ஈடுபடுபவர்களைக் ''கீர்த்தன்கார்'' என்று அழைத்தனர். தமிழகத்தில் இக்கதை நுழைந்த போது, கதாகாலட்சேபம் கதாபிரசங்கம் என்ற பெயரைப் பெற்று முழுவடிவம் கொண்டது'' என்று விளக்கமாகக் கூறுகின்றார்.

கதாகாலட்சேபத்துக்குரிய கதைப்பொருளையும் அமைப்பையும் மூன்றாம் இயலிலும், இன்று கதாகாலட்சேபம் நடைபெறும் முறையை நான்காவது இயலிலும் மிகத் தெளிவாகக்கூறும் ஆசிரியர்,தமிழக நாட்டுப்புறக் கலைகளில் கதாகாலட்சேபக்கலையின் அடிப்படைக்கூறுகள் இடம் பெற்றுள்ள பாங்கினை ஐந்தாம்இயலில் விளக்கமாக எடுத்துரைத்து,ஆறாம் இயலில் இக்கலையால் சமுதாயம் பெற்ற பயன்களைச் சுருக்கமாக விளக்குகின்றார்.

ஏழாம் இயலில் கதாகாலட்சேபக்கலையின் இன்றைய நிலையினை மிகத் தெளிவாகக் கூறும்

ஆசிரியர் பொருளையே பெரிதென்று எண்ணும் பேயர்களும் இக்கலையில் ஈடுபட்டுள்ளதைச் சுட்டிக் காட்டி மிகவும் வருந்துகின்றார் சிறையகப்பட்டு வாடும் குற்றவாளிகளுக்குக் கதாகாலட்சேபம் நிகழ்த்தி அறமுரைத்தால் சிறைக்கோட்டங்களை அறக்கோட்டங்கள் ஆக்கமுடியும் என்ற கருத்தையும் இறுதியில் எடுத்துரைக்கின்றார்.

மிகத்தெளிவாக - தொடக்கப்பள்ளி மாணவர்களும் புரிந்து கொள்ளும் வகையில் இந்நூலை ஆசிரியர் எழுதியுள்ளார். அவரது அறிவும் ஆற்றலும் பெருகவும், வருங்காலத்தில் மேலும் சிறப்பான நூல்களை எழுதி அவர் பொருளும் புகழும் பெறவும் என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தஞ்சாவூர்
30-12-1988 (ஓ-ம்) பேராசிரியர் பி. விருத்தாசலம்.

---

*பாலோடு சேர்த்து நம்ப பண்பை ஊட்டுவேன்-நமது*
*பழைய கதையைச் சொல்லி நெஞ்சைச்*
*சுத்தமாக்குவேன்."*

— கவிஞர் மாயவநாதன்.

முருகா

முகாம் : 'மதுரை'

## வாழ்த்து

### நேரிசை வெண்பா

வாழிகுரு நாதன் வளர்கதமிழ் ஆய்வு
காழிமுருகன் கருணையினால்—ஏழிசைபோல்
இன்பம் பெருகி இயலிசை மேலோங்கி
அன்புடனே வாழ்க நலம்ஆர்ந்து.

*அன்பன்,*
**கிருபானந்தவாரி**

# வாழ்த்துரை

*பாவலேறு பேராசிரியர்*
**ச. பாலசுந்தரம்,**
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

தமிழகத்திற் கதாகாலட்சேபம் என்னும் இந்நூலைப் பார்த்தேன் உடம்பிற்கு உணவும், உணர்விற்குக் கலையும், அறிவிற்குக் கல்வியும்போல் ஆன்மாவிற்கு வலிவும், பொலிவும் தருவது இறையன்பு (பக்தி). இறையன்பு வளர உள்ளமும், உரையும் இரு பெரும் கருவிகளாகும். அவற்றுள் உரை உரைப்போர், கேட்போர் ஆகிய இருவர் பாலும் பக்தியை விளைவித்துப் பெருக்குதலால் அருளாளர்கள் மறைநெறி சான்ற அறநெறிக்

கருத்துக்களைப் பாடல்களாக அருளினர். உடம்பை வளர்க்கும் உணவை அறுசுவையாகப் படைத்துக் கொண்டது மக்களின் கலையுணர்வாகும். இறையன்பை வளர்க்கும் கருந்துக்களைச் சொல்வடிவாக மட்டுமல்லாமல், அதன்கண் கண்ணிற்கு விருந்தாகும் நாடகக் கலையையும், காதுக்கு விருந்தாகும் இசைக் கலையையும் கூட்டி ஒன்றாகப் படைத்துக்கொள்ளப்பட்டதொரு அரிய கலை தென்னகத்தின் தொன்மையான கலை அரிகதை, சிவகதை என்னும் கதாகாலட்சேபமாகிய ஆன்மீகக்கலை, கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் இக்கலையில் வித்தகர் பலர் தமிழகத்தில் வாழ்ந்தார்கள், வாழ்கின்றார்கள். அக்கலையின் வரலாற்றினையும், அமைப்பினையும் அவற்றை வளர்த்தவர், வளர்ப்பவர்களைப் பற்றித் தெரிவித்தல் வேண்டுமெனவிரும்பி அதனையேதனது இளநிலை முனைவர் (எம்.ஃபில்.) பட்ட ஆய்வுக்குப் பொருளாகக் கொண்டு ஆராய்ந்து கண்ட கருத்துக்களை அருமையன்பர் புதுமைக் கவிஞர் திரு இரா. குருநாதன் அவர்கள் இந்நூலில் வடித்துத் தந்துள்ளார். கதாகாலட்சேபக்கலை, பல முனைவர் பட்டத்திற்கு ஆராயப்படும் கருத்துப்பரப்புவாய்ந்தது ஆதலின் அதுபற்றிச் சுருக்கமாக, இவ் ஆய்வுக் கட்டுரையில் ஓரளவே ஆசிரியர் விளக்கியுள்ளார் எனினும் தரப்பட்டுள்ளதலைப்புகளும்,கருத்துக்களும் நிறைவுத் தருவனவாக உள. இவ் ஆசிரியர்முயற்சியைப் பாராட்டி இறையருளால் மேலும் பல நல்ல நூல்களைப் படைத்து சிறப்பெய்தி வாழ வேண்டி வாழ்த்துகிறேன்.

அன்பன்,

*ச. பாலசுந்தரம்.*

தமிழ் வாழ்க

ச இராமநாதன்
தலைவர் :
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
&
அண்ணாமலைப் பல்கலைக் கழகப்
பேரவை உறுப்பினர்.

## பாராட்டுரை

கலை நாகரிக வளர்ச்சியைக் காட்டும் கருவி ஆகும். பண்பாட்டை வெளிப்படுத்தும் வழியாகும். சமுதாயம் முன்னேற அறிஞர்களும், ஞானிகளும் பாடுபட்டுவந்துள்ளனர். கலையால் மனிதசமுதாயத்தைச் செப்பம் செய்ய முடியும் என்பது நமது முன்னோர்களின் கொள்கையாகும். இயலும்,இசையும், நாடகமும் சமுதாய முன்னேற்றத்திற்காகப் பயன்படும் விதம் குறிப்பிடத்தக்கது.

தமிழகத்திற் கதாகாலட்சேபம் என்னும் தலைப்பில்,தமிழவேள்உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியநண்பர் இரா குருநாதன் நூல்வெளியிட்டுள்ளார்.கலைஞராக இருக்கும் இவர், கதாகாலட்சேபக்கலையைக் கலை நோக்கில் வெளியிட்டு உள்ளார். வாழ்க அவர் முயற்சி என்று வாழ்த்துகிறேன்

இங்ஙனம்,
ச. இராமநாதன்.

# ஸ்ரீ வெங்கடேஸ்வரா அறப்பணிக் கழகம்

*26/2 ஆறுமுகத்தாசாரி சந்து, தெற்கு வீதி,*
**தஞ்சை.**

எண்ணங்கள் எல்லோருக்கும் உண்டு. அதை செயலாக்கும் சக்தி ஒரு சிலருக்கே உண்டு. அந்தஒரு சிலரில் நண்பர் பேராசிரியர் குருநாதன் அவர்களும் ஒருவராவார்.

அவர் உள்ளத்தில் தெய்வீக மணம் வீசும் அவர் எழுத்தில் தெய்வீகக்கலை ஒளிரும். எண்ணமும். எழுத்தும் ஒருங்கிணைந்தால் அவன் வேதாந்தி. வேதாந்தி எழுச்சி பெற்றால் வித்தகன் ஆவான். நம் பேராசிரியர் எழுத்து வித்தகர்.

கலைகள் பலவகை உண்டு. ஆடற்கலை,பாடற்கலை, தெய்வீகக்கலை,கூத்துக்கலை (நாடகக்கலை) காலப்போக்கில் இக்கலைகள் ஒருங்கிணைந்து உருவானதுதான் கதாகாலட்சேபக்கலை.

அவரது இக்கதாகாலட்சேபக்கலையில் அறம் பேசப்படுகிறது. தெய்வீக மணம் வீசப்படுகிறது.

ஒரு எழுத்தாளன் எண்ணத்திலும், எழுச்சியிலும் ஒன்றிணைய வேண்டும். அப்போது தான் அவனது படைப்பு அர்த்தமுள்ள ஒன்றாக அமையும். ஆன்றோர்களால் ஏற்கப்படும், போற்றப்படும்.

இந்த வகையில் நம் குருநாதன் அவர்கள் எண்ணத்திற்கும், எழுச்சிக்கும் ஏற்றம் உடையவர்.

அவர்உள்ளத்தில் அறம்அமைந்துள்ளது. அருள் ஆட்சி செய்கிறது. பக்தி பரவிக்கிடக்கிறது.

எளிய தோற்றம் இனிய முகம், அடக்ககுணம், மற்றவர்க்கு உதவும் மனப்பாங்கு, தான் பெற்ற இன்பம்பெருக இவ்வையகம் என்றஇலக்கணத்திற்கு ஏற்றம் கொடுப்பதே அவரது வாழ்வு.

இத்தகைய போற்றற்குறிய அருங்குணங் கொண்ட இவ்வாசிரியர் தெய்வீக உணர்வால் உந்தப்பட்டு மேடை தோறும் தனக்கே உரித்தான நகைச்சுவைபாணியில் பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் தெய்வீக உணர்வையும், சமுதாய நெறிகளையும் எல்லோருக்கும் உணர்த்தும் பணியில் தன்னை அர்ப்பணித்துள்ளார்.

அவரது இப்பணி மேலும்தொடர, இது போன்ற எண்ணற்ற நூல்கள் எழுதி சமுதாய மாற்றத்திற்கு ஏற்றம் தர, எல்லாம் வல்ல இறைவனைபிரார்த்திக்கின்றேன்.

அன்பன்,

**கோ. தாமோதரன்.**

# வாழ்த்துரை

*"ஆதியிலே வார்த்தை ஒலி) இருந்தது*
*அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது*
*அந்த வார்த்தை தேவனாயிருந்தது*
*அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிற்று*
*அவருக்குள் சீவன் இருந்தது*
*அந்தச்சீவன் மனிதருக்கு ஒளியாயிருந்தது"*

(விவிலியநூல் — அருட்திரு யோவான் 1:1-4.)

இறைவன் இசைவடிவாக இருப்பதால் இசையின் மூலம் இறைவனை வழிபடுவது மிகச்சுலபமான சிறந்தவழியாகும். *"நாதமறிந்திடப் பரமுமறியலாம்"* என்று ஒரு பாடலில் குறிப்பிட்டது போல இசையை அறிந்தால் இறைவனை அறியலாம் என்று சொல்வதில் தவறில்லை. இறைவனை வழிபடுவதற்கு இசை எவ்வாறு பயன்படுகிறதோ அதேபோல் அவனைப் புகழ்ந்தேத்துவதற்கும், அவன் அருட்செயல்களை விவரித்து அறிவிப்பதற்கும் அது பயன்படுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இயலும், இசையும் சேர்ந்த கதாகாலட்சேபம் என்னும் அருங்கலை இறைவனின் புகழைப் பாடுவதற்கும் அவனது அருட்செயல்களை மக்களுக்கு விவரித்துச் சொல்வதற்கும் ஓர் ஒப்பற்ற சாதனமாக விளங்குகிறது. இவ்வரிய கலையின் நுணுக்கங்களை எல்லாம் துய்த்து **தமிழகத்திற் கதாகாலட்சேபம்** என்னும் நூலைக் கரந்தைக் கலைக்கல்லூரியில் துணைப் பேராசிரியராக பணியாற்றும் திரு. இரா. குருநாதன் அவர்கள் எழுதியுள்ளார். அவரது இச் சீரிய பணி சிறப்புற்றோங்க வாழ்த்துகிறேன்.

**து.ஆ தனபாண்டியன்**
தலைவர் — கலைப்புலம்,
பேராசிரியர் — இசைத்துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

# மனந்திறந்து

உள்ளத்தோட்டத்தில் ஆய்வுப்பயிர்செய்ய வகை நல்கிய பாரதிதாசன் பல்கலைக்கழகத்தாருக்கும், பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மா. இராமலிங்கம் (எழில் முதல்வன்)அவர்களுக்கும், வளர்ந்த ஆய்வுப்பயிருக்கு உரம் தூவிய பாவலேறு ச. பாலசுந்தரம் அவர்களுக்கும், பயிர் நடுவே துளிர்த்த களைகளை நீக்கிய பேராசிரியர் பா. மதிவாணன் எம். ஏ. எம். ஃபில். அவர்களுக்கும், பயிரைப் பாதுகாத்த தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரி முதல்வர் பி. விருத்தாசல நாட்டார் அவர்களுக்கும், உள்ளத்தோட்டத்தின் உரிமையாளராக விளங்கும் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் பெருநிலக்கிழார் கல்வித்தந்தைச.இராமநாதன்பிள்ளைஅவர்களுக்கும் பயிர்ச்செழிப்பிற்கு உதவிய பாகவதர்களுக்கும், ஆய்வுப்பயிர்சமுதாயத்திற்குபயன்படவேண்டுமென்று கருதி நூலாக்கம் பெற தமிழ்வளர்ச்சி கழகத்தின் மூலம் பொருளுதவி செய்த தமிழகஅரசிற்கும்,நூலை அச்சிட்ட திரு. ஸ்ரீ வெங்கடாஜலபதி மின் அச்சக உரிமையாளர் திரு. ஜி. தாமோதரன் அவர்களுக்கும் என் நன்றியைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

அன்பன்,

**இரா. குருநாதன்.**

# என்னுரை

உலகில் தோன்றிய மனிதன் தெய்வீகத்தன்மை மானிடத் தன்மை, உலகத் தன்மை ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்குபவன். மேலே தெய்வீகத் தன்மை, கீழே உலகத்தன்மை, இடையே மனிதத்தன்மை என்று கூறலாம். கீழே உள்ள உலகத் தன்மையைத் தன்னிலைக்குக் கொணர்ந்து மேலுள்ளதெய்வீகநிலைக்குஉயரவேண்டும். இதுவே மானிடன் கடமையாகும். அனைவரிடத்திலும் தெய்-வீகத்தன்மை இருக்கின்றது. பூமிக்கடியில் எல்லா இடங்களிலும் தண்ணீர் உண்டு: அந்தத்தண்ணீர் கிடைக்க வேண்டுமானால் தண்ணீருக்கு மேலுள்ள மண்ணை அப்புறப்படுத்த வேண்டும். உலகஆசை, பொறாமை, பகைமை ஆகியவற்றை அப்புறப் படுத்தினால் மனிதன் தெய்வீகத்தன்மையை அடையலாம்.இதனைத்தான்பகவான் சத்யசாயிபாபா தம் சொற்பொழிவுகளில், Man is the Embodiment of God என்று குறிப்பிடுவார். மனிதன் மற்றைய விலங்குகள் போல இழிவாக இறக்கக் கூடாது. இறைவனோடு ஒன்றுபவனாக அமைதல் வேண்டும்.

கதை கேட்டு வளரும் பண்பில் நமது பாரதநாடு சிறந்து விளங்குகின்றது. பழைய நிகழ்ச்சிகளைக் கதையின் மூலமாக விளக்குவதுதான் நமது மரபு. குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை கதை கேட்பதில் விருப்பம் உடையவர்களாக இருப்பது இயல்பாகும். பாட்டிக்கதை, தாத்தா கதை என்னும்

அமைப்பு இன்றும் காணப்படுகின்றது. இக்கதை அமைப்பு அனுபவ முதிர்ச்சியைக் காட்டுவதாகும். கதைஎன்பது ஒருகருத்தை விளக்குமுகமாக அமைக்கப்பட்டிருக்கும், கேட்போர் மனத்தில் ஒருகருத்தைப் பதிய வைக்கும் எளியசாதனம் கதையாகும்.

மந்திர, மாயா ஜாலக்கதைகளைக் கேட்கும் குழந்தைகள் பிற்காலத்தில் அறிவாளியாவார் என்பதை இன்றைய நாளில் மேல் நாட்டார் கண்டறிந்திருக்கின்றனர். இக்கருத்தை நமது முன்னோர்கள் முன்பே அறிந்திருந்தனர். சமுதாயச்சீர்கேட்டை விளக்கவும், திருத்தவும் கதையைச் சாதனமாகக் கொள்ளலாம்

தெனாலிராமன் கதை, பீர்பால் கதை, மரியாதை ராமன் கதை போன்றவை அறிவுக்கதைகளாகும். அறிவின் மூலமாக ஆண்டவனைத் தேடவேண்டும் என்பதற்காகத் தெய்வீகக் கதைகள் தோன்றின. அறத்தையும், தர்மத்தையும் உணர்த்துவதற்காக இராமாயணமும் பாரதமும் கதைவடிவில் தோன்றின கதை மட்டும் முக்கியம் இல்லை. கதையால் உணர்த்தப்படும் உண்மையே முக்கியம். கதையை மேலோட்டமாக உணர்பவர்கள் அதன் உள்ளீடு புரியாமல் ஒதுக்குவது வருந்தத்தக்கது.

கல்லூரிப் பணிகளுக்கு நடுவே இசைக்கலையோடும், கதாகாலட்சேபக்கலையோடும் தொடர்பு உடையஎனக்குத்தலைப்பு மிகவும்பொருத்தமானதே. கதாகாலட்சேபங்களுக்குப் பக்கவாத்தியக்காரனாகச் (ஆர்மோனியம்) சென்றதில் உள்ள அனுபவம் இவ்ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்பட்டிருக்கின்றது.

"வாழ்க்கை ஒரு சவால், அதை சமாளித்தாக வேண்டும். வாழ்க்கை அன்பு மயமானது. அதை அனுபவித்து மகிழ வேண்டும். வாழ்க்கை ஒரு கனவு அதை உணர்ந்து செயல்பட வேண்டும். வாழ்க்கை ஒரு விளையாட்டு. அதை விளையாடி முடிக்கவேண்டும்'', என்ற பகவான் சத்யசாயிபாபாவின் கருத்து நினைக்கத்தக்கதாகும். பலவிதமான சிக்கல்களோடு மானிடன் இன்று போராடிக்கொண்டிருக்கின்றான். இன்றைய தேவைகளை மனிதன் உடனடியாக அடைவதற்கு முயற்சியை மேற்கொள்கின்றான். அதற்கான வழியைப்பற்றி எண்ணுவதால் அற வழியிலிருந்து விலகி, தனக்கும் தன்னைச் சார்ந்த சமுதாயத்திற்கும் தீங்கு விளைவிக்கின்றான். தீமைகளுக்குக் காரணம், தான் என்பதை உணர மறந்து விடுகின்றான். தீமையின் விளைவுகளை அடுத்த பிறவியிலும் அனுபவிக்க வேண்டும் என்ற கருத்து புராணங்களின் மூலம் வலியுறுத்தப்படுகின்றது.

இதிகாச நாயக்கர்கள் மனிதர்களுக்குப் புதிய வலிவை நல்குவர் என்று மக்கள் நம்பினர். காந்தி அடிகள் இராமனையும், பாரதியார் கண்ணனையும் தம் வாழ்வுக்கு வழிகாட்டிகளாகக் கொண்டதை நினைத்தல் வேண்டும்.

"Follow the Master
Face the Devil
Fight the End
Finish the Game"

என்ற பகவான் சத்யசாயிபாபாவின்கருத்தின்படி அன்றே அவர்கள் வாழ்ந்திருக்கின்றனர்.

மக்கள் ஆசைகளை அடக்கத் தெரியாததால் சிக்கலில் விழுந்து தவிக்கின்றனர். ஆசைகளுக்குரிய வரம்பினை நமது முன்னோர்கள் அறநூல்களாக ஆக்கிவைத்தனர். "ஈசரோடாயினும் ஆசை அறு-மின்கள்", என்ற திருமூலரின் வாக்கை எண்ணிப் பார்த்தல் வேண்டும். பழைய பண்பாட்டு முறைகளை நினைவுபடுத்தும் வகையில் கதாகாலட்சேபக்கலை அமைக்கப்பட்டது.

மராட்டிய மாநிலத்திலிருந்து வந்ததாகக் கதா-காலட்சேபக்கலையைக் கருதுதல் மரபாகும் என்றாலும், தமிழகத்தில் இதற்குரிய முழுவடிவம் இல்லையேஒழிய அடிப்படைக்கூறுகள் இருக்கின்றன. தமிழகத்து விதை மராட்டிய மண்ணில் பதிவுற்றுக் கதாகாலட்சேபக்கலை என்னும் கனியாகத் தமிழகம் வந்துள்ளது என்று சொன்னால்மிகையாகாது. மனம் செம்மை அடைவதற்காக உலகில் தோன்றிய பெரியோர்கள் அனைவரும் அறிவுரைவழங்கி இருக்-கின்றனர். பிறமாநிலக்கலையானாலும் தமிழகத்-திலும் வந்து சிறப்புற்றதற்கு இதுவேகாரணமாகும்.

மனிதனின் மனத்தைக் குரங்கென்றும், பேயென்றும், முரட்டுக்குதிரை என்றும் மேலோர்கள் குறிப்பிட்டுள்ளனர் மனம் படுத்தும் பாட்டை அடியவர்கள் பலவாறாகப் படைத்துக்காட்டியிருக்-கின்றனர், மனிதனுடையவாழ்வின் உயர்வுதாழ்வுக்கு மனம் காரணமாகும். இக்கருத்தை, "வெள்ளத்-தனையது மலர்நீட்டம் மாந்தர்தம்உள்ளத்தனையது உயர்வு" என்று வள்ளுவர் கூறியுள்ளார். இக்-காலத்தில் விஞ்ஞானம் அழிவுப்பாதையில் விரைந்து வளர்கின்றது. எனச் சான்றோர்கள் கருதுகின்றனர்

இன்றைய தேவை விஞ்ஞான வளர்ச்சி அல்ல, மனமாற்றமே. மனிதப்பிறப்பு தெய்வீகத்தன்மையை அடைதல் வேண்டும். மனிதன் இன்று விலங்கு நிலைக்கு இறங்கிவிட்டதை நினைத்தல் வேண்டும். அவ்வாறுஇறங்கிவிட்ட மனிதசமுதாயத்தை நிமிர்த்தும் சாதனம் நமது பழைய பண்பாடுகளாகும்.

விஞ்ஞான வளர்ச்சியின் எல்லையைத் தொட்டுவிட்ட மேல்நாட்டார் மன அமைதியைத்தேடி நமது பாரதம் நோக்கி ஓடிவருவதைக் காணலாம். ஏன் நமது பாரதத்தை நோக்கி வருகின்றனர்? பாரதம் எப்படி அவர்களுக்கு மன அமைதியைத் தருகின்றது? ''எங்கு தர்மம் இருக்கின்றதோ அங்கே மன அமைதி கிடைக்கும்.'' உலகில் தர்மம் தோன்றிய நாடு நமது பாரதமே! என்ற பகவான் பாபாவின் சொல்லமுதம் இதற்கு விடையாகும்.

சட்டங்கள் மாறும், நீதி மாறாது. மாறுகின்ற சட்டத்தை அமைப்பதற்கு எவ்வளவு சிந்தனை தேவைப்படுகின்றது? மாறாத நீதியைக் கூறுவதற்கு எவ்வளவு ஆற்றல் வேண்டும் என்பதை நினைத்துப் பார்த்தல் வேண்டும்.

பழங்கால பண்பாடுகளைத் தொகுத்து உருவங் கொடுத்து நமது முன்னோர்கள் இதிகாசம்,புராணம் என்று பெயரிட்டனர் பழங்காலப் பெரியோர்களின் மேலானவாழ்வு நெறிமுறைகளைஇக்காலமக்களுக்கு உணர்த்தினால்தான் வருங்காலச் சமுதாயம் சீரோடு விளங்கும். நமது முன்னோர்கள் எந்த ஒரு அறிவுக் கருத்தையும்கதையின்மூலமாகவே சொல்லிவந்தனர். செய்திகளை கதையின் மூலமாகச் சொன்னால்தான்

கேட்பவர் மனத்தில் பதியும் என்று முன்னோர்கள் நம்பினர். கதையைஉரையாகச்சொல்லும் முறையில் இருந்து இசையோடும் சொல்ல ஆரம்பித்தனர். பாட்டு என்பது அனுபவத்தின் விளைவு என்பதால் கேட்பவரை ஈர்க்கும் ஆற்றல் கொண்டு விளங்கு-கின்றது. மக்களின் புற நிலை வரலாற்றாகவும் அகநிலைகலையாகவும் மலரும் என்பது அடிப்படைக் கொள்கையாகும். கதாகாலட்சேபக்கலை புறவர-லாறான மக்கள் வாழ்வைச் செப்பம் செய்ய வந்த கலையாகும்.

கதாகாலட்சேபங்களில் தொடக்க காலத்துப் பாரதமே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. கிராம மக்களிடையே இராமாயணக்கதையை விட, பாரதக் கதையே அதிகமாகப்பரவி இருந்தது. தமிழகத்தின் கோயில்களில் பாரதம் வாசித்தல் என்ற அமைப்பு ஏற்பட்டதற்கு இதுவும் ஒரு காரணமாகும். மகா-பாரதத்தில் அடங்காத அறமில்லை. அறங்களில் இல்லறம் சிறந்தது நூல்களில் பாரதம் சிறந்தது என்று முதுமொழி பாரதத்தின் பெருமையை உணர்த்துகிறது. ஐந்தாவது வேதமாக மகாபாரதத்தைக் கருதுவர். பாரதநாடு கிராமங்களை அதிகமாகக் கொண்டு விளங்குகிறது. ''பாரத நாட்டின் இதயம் கிராமங்கள்,'' என்று மகாத்மாகாந்தி கூறிஉள்ளதை நினைத்தல் வேண்டும். பாரதநாட்டு மக்களுக்கு அறிவைப்புகட்டி அறியாமையை நீக்கும் பொருட்டு இக்கதாகாலட்சேபக்கலை வந்தது. மக்களுக்கு அறிவுரை புகட்டும் அளவிற்கு அறிவும், அனுபவமும் பெற்ற மேலோர்கள் இக்கலையைமேற்கொண்டனர்.

தமிழகத்திற்கதாகாலட்சேபம் என்னும் தலைப்பில் அமைந்த இந்நூல் ஏழு இயல்களில் அமைந்துள்ளது. இசையோடுதொடர்புடையகலைஎன்பதால் ஏழு இயல்களாக அமைக்கப்பட்டது.

முதல் இயல் கதாகாலட்சேபக் கலையின் சொற்பொருள் என்ற தலைப்பில் பொருள் விளக்கம் தருகின்றது. கலைத்தன்மை, கவின்கலை, தாய்க்கலை, துணைக்கலை, சிறப்புக்கூறுகள், இலக்கியப்பயன், சமுதாயப்பயன், சமயக்கலை ஆகிய உட்பிரிவுகள் கதாகாலட்சேபக்கலையின் அடிப்படைக் கருத்துக்களை நெறிப்படுத்திச் சொல்கின்றன.

இரண்டாவதுஇயல் கதாகாலட்சேபக்கலையின் தோற்றம், வளர்ச்சி, திரிபு ஆகியவற்றைக் கூறுகின்றது. இக்கலையை மேற்கொண்டவர்கள் கலையைப் புரந்தவர்கள் கலையைப் பயிலும் முறை, பயிற்றுவித்த முறை, பயிற்சிப் பள்ளிகள், மராட்டியக் கலையான லாவணி ஆகிய சிறு உட்பிரிவுகள் கதாகாலட்சேபத்திற்குரிய நிலையை விளக்கிச் சொல்கின்றன.

மூன்றாவது இயல் கதாகாலட்சேபத்திற்குரிய கதைப் பொருளையும், அமைப்பையும் உணர்த்துகின்றது. தொடக்க காலம், இடைக்காலம், தற்காலம் கதையமைக்கும் முறை, பக்கவாத்தியச்சிறப்பு ஆகிய உட்பிரிவுகள் கதாகாலட்சேபக்கலையில் அமையும் கதையின் பெருமையை உணர்த்துகின்றன.

நான்காவது இயல் பாகவதர்களின் தகுதிகளை விளக்குகின்றது. மேடைஅமைப்பு, ஆடைஅணிகலன்

கதை சொல்லும் காலம், தமிழகக் கதாகாலட்சேபக் கலையின் அளவு, கதாகாலட்சேபக்கலையின் இடம் பெறும் ராகம், தாளம் பயன்படுத்திய உத்தி, பின்பாட்டுக்காரர் இக்கலையைப்பற்றிய நூல்கள் ஆகிய உட்பிரிவுகள் கதாகாலட்சேபக்கலையின் அமைப்பை விளக்கிச் சொல்கின்றன.

ஐந்தாவது இயல் தமிழகத்து நாட்டுப்புறக் கலையில் காணப்படும் கதாகாலட்சேபக்கலையின் அடிப்படைக் கூறுகளைக் விளக்கிக் கூறுகின்றன. தொன்மைவிளக்கக்கலை, பாரதம்வாசித்தல், வில்லுப் பாட்டு, நாட்டிய நாடகம், தெருக்கூத்து ஆகிய உட்பிரிவுகள்கதாகாலட்சேபக்கலையின் அடிப்படைக் கூறுகள் தமிழகக் கலையில் பொருந்தியிருப்பதை வகைப்படுத்திக் காட்டுகின்றன.

ஆறாவது இயல் கதாகாலட்சேபக்கலையால் சமுதாயம்பெற்றபயன்என்னும்தலைப்பில் கலையால் சமுதாயம் பெற்ற பயனை வகைப்படுத்திச் சொல்கின்றது. இக்கலை பெற்ற பயன் என்னும் உட்பிரிவு கதாகாலட்சேபத்தின் தன்மையை விளக்கி நிற்கின்றது.

ஏழாவது இயல் கதாகாலட்சேபக்கலையின் இன்றைய நிலைஎன்னும் தலைப்பில்அமைந்துள்ளது மராட்டியக் கதாகாலட்சேபம் நவபக்தி, பாகவதரின் குணாதிசயம், பெருமை, கலை உணர்வு, பட்டங்கள், இக்கலையின் வளர்ச்சிக்குச் செய்யவேண்டியஅரசின் கடமைஆகிய உட்பிரிவுகளும்கதாகாலட்சேபக்கலையின் இன்றைய நிலையைத் தொடக்க கால நிலையோடு ஒப்பிட்டும் கூறப்பட்டுள்ளன.

செவிவழிச்செய்திகள் இக்கதைஉலகில் நிரம்பிக் கிடக்கின்றன. தேவையான கருத்துள்ள கதைகள் இடமறிந்து விளக்கத்திற்காக எடுத்தாளப்பட்டுள்ளன. கதாகாலட்சேபம் செய்பவரின் ஆற்றலால் கதை கேட்பவர் பாமரராக இருப்பினும் அவர் பக்தியாலும், ஞானத்தாலும் எந்த இடத்திலும் எந்த காலத்திலும், எந்த நேரத்திலும் முக்தி அடையலாம் என்று உணர வைக்க வேண்டும். இம்முயற்சியைப் பாகவதர் செய்வதற்குப் பக்கவாத்தியமும், பாட்டும் துணைபுரிந்தன. மன ஒருமைப்பாட்டையும், ஆழ்ந்த இன்பத்தையும் கேட்பவருக்கு அளிப்பது கதாகாலட்சேபத்தின் நோக்கமாகும்.

தமிழகத்தில் முதன்முறையாகத் தமிழ்நாட்டு முறையில் கதாகாலட்சேபக்கலையைத்தோற்றுவித்த ஸ்ரீ கிருஷ்ண பாகவதரின் உருவப்படம் நூலின் முகப்பில் அமைந்துள்ளது.


திருப்பழனம் பஞ்சாபிகேச சாஸ்திரி அவர்களின் உருவமும், தஞ்சையில் இக்கலையை நடத்திய பள்ளி வழங்கிய சான்றிதழும் தொடக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| என்னுரை | |
| 1. கதாகாலட்சேபம் சொற்பொருள் விளக்கமும், சிறப்பும் | 1 — 14 |
| 2. கதாகாலட்சேபக்கலையின் தோற்றம் – வளர்ச்சி—திரிபு. | 14 — 35 |
| 3. கதாகாலட்சேபத்திற்குரிய கதைப்பொருளும்,அமைப்பும் | 36—50 |
| 4 கதாகாலட்சேப நடைமுறை இயல் | 51—68 |
| 5. தமிழக நாட்டுப்புறக்கலையில் கதாகாலட்சேபக்கலையின் அடிப்படைக் கூறுகள் | 68—81 |
| 6. கதாகாலட்சேபக்கலையால் சமுதாயம் பெற்ற பயன் | 82—95 |
| 7. கதாகாலட்சேபக்கலையின் இன்றைய நிலை | 95—108 |
| முடிவுரை | 109—110 |
| துணைநூற்பட்டியல் | 111—115 |



திருப்பழனம் பஞ்சாபிகேச சாஸ்திரிகள்
நீண்ட தூரம் கேட்கும்படி பாடும் குரலமைப்பைக்
கொண்டவர்.




தஞ்சையில் நடைபெற்ற கதாகாலட்சேபப்பள்ளியில் வழங்கப்பட்ட சான்றிதழ்

இயல்-1

# கதாகாலட்சேபம் சொற்பொருள் விளக்கமும், சிறப்பும்

காலத்தின் மேன்மையை நமது முன்னோர்கள் சிறப்பாகக் கருதினர். 'காலம் பொன் போன்றது' 'காலத்தே பயிர் செய்' என்ற தொடர்கள் அனுபவ மொழிகளாகும். மனிதனின் வாழ்வு கால அளவுக்கு உட்பட்டதாகும். காலத்தைச் செம்மையாகப் பயன்படுத்த வேண்டும். காலத்தோடு அதற்குரிய செயல் புரிந்தால் உலகையே உரிமையாக அடையலாம் என்பது வள்ளுவர் வாக்காகும். காலட்சேபம் என்ற சொல்லிற்கு காலங் கழித்தல் என்பது பொருளாகும்.[1] தெய்வீகக் கதையைக் கேட்டுக் காலங் கழித்தல் என்பது அன்றாடக் கடமைகளைச் செய்து விட்டு எஞ்சியுள்ள பொழுதை இறைவனின் பெருமைகளைக் கேட்டுக் கழிப்பதை நன்னெறியாக நமது முன்னோர்கள் கருதினர். அனைத்துக் கலைகளும் இறையோடு தொடர்புடையதாகவே விளங்குகின்றன. இக்கலை, தெய்வீகத்தோடு நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகிறது.

**கலைத்தன்மை:**

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் ஏதேனும்

---

1. டி.என். சிதம்பர பாகவதர், **காலக்ஷேபம் என்ற வியாசம் பக்கம் 2**

ஒரு கலையில் தன் மனத்தைப் பறிகொடுக்கின்றான் கலை, உணர்ச்சிகளை அடக்கவும், தூண்டவும். வெளிப்படுத்தவும் பயன்படுகிறது. ஒரு நாட்டின், தனிப்பண்பாட்டின் துல்லியமான அளவுகோல் கலையாகும் என்பர்.[2] உன்னதமான கலை மனித குலம் முழுமைக்கும் பொதுவாகி மொழி கலாச்சார வேறுபாடுகளைத் தகர்த்துத் தேசங்களுக்கு இடையிலான குறுகிய எல்லைகளைக் கடந்து, மனிதர்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் சாதனமாகும்.[3]

வாழ்க்கை என்பது பட்டறிவாகும். இவ்வறிவோடு அழகு கலக்கும் பொழுது கலையாக மலர்கின்றது. இக்கலைஉணர்வு மக்களுக்கு நல்ல பாடத்தைப் புகட்டி வழிப்படுத்துகின்றது. அனுபவ முகிழ்ப்பு இல்லாத கலைகள் மனிதனை ஈர்ப்பதுமில்லை; நீண்ட நாள் வாழ்வதுமில்லை. நீண்டகாலம் வாழும் கலைகளின் கருக்களில், அனுபவ உள்ளீடுகள் இருப்பதைக் காணலாம்.

கி.மு. மூவாயிரத்து இருநூறு ஆண்டுகட்கு முன்னர் எல்லாக் கலைகளுமே எழுதாக் கலைகளாகவே இருந்தன.[4] காலப்போக்கில் அவை வடிவம்

---

2. புத்தனேரி சுப்பிரமணியன், 'நாட்டிய நாடகங்கள்', ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர் பக்கம் 286

3. கே.எம் ஆதிமூலம், 'தமிழகத்தில் நுண்கலைப்புரட்சி, மே நா பக்கம் 300

4 ச அகத்தியலிங்கம், 'நாட்டுப் பாடல்கள்', 'கரந்தைத் தமிழ்ச் சங்க மணிவிழா மலர்' பக். 244.

பெற்றன. சான்றோர்கள் கலையை இருநிலைகளாகக் கண்டனர். ஒன்று அறிவுக்கலை, மற்றொன்று அழகுக்-கலை. இசை, ஓவியம், நாடகம், சிற்பம் ஆகிய அனைத்தும் அழகுக் கலையாகும். இக்கலையில் அறிவும், நிறைவும் வந்து கவித்தலினால் கவின் கலை என்று பெயர் பெற்றது.[5] கதாகாலட்சேபக்கலை ஒரு கவின்கலையாகும். நாடகத்தையும், இசையையும் நடனத்தையும் கொண்டு, கதாகாலட்சேபக்கலை திகழ்கின்றது. கதாகாலட்சேபக்கலை பழைய புராண இதிகாசச் செய்திகளை மக்களுக்குத் தருவதால் கவின் கலைகளில் தனியிடம் பெறுகின்றது.

**தாய்க் கலையும், துணைக் கலையும்:**

இக்கதாகாலட்சேபக் கலையின் தாய்க் கலை நாடகமாகும். "நாடகம் கலைகளுக்கெல்லாம் அரசு, நாட்டின் நாகரீகக் கண்ணாடி பாமர மக்களின் பல்கலைக்கழகம்". என்று தி.க. சண்முகம் கூறுகின்றார்.[6] நாடகத்தை, தாய்க் கலையாகக் கொண்ட இக்கலை இசையைத் துணைக் கலையாகக் கொண்டு விளங்குகின்றது. அசையா மனத்தையும் அசைக்கும் ஆற்றலால் இறைவனை முன்னோர்கள் இசை வடிவாகக் கண்டனர்.[7]

வரலாறு என்பது எல்லா நாடுகளிலும் முதன்

5. ச. பாலசுந்தரம், 'நாடகத்தமிழ்', மே.நா. பக் 31
6. அவ்வை. தி.க. சண்முகம், 'நாடகக்கலை' பக். 12
7. சரவண பவானந்தர், 'இராமலிங்கப் பெருமான் இசைப் பாடல்' 'சமரச சுத்த சன்மார்க்க சங்க நூற்றாண்டு மலர்' பக். 86

முதலில் பாக்கள், கதைகள் வாயிலாகவே தோன்றி இருக்கின்றது. மனிதன் முதன் முதலில் பாக்கள் பாடவே கற்றுக் கொண்டான். அதனால் தான் ஒவ்வொரு நாட்டு இலக்கியத்திலும் பாட்டு முற்பட்டதாகக் காணப்படுகின்றது. கண்ணபிரான் இசை கேட்டுப் பட்ட மரங்கள் துளிர்த்தன. கறவை தன் கன்றுகளுக்கு ஊட்டுவதை மறந்தது. பறவை இனங்கள் இனந் தெரியாத மயக்கத்தில் ஆழ்ந்தன. என்று இசையின் பெருமையைக் கூறுவர்.[8]

துன்பப்பட்டு இறையனுபவம் பெறுவதை விட எளிமையாக இசையால் பெறலாம். திருவையாறு தியாகப்பிரம்மம் இசையாலே இராமனைத் துதித்து ஊனக் கண்ணால் காணப்பெற்றார். வீணையைக் கொடியாகக் கொண்ட இலங்கை வேந்தன் இராவணன் சிவனருளை இசையால் தான் பெற்றான் இசையின் மூலமாக வழிபடுபவர் தான், தாம் பெற்ற அனுபவத்தை,கேட்பவருக்குக் குறையாமல் கொடுக்க முடியும். பேய்மனம் எளிதில் அடங்காது; எண்ணிலாத காலமாக அலைந்து உழலும் அதன் கொட்டத்தை அடக்குவது கடினம். எனவேதான் வட நாட்டில் மனம் அடங்கக் கஞ்சா,அபினி போன்ற பொருட்களை, சில துறவிகள் கையாளுகின்றார்கள். நமதுதென்னாட்டில் மனம் அடங்கக் கண்ட வழி இசைப் பாடலாகும். இசைப் பாக்களின் மூலமாகவே பாரதி மக்களுக்குச் சுதந்திர வேட்கையை ஊட்டினார், என்பதை நினைத்தல் வேண்டும். துன்பமாகிய, கடலைத்

---

8 சடகோப ராமானுசர், ''இன்பப்பா' தமிழ்ப்பொழில் '௧:8

தாண்டும்வழியை,பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

"துன்பக் கடலைத் தாண்டும் போது
தோணியாவது கீதம்"

என்று கூறியிருக்கின்றார். இசையை, சுவைக்கத் தெரியாத மனிதன் பிறக்கவில்லையெனக் கூறலாம். இசையை தனி மனிதன் வெறுப்பதில்லை. அரசியல் சமயக் கண்ணோட்டம் ஆகியவற்றாலே இசை வெறுக்கப்பட்டது.

ஔரங்கசீப் என்ற மன்னனும், சமணபௌத்தர்களும் இசையை வெறுத்தனர் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். முன்னோர்கள் தமது எண்ணங்களை இசை மூலமாகவே வெளிப்படுத்தினர் இசையோடு சொன்னால் தான் மனத்தில் பதியும் என்று நம்பினர். ஆசையும், பொறாமையும் ஐம்பொறிகளைத் தாக்கி மனத்தை இழுத்து அறிவைக் கெட்ட செயல்களில் தூண்டுகிறது. இசை, மனத்தை வயப்படுத்திப் பொறிகளை ஆன்மாவோடு ஒன்றுபடுத்தி விடுகின்றது. இசையால் மனம் ஒன்றுபடும் பொழுது புலன்களின் சேட்டைகள் பலிக்காது போய்விடுகின்றன. மனம் ஒருமைப்பாட்டைஅடையும்போது சகோதர அன்பு ஏற்படும். சகோதர அன்பு மனிதரிடையே ஒற்றுமையை நிலவச்செய்து வாழ்வை மகிழ்வாக்குகின்றது. மனித இனத்தை வாழ்விக்க வந்த கதாகாலட்சேபக் கலை இசையை தேர்ந்தெடுத்ததற்கு இதுவே காரணமாகும்.

கதாகாலட்சேபக் கலையின் மற்றொரு துணைக்கலை நடனக்கலையாகும். தொடக்க காலத்தில் இக்-

கலையில் இருந்த நடன அமைப்பு இன்றைய நாளில் கதாகாலட்சேபங்களில் காணப்படவில்லை. இன்றைய பாகவதர்கள் கைத்தாளம் போடுவதோடு நிறுத்தி விடுகின்றனர். தேவைப்படும் பொழுது அபிநயத்தை,கையால்காட்டி விளக்கம்சொல்வதோடு விட்டுவிடுகின்றனர். இக்கலையோடு இணைந்த துணைக்கலைகளில் நடனக்கலை மறைந்து விட இசைக்கலை மட்டுமே நிலைத்திருக்கின்றது.

**கதாகாலட்சேபக் கலையின் சிறப்புக் கூறுகள்:**

மனத்தில் ஏற்படும் உணர்ச்சியின் பிரதிபலிப்பே வாழ்வாகும். மனித வாழ்க்கைக் குறிக்கோளை நோக்கிச் செலுத்தல்வேண்டும். வீடுபேறு அடைதலே உயர்ந்த குறிக்கோளாகும். வீடுபேறு அடைய அறவாழ்வு அமைதல் வேண்டும். அறத்தால் பொருளைத் தேடி பொருளால் இன்பம் அடைதல் வேண்டும். இக்கருத்தை வலியுறுத்த நமது முன்னோர்கள் அறம்,பொருள், இன்பம்,வீடு என்றார்-கள். அறக் கருத்துக்களைக் கதைவடிவில் சொல்வது நமது மரபாகும். உணர்ச்சிகளைச் சொல் வடிவில் அறிவோடு கலந்து வெளிப்படுத்தும் பொழுது கதை வடிவமாகவே வெளிவரும். ''கதைத்தல்'' என்பது சொல்லுதல் என்ற பொருளைத் தாங்கி நிற்பதை உணர்கின்றோம். இசையோடு கதை சொல்லும் கலையான கதாகாலட்சேபம் ஒரு தெய்வீகக் கலை-யாகும். மற்ற கலைகள் தெய்வத்தை மனித வடிவில் காட்டும். இக்கலை மனிதனைத்தெய்வமாக மாற்றும். நமது புண்ணிய பூமியான பாரத கண்டத்தில்

காணப்படும் எல்லாவிதமான அக நோய்களுக்கும் மருந்தாக இக்கலை பயன்பட்டு வருகின்றது. சங்கீத வித்வான்களும், உபன்யாசர்களும், பண்டிதர்களும், ரசிகர்களும் மாத்திரமன்றித் தேச முன்னேற்றத்தில் இடைவிடாது பாடுபடும் நமது தேசத் தலைவர்கள், இக்கதாகாலட்சேபக் கலையின் மூலம் தன்து நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளமுடியும் என்பர்[9]. கதாகாலட்சேபம் செய்பவர்கள் ஒரு இனத்தார் என்று தள்ளி விடாமல் குரல் வளம் உடையோர் ஒவ்வொருவரும் நமது முன்னோரின் கொள்கைகளை முறையாகக் கற்று, தற்காலத்தில் எழும் சிக்கல்களுக்கு விடையளித்து நாட்டு நன்மைக்குப் பாடுபட்டால் நமது துன்பங்கள் நீங்கும். ஆசையினால் விளையக்கூடிய தீமைகள் தாம் இன்று அதிகம். ஆசைகளில் முதன்மை இடம் வகிப்பது இரண்டுஆசைகள். ஒன்று பெண்ணாசை மற்றொன்று மண்ணாசை. பெண்ணாசையின் விளைவை இராமாயணம் கூறுகின்றது. மண்ணாசையின் விளைவை மகாபாரதம் கூறுகின்றது. காலமுறைப்படி இராமாயணம், பாரதம் என்று கூறுவது மரபாகும். இவை இரண்டும் இதிகாசம் என்று அழைக்கப்படு-கின்றன.

மனிதனின் மனத்தைச் செம்மையாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. இதைத்தான் இக்கலை தெளிவாகத் தருகின்றது.

---

9. டி. எஸ். சிதம்பர பாகவதர், காலக்ஷேபம் என்ற வியாசம் பக்கம்: 7

பல மொழிகளின் கூட்டுறவை ஒருவர் வாய் மூலமாகக் கேட்பதற்கு இக்கலை வழி செய்கின்றது. ஒவ்வொரு மகானும் தன் மொழியில் சொன்ன கருத்துக்களை, மாத்திரை குறையாது, மரபை மீறாது, அம்மொழியிலேயேசொல்லும்பொழுதுகேட்பவருக்கு, சலிப்புத் தோன்றுவதில்லை. பன்மொழிப்புலமை இக் கலையின் உத்திகளில் ஒன்றாகும். உலக நடப்புக்களை ஒரே நேரத்தில் கேட்கும் வாய்ப்பை இக்கலை தருகின்றது. நமது நாட்டில் கல்விப் பயிற்சி அதிகம் பெறாத நிலை இன்றும் உள்ளது. இக்கலை கல்விப் பயிற்சி இல்லாத பாமர மக்களுக்குக் கேட்பதின் வாயிலாக அறிவைப் புகட்டி வருகின்றது. இக்கலை ஒருவகையில் முதியோர் கல்வித் திட்டம் போல் தோன்றினாலும்,எல்லா வயதினருக்கும் நிறைவைத் தரக்கூடியதாகும். உலக இயல்புகளையும், இதிகாச புராண உண்மைகளையும், மக்களுக்குத் தெரிவிப்பதால் இதுவும் ஒருவகைப் பிரச்சாரமாகக் கருதப்படுகின்றது. பக்தி, ஞானம் ஆகிய இரண்டையும் மக்கள் மனத்தில் ஊன்றவே இக்கலை பயன்பட்டு வருகின்றது. சுமார் 200 ஆண்டுக்குட்பட்டு வளர்ந்த இக்கலை காலந்தோறும் பெற்ற ஆதரவினால் சிறப்புற்று விளங்கி வருகின்றது.

"தெய்வ நம்பிக்கை ஊட்டுவதில் இக்கலை தனியிடத்தைப் பெறுகின்றது. தெய்வீக நம்பிக்கையில் அன்பு வளர்கின்றது. உண்மை அன்பால் அமைதி கிட்டுகின்றது. அமைதியால் சத்தியம் உருவாகின்றது சத்தியத்தால் ஆனந்தம் உண்டாகின்றது. மனிதன் ஆனந்ததாகம் உடையவன். மானிடன் தெய்வீகத்-

தன்மை கொண்டவன். அவன் தெய்வீகத்தன்மை கொண்டதால்தான் ஆனந்தத்தை விரும்புகின்றான் என்னும் சத்தியசாயிபாபாவின் கருத்து இங்கு சிந்திக்கத் தக்கது.[10]

**இக்கலையின் இலக்கியப் பயன்:**

இலக்கியம் என்பது சென்ற காலத்தைக் காட்டும் கண்ணாடியாகும். மனித வாழ்வின் இலக்கினை இயம்புவது இலக்கியமாகும். மனிதன் உயர்ந்த இலக்கை அடைவதற்கு அறவுணர்வு இன்றியமையாததாகும். அதனால் தான் எல்லா இலக்கியங்களும் அறத்தை விளக்கும் முகமாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்கலை நமது பழைய இலக்கியங்களை, வரலாறுகளை நினைவூட்டுகின்றது. இலக்கியங்களின் உள்ளுறைகளை, படிப்பறியா மக்களிடம் உயர்ந்த இலக்கியங்களின் மேன்மையை வளர்க்கின்றது. திருமுருக கிருபானந்தவாரியாரின் கதைகளின் மூலமாகவே அருணகிரியின், "திருப்புகழ்" என்னும் பக்தி இலக்கியம் விளக்கம் அடைந்திருப்பதைக் காணலாம். மறைந்த இலக்கியங்களில் காணப்பட்ட பாடல்களைச் செவிவழியாகக்கேட்டு மேன்மைசெய்யும்பக்குவத்தால் இக்கலைஞர்களின் மூலமாகவே நாமும் அவற்றை உணர வாய்ப்பளிக்கிறது.

---

10. அனைவரும் ஆண்டவனின் பிள்ளைகள் சனாதனசாரதி மொ.பெ.எஸ். நடராஜன் 13;3 பக். 12.

**சமுதாயப் பயன்:**

மேலோர்கள் வெறுத்து ஒதுக்கிய சாதி, சமயப்-பூசல்கள் இன்று பேயாட்டம் ஆடுவதைக் காண்கின்-றோம். இவ்வகையான பூசல்களை நீக்கும் சாதனம் பக்தியாகும். இறைவனை அடையச் சாதி, சமய வேறுபாடுகள் இருக்கக்கூடாது என்பது நமது முன்-னோரின் கொள்கையாகும். பல்வேறு சாதியினரும், நாயன்மார்வரிசையிலும், ஆழ்வார்திருக்கூட்டத்திலும் காணப்படுகின்றனர். நாயன்மார்களின் இறை நம்-பிக்கையையும், ஆழ்வார்களின் அன்பார்ந்த அன்புள்-ளத்தையும் மக்களுக்கு விளக்கிக் காட்டும் இக்கலை, சமுதாயத்தை ஒற்றுமைப்படுத்தும் சக்தியாக விளங்குகின்றது.

இன்றைய நாளில் எண் வகையான கோணங்-களிலே சமுதாயத்தில் சிக்கல்கள் தோன்றுகின்றன. அவை பின்வருமாறு:

(1) அரசியல்
(2) சமுதாயம்
(3) மதம்
(4) பொருளாதாரம்
(5) மனித உடம்பு
(6) கல்வி
(7) உணவு
(8) தொழில்[11]

---

11. டி.என். சிதம்பர பாகவதர், காலக்ஷேபம் என்ற வியாசம் பக்: 3

இவ்வெண்வகைக் கோணங்களில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழிகளை, நமது முன்னோர்கள் இதிகாச, புராணங்களில் பதிய வைத்துள்ளனர். அதை வெளிப்படுத்தி, மக்களை நல்வழிப்படுத்தும்பெரும்பொறுப்பு இக்கலையைமேற்கொண்ட பாகவதர்களுக்கு உரியதாகும். மேற்கண்ட சிக்கல்கள் தோன்றக் காரணம், மேற்றிசை நாகரிகத்தின் தாக்கமே என்று சொல்ல இடமிருக்கின்றது. பாரதப் பண்பாடு பண்டைய நாளில் உலகத்திற்கே அமைதியையும், சுகத்தையும் அடைகின்ற வழியைச் சொல்லி இருக்கின்றது. "லோகாஸ், மைஸ்தாஸ், ஸிகினோபவந்து" (நானிலத்தார் மேனிலை எய்த வேண்டும்.) என்பதே பாரதப்பண்பாடு.[12] இதிகாசங்களும், புராணங்களும் நமது பாரதப் பண்பாட்டைச் சித்தரிக்கின்றன. பழைய பண்பாட்டை மீண்டும் புதுப்பிக்கும் ஆற்றல் இக்கலைக்கு உண்டு.

தெய்வத்தோடு சேர்வதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அல்லது தெய்வத்தை நம்மோடு சேர்த்துக் கொள்ள முயலவேண்டும். முதலில் செய்யும் முயற்கிக்கு பக்தி என்றுபெயர். இரண்டாவது செய்யும் முயற்சிக்கு ஞானம் என்று பெயர்.

இவ்விரண்டு வகை மார்க்கங்களும் நீண்ட காலமாகவே வந்து கொண்டிருக்கின்றன. இம்மார்க்கங்களை விளக்கும் வகையாக ஏற்பட்டதே இக்கலை.

---

12. சத்திய சாயிபாபா "அனைவரும் ஆண்டவனின் பிள்ளைகள்" சனாதனசாரதி (மொ பெ. எஸ்.நடராஜன்)

இம்மார்க்கத்தை அனுபவநிலையில் கண்டமகான்கள் நூல்களாகப்படைத்தனர். கடவுளை உணர்ந்த மகான்களின் சக்தி வலியது என்பதால் தான் இன்றும் அவர்களது கொள்கைகள் நிலைத்து நிற்கின்றன.

**கதாகாலட்சேபம் சமயக்கலையே:**

மனித இனம் அறிவுத்திறம் பெறத் தொடங்கிய காலம் முதல், சமயமும் உடன் வளர்ந்து வந்திருக்கின்றது. வாழ்க்கையில் நன்னோக்கம் எதுவாயினும், அதை விளக்கி நிறைவேற்ற உதவும் கொள்கையே சமயமாகும். எங்கெல்லாம் மனித உணர்வு தோன்றுகிறதோ, அங்கெல்லாம் சமயம் தோன்றுகின்றது. நமது கலைகளின் வளர்ச்சிக்குப் பண்டுதொட்டு வரும் சமயங்களே காரணமாகும். சமயத்தின் முதிர்ச்சியே கலையாகும். தமிழிலக்கியங்கள் அனைத்தும், சமயத் தொடர்புடனேயே காட்சி தருகின்றன. கலைகள் மனிதனுக்கு இன்ப உணர்வைத் தருகின்றன. உலக இன்பத்தைத்துறந்து மனிதன் வாழவிரும்புவதில்லை. கலையை வெறுத்தசமயங்கள் அழிந்ததற்குக்காரணம் இதுவேயாகும். கலையும், கடவுளும் அனைத்தையும் கடந்து நிற்பதால் இரண்டையும் ஒன்றாகவே நமது முன்னோர்கள் கண்டனர். சிவனைக் கூத்துவடிவினனாகவும், கண்ணனை, புல்லாங்குழல் மேதையாகவும் நமது முன்னோர்கள் கண்டதற்கு கலை உள்ளமே காரணமாகும். கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்னும் அனுபவத் தொடர் கோவிலின் மேன்மையை உணர்த்துகின்றது. அக்காலச்சமுதாயம் கோவிலை மையமாகவே வைத்து நடைபெற்று வந்-

த்தால் மேற்கண்ட தொடர், முதுமொழியாக வழங்கப்படுகிறது. அதனால் தமிழகத்துக்கோவில்கள் அனைத்துக் கலைகளுக்கும் வளர்ப்புப் பண்ணையாக இருந்திருக்கின்றன. இன்றும் ஒரு கலையைக் கற்றுத்தேர்ச்சிபெற்றவர், அக்கலையை அரங்கேற்றம் செய்வதற்கு ஒரு கோவிலைத் தேர்ந்தெடுக்கும் தன்மையை நினைத்தல் வேண்டும்.

கதாகாலட்சேபக் கலையோடு தொடர்புடைய சமயம் வைணவமும், சைவமும் ஆகும். தமிழகத்தில் சிறுபான்மை கிருத்துவமதம் அத்தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. ஏசு மகானின் வரலாற்றை, கதாகாலட்சேபப்பாணியில் கிருத்துவத்தொண்டர்கள் இன்றைய நாளில் செய்து வருகின்றனர்.

ஒவ்வொரு கலைக்கும் தோற்றம் வளர்ச்சி ஆகிய நிலைகள் பற்றிய வரலாறுகள் இருப்பதுண்டு. இக்கதாகாலட்சேபக்கலையின் தோற்றத்தை ஆராய்-வோமேயானால் இக்கலையின் பழமையும், உயரிய தன்மையும் புலப்படும். ஒரு கலை அக்கலையை மேற்கொள்ளும் கலைஞர்கூட்டத்தின் தன்மைக்கேற்ப உயர்வு தாழ்வு அடைவதுண்டு. இக்கதாகாலட்சேபக் கலையை மேற்கொண்டவர்களின் வாழ்வியல் முறை-யாலே இக்கலையின் உயர்வு நிச்சயிக்கப்படுகிறது. தெய்வீகக் கலையான கதாகாலட்சேபத்தைச் செய்-கின்றவர்கள் மக்களாலே 'பூசிக்கப்பட்டனர்'. தூய உள்ளமே இக்கலையில் உள்ளவர்க்குச் சிறந்த தகுதியாகும். இக்கலையை மேற்கொண்டோர்களைப்

பற்றியும்,இக்கலையைப் போற்றிப்புகழ்ந்தவர்களைப் பற்றியும் இக்கலையைக் கற்கும் முறைகள் பற்றியும், கற்பித்த நிறுவனங்கள் பற்றியும் அறிதல் அவசியமாகும். இனி அவைகளைக் காண்போம்.

---

இயல்-2

# கதாகாலட்சேபக் கலையின் தோற்றம் - வளர்ச்சி - திரிபு

இராமனுடைய வீர வரலாறுகளை லவனும், குசனும் பாடியபோது, இறைவன் புகழ், வழிபாடு இவற்றின் வழியாகப் புராண வடிவெடுத்துச் சுருதியின் பொருளை வெளிப்படுத்தினர், இறுதியில் கவிதையில் வரலாறாகத் தோன்றினார்.[1] கவிதைகளில் வரலாறாய்த் தோன்றிய இறைவனின் பெருமையைச் சொல்வதற்கே இக்கதாகாலட்சேபக் கலை தோன்றியது. இக்கலையை மேற்கொண்டவர்களைப் பாகவதர் என்றழைத்தனர். பகவானிடம் அன்பு கொண்டவன் பாகவதன் எனப்படுவான்.

1. டி. பி. இராமச்சந்திரகோஸ்வாமி The Marata Educational Fund Madras Silver Jubilee Souvenir (Cultural and economic studies) பக்: 195

விஷ்ணுவைப் பகவானாக வழிபடும் வைணவர்களைப் பாகவதர் என்று அழைப்பது மரபாகும். விஷ்ணு என்ற வடசொல்லுக்கு எங்கும் நிறைந்து இருப்பவர் என்று பொருளாகும். விஷ்ணுவின் கதைகளைச்சொல்வதற்காக, இக்கலை ஏற்பட்டதால் தான், ''ஹரிகதை'' என்னும் பெயரைப் பெற்றது. விஷ்ணுவின் திருநாமங்களில், ''ஹரி'', என்பதும் ஒன்றாகும். சிவகதையைச் சொன்னாலும், ''ஹரிகதை'' என்று அழைப்பதே மரபாகக் கருதப்பட்டது.

பகவானின்திருநாமம்பாடி, நாரதர், பிரகலாதன், துருவன் போன்ற மகான்கள் மகிழ்ந்திருக்கின்றனர். தேவர்களில், ''யட்சர்கள்'', என்ற ஒரு பிரிவினர் மிகவும் ஆர்வத்தோடு இறைவனின் பெருமைகளைப் பாடியதால், ''யட்சகானம்'' என்று பெயரிட்டனர்.[2] இறைவனை அடைவதற்கு எளிமையான வழி நாத உபாசனையாகும். பழங்காலத்தில் இறைவனின் பெருமையைப் பாடலாகவே பாடி மகிழ்ந்திருக்கின்றனர். தொடக்க காலத்தில் இக்கலை பின்வரும் முறையில் அமைந்திருந்தது. முதலில் குலதெய்வத்தைப் பூசிப்பர்.

இரண்டாவது வாழ்வில் உயரிய உண்மைக் கோட்பாட்டினை இசையோடு கூறுவர். இதற்கு, ''பூர்வபதம்'' என்று பெயர். அப்படிப்பட்ட உண்மைக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்த அவதாரங்களின்

---

2. திருமதி சூடாமணி சடகோபன் நேர்முகப் பேட்டி
நாள்: 5—3—84.

கதைகளைப் பாமரரும் உணரும் வண்ணம் சுவை-யோடு சொல்வர். இடையிடையே இறைவனுடைய நாமத்தை எல்லோரையும் சொல்லச் சொல்வர். இன்றும் கதையின் நடுவே பாகவதர், ''ஹர ஹர நமப்பார்வதிபதயே'', என்று சொல்ல அனைவரும் ''ஹரஹரமகாதேவ'' என்று சொல்வதைக்காணலாம். வாரியார் கதைகளில் மின்சாரம் தடைப்படுமானால் சிவநாமபஜனை செய்வதைக் காணலாம். நான்காவது மங்கள ஆரத்தி எடுப்பர். ஐந்தாவது பிரசாதங்கள் வழங்கப்படும்.[3]

ஆந்திராவில் இக்கலைக்கு, ''ஹரி கதாகாலட்-சேபமு'' என்று பெயர்: கர்நாடகத்தில், ''கதாபிரசங்கம்'' என்று பெயர். இக்கலை வடிவம் பெற்றது மராட்டிய மாநிலத்தில் என்பதே உண்மை. அம்மாநிலத்தில் தொடக்க காலத்தில் மகான்களின் பாடல்களைப் பாடி, பொருள் மட்டுமே சொல்லி வந்தனர். பின்னரே கலைவடிவம் பெற்றது. இத்-தகையகலையை மராட்டிய மாநிலத்தில், ''கீர்த்தன்'' என்று அழைத்தனர். இக்கலையில் ஈடுபடுபவர்களை ''கீர்த்தன்கார் என்று அழைத்தனர். தமிழகத்தில் இக்கலை நுழைந்தபோது, ''கதாகாலட்சேபம்'', ''கதாபிரஸங்கம்'' என்ற பெயரைப் பெற்று முழு வடிவம் கொண்டது.

---

3. டி.பி இராமச்சந்திரகோஸ்வாமி.
The Kirthan The Maratha Education fund Madras Silver Jubilee Souvenir (Cultural and economic Studies) Page: 147

மராட்டிய மன்னர்கள் தஞ்சையை ஆண்ட போது இக்கலை தமிழகம் வந்தது. இசையோடு இதிகாச, புராண வரலாற்றைச் சொல்லும் இக்கலையில் சுருதியும், நாதமும், லயமும் நிரம்பிக் கிடக்கும்.

தாளத்திற்குக் கட்டுப்பட்ட சிறு உருப்படி விருத்தங்கள் மராட்டிய முறைக் காலட்சேபங்களில் கலந்து இருக்கும். சாகி, தண்டி, பஞ்சாமரம், ஓவி, அஞ்சனா கீதம், கட்கர், அபங்கம், மத்தகோகிலம் போன்ற பாடல் வகைகள் சிறு உருப்படி விருத்தங்களாகக் கருதப்பட்டன.[4]

நமது முன்னோர்களின் அனுபவ சாசனங்களான ஆன்மீக வாக்கியங்களை நம்பியும், தன்னையும், தன்னைச் சுற்றியுள்ளவர்களின் வரலாற்றையும் தெரிந்து கொண்டு, அவைகளைத் தன்னனுபவத்திற்குக் கொண்டு வந்தால் தான் வளர்ச்சியையும், இன்பத்தையும் அடையலாம். இக்கலை தோற்றத்திற்கு இதுவே அடிப்படைக் காரணமாகும்.[5]

காலந்தோறும் இக்கலை சிற்சிலமாற்றங்களுக்கு உட்பட்டே வந்திருக்கின்றது. தொடக்க காலத்தில் பாகவதர்கள்,உஞ்சவிருத்திஎடுத்து பகவத்குணத்தை சொல்லினர். இவர்களின் கதைகளில் பக்தி மட்டுமே

---

4. எம்பார்விஜயராகவாச்சாரியார் 'ஹரிகதை' தென்னிந்திய சங்கீத மாநாட்டு மலர் பக்: 86—90.

5. டி.எஸ். சிதம்பர பாகவதர், காலக்ஷேபம் என்ற வியாசம் பக்: 8

இருந்தது. உலகியல் செய்திகள் இல்லை. இறைவனை அல்லது அடியாரைப்பற்றி, ஒரு கதையை இசைகலந்த உபன்யாசமாகச் செய்யத்தம் (குருவான துக்காராமை, சிவாஜி மகாரர்ஜா வேண்டினார். இக்கதாகாலட்சேபக் கலையால் இந்து மதத்தின் மேன்மையை உணர்த்தி வீர ஆவேசம் மக்களுக்கு உண்டாகச் செய்து, போரில் பகைவர்களை விரட்டியிருக்கின்றார், என்ற செவிவழிச்செய்தியை நினைத்தல் வேண்டும்.

கதாகாலட்சேபத்தின் முறை ஒவ்வொரு மாநிலத்திற்கும், அம்மாநில மக்களின் மன ஓட்டத்திற்கொப்ப மாறுவதுண்டு. மக்களின் சுவைக்கேற்பப் பாடல்களை அமைத்துக்காட்டி இக்கலையை நடத்தி வருகின்றனர்.

மக்களின் உள்ளம், நிறையும் அளவிற்குக் கதை சொல்லும்கலைஞர்களே நிலைத்துநிற்பர். மற்றோர் கால ஓட்டத்தில் நிலைப்பதில்லை. நூற்று இருபது ஆண்டுகளுக்குமுன்(1864)இராமச்சந்திரமூர்கர்பாவா என்னும் மராட்டிய பாகவதர், இராமேசுவர யாத்திரையின்போது, தஞ்சையில்தங்கினார். அப்பொழுது தஞ்சையை, காமாட்சிபாய் சாகேப் என்னும் பெண்மணி ஆட்சி செய்து கொண்டிருந்தார். இவர் காலத்தில் தான் இக்கலை தஞ்சையில் பரவத் தொடங்கியது. தஞ்சை மேலரர்ஜவீதியில் அமைந்துள்ள பங்காரு காமாட்சி அம்மன் கோவிலில் முதன் முதலாக மூர்கூர்பாவாவின் கதை நடந்தது. அக்-

காலத்தில் தஞ்சையில் மராட்டியர்கள் அதிகமாக வாழ்ந்ததால் தான் பாவாவின் கதைக்கு ஆதரவு இருந்தது. மொழி தெரியாவிட்டாலும் பாடலின் இனிமைக்காக மற்றமொழி பேசுகின்றவர்களும் விரும்பிக் கேட்டனர். திருவையாறு தியாக பிரும்மம் தியாகையர் இவர் கதையைக் கேட்கத் தஞ்சை வருவாராம்.[6] மூர்கூர்பாவாவின் கதைக்கு இவர்மகன் விஷ்ணுபாவா பின்பாட்டுப் பாடி வந்தார்.

பாகவதர்களும், பக்கவாத்தியக்காரர்களும் நடந்துகொண்டுதான் கதைநிகழ்ச்சியை நடத்தினர். பாகவதர் செல்லுமிடமெல்லாம் பக்கவாத்தியக்காரரும் செல்வர். முன்னும்பின்னும் நடந்து சென்று கதை சொல்வது தான் அன்றைய மரபாக இருந்தது நாற்பது ஆண்டுகள் கதாகாலட்சேபம் நடத்திய இராமச்சந்திரபாவா தஞ்சையில் மறைந்தார்.

அவர் சமாதி தஞ்சை வடக்கு வாசல் பகுதியில் காணப்படுகின்றது. இராமச்சந்திரப்பாவாவிற்குப் பின் அவர் மகன் விஷ்ணு பாகவதர் கதை சொல்லத் தொடங்கினார். தஞ்சை ஸ்ரீ கிருஷ்ணபாகவதருக்கும் இவருக்குமே இக்கலையுலகில் போட்டி இருந்தது. இவ்விருவரின் கதைகளுக்கும் சம அளவில் கூட்டம் இருக்கும். ஸ்ரீ கிருஷ்ண பாகவதருக்கு முன் நரசிம்ம பாகவதர் என்பவர், கதாகாலட்சேபம் செய்திருக்கின்றார், என்றாலும் கலைநுட்பத்தில் ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் உயர்ந்து விளங்கினார்.

---

6 டி என் சுப்பிரமணிய பாகவதர், நேர்முகப் பேட்டி நாள் 9—4—84.

தெலுங்கரின் ஆட்சியின் போது செல்வாக்குடன் இருந்த தஞ்சை பெரியண்ணா (வேங்கடஸ்வாமி நாயுடு) மராட்டிய மந்திரி சபையில் இடம் பெற்றார். சிற்சில ஆண்டுகளில் ஓய்வு பெற்று, எஞ்சிய வாழ்நாளை அமைதியாகப்போக்குவதற்கு, கிருஷ்ண மடத்தை நிறுவினார். பெரியண்ணா நல்ல கலை ரசிகர். பன்மொழிப்புலமைப் பெற்ற பெரியண்ணா மாராட்டியபாகவதரின் கதையைக்கேட்டு மகிழ்ந்தார். பாவாவின் மராட்டிய அமைப்புக் கலையைத் தமிழ்-நாட்டுக்கு மக்கள் உணரும் வகை உண்டா? என சிந்திக்கலானார். பெரியண்ணாவின் எண்ணத்தை ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் நிறைவேற்றினார். அடைக்-கலச் சிறுவனாக வந்த கிருஷ்ணனை ஏற்ற பெரியண்ணா அவனுக்கு எல்லாக் கலைகளையும் கற்பித்தார், கிருஷ்ணனாக வந்த சிறுவனை பாகவதராக ஆக்கினார். ''ருக்மணி கல்யாணம்'' ''சீதாகல்யாணம்'', ''வத்சலாகல்யாணம்'', ''திரௌ-பதி மான ஸம்ரஷணம்'' ஆகிய கதைகளைச்சிறப்பாக மராட்டிய முறையிலிருந்து சற்று மாற்றி நடத்தி, தமிழ்நாட்டு மக்களின் மனத்தில் நிறைந்தார். ஸ்ரீகிருஷ்ணபாகவதரின் கதையைப்பார்க்கவேண்டும் என்று சொல்லும் அளவிற்கு வளர்ந்தார்.

ஸ்ரீ கிருஷ்ண பாகவதரின் காலம் 1847-1903 ஆகும்.[7] இவர் காலத்திலிருந்து, தமிழகத்தில் கதாகாலட்சேபக்கலை புதிய நிலையைப் பெற்றது.

---

7 கலைக்களஞ்சியம், மடலம் 3 பக்; 603.

முன்னும் பின்னும் நடக்காது, கதையை நின்றே சொல்லும் முறையை உண்டாக்கினார்.

மராட்டியர்கள் தலைப்பாகையுடனும், சட்டையுடனும், காலில் சதங்கையுடனும் கதைசொல்லினர். ஆனால் அபிநயம்பிடித்து ஆடவில்லை. ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் நடனக் கலையிலும் தேர்ச்சி பெற்று, அபிநயம்பிடித்து ஆடவும் செய்தார். தமிழ்,தெலுங்கு, மராட்டி, கன்னடம் ஆகிய மொழிகளைக் கலந்தே கதை சொன்னார். தமிழ்நாட்டில் கதாகாலட்சேபம் செய்யும் முறையை வகுத்துக் கொடுத்த பெருமை பெரியண்ணாவையே சாரும்.[8] ஸ்ரீகிருஷ்ணபாகவதர் கோபாலகிருஷ்ணபாரதியின் நந்தனார் சரித்திரத்தை முதன் முறையாக கதாகாலட்சேப முறையில் செய்தார்.[9] சுமார் நூறு ஆண்டுகட்டு முன்பு தான் பெரியபுராணஅடியார் வரலாறு கதாகாலட்சேபத்தில் பயன்படுத்தப்பட்டது.இவ்வரலாற்றைக் கதாகாலட்சேப முறையில் கதையாகச் செய்த பெருமை ஸ்ரீ கிருஷ்ண பாகவதரையே சாரும்.[10]

கல்விப் பயிற்சி இல்லாதவருக்குக் கேள்வி வாயிலாக அறிவு புகட்டுவதற்காகவே இக்கலை

8 டி.என். சுப்ரமணிய பாகவதர் நேர்முகப்பேட்டி நாள்: 9—4—84.

9. ஸீ. சரஸ்வதிபாய், The Indian fine arts society 44th music conference Page 86-90.

10 எம்பர் விஜயராகவாச்சாரியார், இசை உலகம் திருச்சி வானொலி நிலைய ஒலிபரப்பு நாள்: 30—5—83

பயன்பட்டது என்று கருதுகின்றார், சோமலே.[11] மராட்டிய முறையை மாற்றிச் செய்த ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் இக்கலையில் வெற்றி பெற்றதால் இவ்வமைப்பையே பல பாகவதர்களும் பின்பற்றினர்.

ஸ்ரீ கிருஷ்ண பாகவதரின் கதாகாலட்சேப முறையை மாற்றி அமைத்து கிருபானந்த வாரியார் வெற்றி கண்டார்.

**வளர்ச்சி:**

தமிழகத்திற்கு வந்ததும், இக்கலை விரைவாக வளரத் தொடங்கியது. ஓரிடத்தில் வழக்கமாகக் கதை சொல்லும் பாகவதர்கள் மக்களின் ஆதரவினால், பல வெளியூர்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் செல்ல ஆரம்பித்தனர். பொருளாதார நிறைவும் ஏற்படத் தொடங்கியது. இசைவாணர்கள், கச்சேரி செய்வதை விட்டுவிட்டு இக்கலையை மேற்கொள்ளத் தொடங்கினர். இசையை மட்டும் நம்பியிருந்த இக்கலை இயலையும், நடனத்தையும் மேற்கொண்டது. பல இனத்தவரும் இக்கலையை மேற்கொள்ளும்அளவிற்கு வளர்ந்தது. அனைத்துக்கலைகளிலும் தேர்ச்சி பெற்றவர்க்கே இக்கலை வெற்றி வாய்ப்பை நல்கியது. பலவிதமானகலைகளை ஒருவர் மூலமாகக் கேட்கும் வாய்ப்பை மக்கள் பெறுவதால் இக்கலை விரைந்து வளர்ந்தது.

---

11. தஞ்சை மாவட்டம் பக்: 157.

திரிபு:

தொடக்க காலத்தில் இக்கலையில் பாடப்பட்டு வந்த சாகி;திண்டி,ஓவி போன்றபாடல்அமைப்புகளை மாற்றி ''பஞ்சபதி'' என்ற பாடல் அமைப்பினைப் பாடினர்.விநாயகர்,சிவன்,திருமால்,குரு,ஆஞ்சநேயர் ஆகிய தெய்வங்களை வாழ்த்திப் பாடும் முறைக்கு, ''பஞ்சபதி'' என்றுபெயர். கதாகாலட்சேபக்கலையில் தனியிடத்தைப் பெற்ற, ''விஜய ராகவ ஆச்சாரியார்'' பஞ்சபதி பாடல் அமைப்பைப் பாடாமல் விநாயகர், சரஸ்வதி துதியோடு கதையைத் தொடங்குவது குறிப்பிடத்தக்கது. கிருத்துவரான திரு.தன-பாண்டியன் என்பவர் நவநாகரிகஉடையோடு சிப்ளா கட்டையைக்கையிலேந்தி,ஏசுமகானின்வரலாற்றைக் கதாகாலட்சேபப் பாணியில் செய்து வருகின்றார்.

மற்றொருவரான திரு. ஜி.பாலசுந்தரம் என்பவர் வேட்டி, சட்டை அணிந்து ஏசுவின் கதையைச்செய்து வருகின்றார். இவர்கள் ஐந்து வகைப் பாடல்களை முதலில் பாடிக்கதையைத் தொடங்குகின்றனர்.இவ்-வமைப்பு ''பஞ்சபதியை'' நினைவு படுத்துகின்றது. கிருத்துவர்களின் மதப் பிரச்சாரத்தின் பகுதியாக நின்று கதைசொல்லும் அமைப்பு ஏற்பட்டதுஎனலாம்

இக்கலையை மேற்கொண்டவர்கள்:

புராண, இதிகாசங்களை முழுமையாக உணர்ந்-தவர்களும், சமஸ்கிருத மொழிப்பயிற்சி உள்ளவர்-களுமே இதனை மேற்கொண்டனர். இறைவனை

நோக்கிச் செல்ல வழிகாட்டும் புனிதச் செயலின் இக்கலை கொண்டுள்ளதால், வைதீக முறைப்படி வழிபாடு புரிபவராகப் பாகவதர்கள் திகழ்ந்தனர். இக்கலையை மேற்கொண்ட சிலரை மக்கள் தெய்வ வடிவாகவே எண்ணிப் போற்றுவர்.

தொடக்கக் காலத்தில் அந்தணர்களே இக்கலையைமேற்கொண்டனர். அன்றையசமுதாயத்தில் இவர்கள் கல்வி அறிவு பெற்றவர்களாகஇருந்தமையால் இக்கலையை மேற்கொண்டனர் எனலாம். நாளடைவில் அந்தணர் அல்லாதவர்களும், இக்கலையை மேற்கொண்டனர். தஞ்சை ஸ்ரீ கிருஷ்ண பாகவதருக்குமுன்பும் கதாகாலட்சேபம் நடைபெற்று இருந்தாலும், பாகவதர்கள் வறுமையோடு நடமாடினர். இக்கலை உலகில் ஸ்ரீ கிருஷ்ண பாகவதரின் வளர்ச்சியால், பாகவதர்களுக்கு மக்கள் பொன்னையும்,பொருளையும் நல்கினர். ஸ்ரீ கிருஷ்ண பாகவதருக்குக் கிடைத்த மதிப்பைக் கண்ட,சிலருக்கு இக்கலையின் மீது ஈடுபாடு அதிகமானது.

தில்லைஸ்தானம் நரசிம்ம பாகவதர், பிரும்ம ஸ்ரீ இலட்சனாச்சாரியார், திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரியார், தஞ்சை பஞ்சாபகேச பாகவதர், பிரும்ம ஸ்ரீ குலமங்கலம் வைத்தியநாத பாகவதர், பிரும்மஸ்ரீ சிதம்பர பாகவதர், அரிகேசநல்லூர் முத்தையா பாகவதர், ஆகியோர் கிருஷ்ண பாகவதரின் கலை நுட்பத்தால் ஈர்க்கப்பட்டவர்களாவர்.

## 8. சரஸ்வதிபாய்

இவர் கதாகாலட்சேபக் கலையில் நுழைந்த முதல் பெண்மணி யாவர். ஆடவருக்கு, பெண் அறிவுரை சொல்வதா? என்ற எதிர்ப்பு வந்தபொழுது இவருடைய மதி நுட்பத்தாலும், தன் குருவின் மீது கொண்ட உறுதியாலும், எதிர்ப்புகள் பயனின்றிப் போயின. இவரைத் தொடர்ந்து பண்ணிபாய், பத்மாசனி, திருக்கோகர்ணம் கனகாம்புசம் போன்ற பெண்கள் இக்கலையை மேற்கொண்டனர். இன்று இக்கலையை மேற்கொண்ட பெண்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர். பழைய மரபை ஓரளவு கடைப்பிடிப்பதில் தஞ்சை திருமதி கமலாமூர்த்தி, திருமதி சூடாமணி, திருமதி வைஜெயந்திமாலா, திருமதி மைதிலி ஆகியோர் தனியிடம் பெறுகின்றனர்.

திருவரங்கம் சடகோப ஆச்சாரியார், கல்பாத்து சிவராமகிருஷ்ண பாகவதர், சித்திரகவி சிவராம பாகவதர், திருவாரூர் வாமன பாகவதர் (அனந்தராமன்), திருவையாறு அண்ணாசாமி பாகவதர் ஆவுடையார் கோவில் ஹரிஹர பாகவதர், மாயூரம் இராமசாமி பாகவதர், கும்பகோணம் வாதிராஜ பாகவதர், மாங்குடி சிதம்பரபாகவதர், வலங்கைமான் இராமையா பாகவதர், சிதம்பரம் ரெங்காச்சாரி பாகவதர், தில்லையாடி பாண்டுரங்க பாகவதர், கதம்பம் தங்கவேல் செட்டியார், திருவிடைமருதூர் கிருஷ்ண பாகவதர், எஸ்.கே. நன்னைய பாகவதர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இன்று நம்-

மிடையே வாழும் திருமுருக. கிருபானந்த வாரியார், எம்பார் விஜயராகவாச்சாரியார், திரு. பாலகிருஷ்ண சாஸ்திரியார், தஞ்சை. திரு. டி.என். சுப்பிரமணிய பாகவதர், தஞ்சை திரு ஜி. ராமூர்த்தி பாகவதர், திரு குணபூஷணம், கிருத்துவ சமய உலகில் திரு ஜி. பாலசுந்தரம், திரு. தனபாண்டியன், திரு. ஈடன் போன்றோர்களால் இக்கலை சிறந்து விளங்குகிறது.

இக்கலை உலகில் தனியிடம் பெற்றவராகக் காயக சிகாமணி பிரும்ம ஸ்ரீ அரிகேசநல்லூர் முத்தையா பாகவதர் திகழ்ந்தார். இசை நிகழ்ச்சிகள் செய்த இவர் ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் போன்று கதை செய்ய ஆரம்பித்தார். "கௌசல்யா பரிணயம்", "சதிசுலோசனா", என்ற ஆனந்த இராமாயணத்தில் உள்ள இசைச் சரித்திரத்தை,நமது மக்களுக்கு முதன் முதலில் கதையாக அமைத்துச் சொன்னார். இவர் தலைச்சிறந்த கவிஞராகவும் விளங்கினார். இவரது பாடல்கள் இன்றும் இசை வாணர்களால் பாடப்படுகின்றன. இவரைக் கொண்டு மைசூர் மகாராஜா தன் குலதெய்வமான, "சாந்தா தேவியின்", மீது பாடல்கள் புனைய வைத்தார். பாடும்பொழுது எச்சில் தெரிக்காதவாறு சுரம் அமைத்துப்பாடும், "நீரோஷ்ட ராகத்தை". பாகவதர் கண்டறிந்தார் என்று சரஸ்வதி பாய் குறிப்பிட்டுள்ளார்.[12]

---

12. The Journal of music Academy Page: 171—174.

## நீரோஷ்டராகம்

| ஏறு வரிசை | இறங்கு வரிசை |
|---|---|
| ச ரி க த நீ ச | ச நி த க ரி ச |

(இருபத்து ஒன்பதாவது மேளகர்த்தா)

### பல்லவி

ராஜ ராஜ ராதிதே
நாத நிதே சாரதே

### அனுபல்லவி

தேஜா க்ருதே ஸ்ரீ லலிதே
ஸ்ரீ ரச ஸக ஹஜாதே

### சரணம்

நீனே ஹரிகேச ராகஸ்ரீ
நீனே நித்ய கல்யாணி
நீனே ஸ்ரீ கிருஷ்ணே
தீரண ரஷ்ண சனே
ஜெய ஜ்னனே

சாமுண்டேஸ்வரி அர்ச்சனையின் அமைப்பைக் கண்டு, அரசர் பாகவதருக்கு, ''காயகசிகாமணி'', என்னும் பட்டத்தை நல்கினார். 1941-இல், ''சங்கீத லட்சணகிரந்தம்'' எழுதினார். இதற்குத் திருவாங்கூர்

பல்கலைக் கழகம் (டி.லிட்) டாக்டர் பட்டம் நல்கியது இவர் கண்டறிந்த இராகங்கள் பின்வருமாறு:-

சக்ரப்ரதீப்தா, விஜயநாகரி, ஊர்மிகா, குருப்பிரியா, மாயாப்ரதீபம், அரிநாராயணி, நாகபூசணி, வீணாதாரி, விஜயசரசுவதி, அம்ஸகமணி, கர்ணரஞ்சனி, பசுபதிப்பிரியா, புதமமனோகரி, சபைப்பிரியா அம்சதீபகம், கோகிலபாசிணி, அலங்காரி, வலஜி, சாரங்கமல்கார், கௌடமல்கார், அம்சாநந்தி, நிரோஷ்டா முதலியனவாகும்.

**இக்கலையைப் புரந்தவர்கள் :**

கலைஞர்கள் ஆதரிக்கும் வள்ளல்கள் அவ்வப்பொழுது தோன்றிப் புரப்பதால்தான் கலையும் வாழ்கின்றது. புண்ணிய புருஷர்களின் கதையைக் கேட்பது புண்ணியம் என்ற நம்பிக்கையே வள்ளல்களைப் பொருளுதவி செய்யத் தூண்டியது. அடியவருக்குச் செய்யும் தொண்டு ஆண்டவனுக்குச் செய்யப்படும் தொண்டாகக் கருதும் மரபு, நம் நாட்டிற்குரியதாகும். வைணவர்கள் இதனைப் ''பாகவத தர்மம்'' என்பர். தமிழையும் சமயத்தையும் வளர்ப்பதற்காகத் தோன்றிய மடங்கள், இத்தெய்விகக் கலையை வளர்க்கப் பொருளுதவி செய்து பாகவதர்களை ஊக்குவித்தன. திருவாடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் ஆகிய மடங்கள் இக்கலையை ஆதரிக்க ஆர்வம் காட்டின. புதுக்கோட்டை சமத்தானம், இக்கலையை உயர்த்துவதற்காகவே, பாகவதர்களைக் கொண்டுநவராத்-

திரி விழாவை நடத்தினர். மடங்களும், மன்னர்களும் சமத்தானங்களும் மக்களிடம் ஆதரவு பெற்ற பாகவதர்களை மட்டுமே ஊக்குவித்தனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். திருவனந்தபுர சமத்தானம் அண்ணாசாமி பாகவதரை ஆதரித்தது. ஆண்டிப்பட்டி ஜமீன், பெத்தாச்சிசெட்டியார், சேத்தூர் ஜமீன் வெங்கட்டராஜா ஆகியோர், அரிகேசநல்லூர் முத்தையா பாகவதரை ஆதரித்துப் போற்றினர். இராமநாதபுர ராஜாவும், மைசூர் சமத்தானம் உடையார்பாளையம் ஜமீனும், மருங்காபுரி ஜமீனும் ஐதராபாத் நவாப்பும், பாலகங்காதர திலகரும், காசி சாமிகளும், முறையூர் ஜமீன்தார், சண்முகம் செட்டியாரும், இராமநாதபுர ராஜா முத்துராமலிங்க சேதுபதியும் இக்கலையையும், பாகவதர்களையும் ஆதரித்தனர். இன்றைய நாளில் மக்களும் அரசாங்கமும், இக்கலையை ஆதரித்து, பாகவதர்களுக்குப் பட்டங்கள் பலவற்றை வழங்கி வருகின்றன.

**பயின்ற முறையும், பயிற்றுவித்த முறையும் :**

இக்கலை குருகுல முறையில்தான் பிறந்து வளர்ந்தது. அன்னை, தந்தை, ஆசான், இறைவன் என்பதற்கிணங்க, ஆசானை இறையாகக் கருதிக் கற்றனர். இன்றைய கதாகாலட்சேப முறை, ''பஞ்சபதி''யில் குருவணக்கம் அமைக்கப்பட்டதற்கு இதுவே காரணமாகும். கதை ஒன்றானாலும் சொல்லும் முறையினால் சிறப்புறுவதுண்டு.

பயிற்சி - பழைய மரபு - சாத்திரம் என்ற முறையில் இக்கலை கற்றுத் தரப்பட்டது. இன்று குரு பக்தி குறைந்து புத்தக பக்தி நிலை பெற்றிருப்பதை நினைத்தல் வேண்டும். தஞ்சை ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் மராட்டிய பாகவதர்களுக்குப் பணிவிடை செய்து இக்கலையின் நுணுக்கங்களைக் கற்றதாகச் சொல்வதுண்டு. குருபக்தியை நிலைநாட்டவே இக்கதை புனையப்பட்டுள்ளது. இன்றும் குருகுல முறையில்தான் இக்கலை கற்றுத் தரப்படுகின்றது. இக்கலை பயில்வாருக்குச் சங்கீத ஞானம் இருந்தால் போதுமானது. சங்கீதம், கர்நாடகம், இந்துஸ்தானி, கதை சம்பந்தப்பட்ட நிருபணம் (பாடல்) ஆகிய முறையில் கற்றுத் தரப்பட்டது. ஒரு கதைக்கு மூன்று மாதம் அவகாசம் எடுத்துச் சொல்லித் தருவர். பயில்பவரின் வயது முக்கியமாகக் கவனிக்கப்படுவதில்லை. கதையை மனத்தில் ஏற்கின்ற திறமைக்கே முதலிடம் தரப்பட்டது. ஒன்பது அல்லது பத்து வயது சிறுமியர் கூட இக்கலையைப் பயின்று தேர்ச்சி பெற்று விடுகின்றனர். ''சீதா கல்யாணம்'', ''வள்ளித் திருமணம்'' ஆகிய கதைகளையே முதலில் சொல்லித் தருவர் ''சீதாகல்யாணம்'' வால்மீகி இராமாயணத்தையும் ''வள்ளித் திருமணம்'', ''ஸ்கந்த புராணத்தையும்'' அடியொற்றிச் சொல்லித் தரப்படும். இம்முறையில் பயிற்சி பெற்றவர்களில் சிலர் பயின்ற பாடத்தைத் தவிர வேறு சொல்லைப் பயன்படுத்துவதில்லை.

முதலில் பாடலோடு கதையையும் மனப்பாடம் செய்யச் சொல்வர். முதன்முதலில் மேடையில் அறிமுகமாகும்பொழுது, மேடை அச்சம் இல்லாது இருக்கும் பொருட்டே, இம்முறைகையாளப்படுகிறது. மனப்பாடம் செய்யும் ஆற்றல், நினைவாற்றல் உடையவர் ஆகியோர் இக்கலையில் சிறப்புறுவர். இந்நாளில் சிலர் மனப்பாடம் செய்ததை அப்படியே சொல்பவர்களாகக் காட்சி தருகின்றனர். உணர்ந்து சொல்பவர்களாக இல்லை. இப்போக்கு காலப்-போக்கில் அனுபவ ஞானத்தால் மாறுவதுண்டு. வாழ்வியல் அனுபவத்தைப் புராண இதிகாசக்கதை களோடு இணைத்துக் கூறினால்தான் மக்களிடம் இருந்து நல்ல வரவேற்பு கிடைக்கும்.

கதையமைப்பினைப் பாடலோடு எழுதிப் பயில்-வோரிடம் தந்துவிடுவர். மூன்று மாத காலத்திற்குள் பயில்வோர் பாடலோடு கதையை மனப்பாடம்செய்து விடுவர். இடையிடையே பயில்வோரை இக்கலை-யைக் கற்பிப்பவர்சோதிப்பதுண்டு.மெய்ப்பாட்டையும் அபிநய நுணுக்கத்தையும் கற்றுத்தருவர் நான்காவது மாதத் தொடக்கத்தில் ஏதேனும் ஒரு கோவில் விழாவின் போது பயிற்சி பெற்றவரை அரங்கேற்றம் செய்வர். இக்கலையைப் பயின்றவர் தனக்கு விளம்பரம் பெறும் பொருட்டு உள்ளூர்ப் பிரமுகரைத் தலைமை தாங்கச் செய்வர். அன்றைய செலவு முழுவதையும் பயிற்சி பெற்றவரே ஏற்பார். இக் கலையைத் துணை ஆதாரமாகக் கொண்டவர்களும் உண்டு. தனது கற்பனை ஆற்றலால் இக்கலையின்

நுட்பமறிந்து தாமே கதை செய்யத் தொடங்கியவர்களும் உண்டு. காவல்துறை அதிகாரியாக இருந்த திரு. குணபூஷணம் அப்படி வந்தவரே. இவர் தம் காவல்துறை அனுபவத்தையும், இந்திய நாட்டுச் சட்டநுணுக்கங்களையும் மகாபாரதத்தோடுஇணைத்துச் சொல்லும்சிறப்பு நினைக்கத்தக்கதாகும்.தஞ்சை திரு. ரெங்கநாத பட்டாச்சாரியார் கோவிலில் பட்டராகப் பணிபுரிந்தாலும் வாய்ப்புக்கிடைக்கும் நேரத்தில் கதாகாலட்சேபம் செய்து வருவது குறிப்பிடத் தக்கது.

**கதாகாலட்சேபப் பள்ளிகள் — நிறுவனங்கள் :-**

மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த இக்கலை தமிழகத்துத் தஞ்சையில்தான் சிறப்புற்றது. திருவாடுதுறை ஆதினத்தின் பொருளுதவியால் தமிழ்நாடு அறநிலையத்துறை 1963 ஆம் ஆண்டில் தஞ்சையில் கதாகாலட்சேபப் பள்ளியைத் தொடங்கியது. அப்பள்ளி மூன்றாண்டுப் பாடத்திட்டதோடு செயல்பட்டு ஆறுஆண்டுகள் நடைபெற்றது அரசியல் சூழல் காரணமாகவும், நிர்வாகக் குறையாலும் மூடப்பட்டது. இப்பள்ளியின் முதல்வராக திருவையாறு அண்ணாசாமி பாகவதர் நியமிக்கப்பட்டார். முதல் அமைப்பில் பத்து மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதில் பெண்களும்

இருந்தனர். பள்ளியில் சேர்ந்ததும் வில்லுப்பாட்டும் லாவணியும் கற்றுக்கொள்ள வற்புறுத்தப்பட்டது.[13]

இலாவணி :

மராட்டியத்திலிருந்து வந்த மற்றொரு கலை இலாவணியாகும். மராட்டிய மொழியில் இலாவணி என்றால் இசைப்பாட்டு என்று பொருள். இலாவணி என்றால் தொடுத்தல், ஓடுதல் என்ற பொருளையும் தரும். இது வினாவிடை முறையில் அமையும் இசைப் பாடலாகும். கட்சிக்கு ஒருவராக இரண்டு ஆடவர்களோ அல்லது ஒரு ஆடவர், ஒரு பெண்டிர் என்றோ இரண்டு கட்சியாக இருந்து வாதிடுவர். டேப், தப்பு, தம்பட்டம், துந்திடு ஆகியவற்றைப் பக்க வாத்தியங்களாக அமைப்பர். நமது நாட்டுப்புறக் கலையிலுள்ள காமன் பண்டித்திருவிழாவோடு இக்கலை இணைந்து விட்டது. மன்மதனை மையக் கதையாகக் கொண்ட இக்கலை, மன்மதன் சிவனால் எரிக்கப்படவில்லை என்றும், சிவனால் எரிந்தான் என்றும், இரண்டு வகையாகப் பாகுபடுத்தி இசையோடு வாதிடுவர். இதனைத்தான் எரிந்த கட்சி, எரியாத கட்சி என்று அழைப்பர். அரசாங்கக் கொள்கையைப் பரப்பவும் இக்கலை பயன்படுகிறது. சிவன், கலைமகள், சபையோர் குரு, விநாயகன் ஆகியோருக்கு வாழ்த்துத்

---

13. ஆர். பாலமுருகதாஸ் நேர்முகப் பேட்டி. நாள் : 9—4—84.

தெரிவித்து இக்கலையைத் தொடங்குவர். தாமே கவிபாடும்ஆற்றல்உடையவர்களாக இக்கலைஞர்கள் விளங்கினர். வாதத்திறனையும், கவிபாடும் ஆற்றலையும் பெறுவதற்காகக் கதாகாலட்சேபப் பள்ளியில் பயில்வோருக்கு இக்கலையைக் கற்பித்தனர்.

**கதாகாலட்சேபப் பள்ளியில் சேரத் தகுதிகள் :-**

குறைந்தது பள்ளி இறுதி வகுப்பு (எஸ். எஸ். எல். சி.) படித்திருத்தல் வேண்டும். இசையில் உயர்நிலை (ஹையர் கிரேடு) பெற்றிருத்தல் வேண்டும். இக்கலை இசையை மையமாகக் கொண்டதால் இசையறிவு வேண்டப்பட்டது. தமிழ், இந்தி, சமஸ்கிருதம் தெரிந்திருத்தல் வேண்டும் சமஸ்கிரு மொழிக்கு இப்பள்ளியின் மேலிடம் முக்கியத்துவம் அளித்தது. இந்தியில் இரண்டு தேர்வுகள் எழுதியிருத்தல் வேண்டும் தோற்றப் பொலிவும், குரல் வளமும் சிறப்பாகக் கருதப்பட்டன. இத்தகுதிகள் பெற்றவர்களே மேற்படி பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இப்பள்ளியில் மூன்றாண்டு படித்தபின் பட்டங்கள் வழங்கப்படவில்லை. சான்றிதழ்தான் வழங்கப்பட்டது. இப்பள்ளியின் இலச்சினையில், விளக்கு, புத்தகம், தம்பூரா, சிப்ளாகட்டை, தாளம் ஆகிய ஐந்து பொருட்கள் காணப்பட்டன. இப்பள்ளியில் பயின்ற திரு ஆர். பாலமுருகதாஸ் என்பவர் தம்வீட்டிலேயே

யாவருக்கும் இக்கலையை பயிற்றுவிக்கின்றார். குருகுல முறையில் பயின்ற திரு. டி.என். சுப்ரமணிய பாகவதர் பலருக்கும் பயிற்சியளித்து வருகின்றார். தஞ்சையில் கதாகாலட்சேபக்கலையைச் செய்கின்றவர்களில் பலர், இவரிடம் மாணவ, மாணவிகளாக இருந்தவர்கள். குவாலியர் சமஸ்தானத்தில் "ஹரிகதா", காலட்சேபப் பாடசாலை ஒன்று இருந்தது என்பர்.[14] இன்று திறமை மிக்க பாகவதர்களின் ஒவ்வொரு வீடும், இக்கலையைச் சொல்லித் தரும் நிறுவனங்களாகவே இருந்து வருகின்றன.

கதாகாலட்சேபக்கதையின் சிறப்புக்குக் கதையே காரணமாகும். சொல்லும் முறைக்கேற்பக் கதையை அமைக்கும் முறை; எல்லோர்க்கும் வருவதில்லை. கதை அமைக்கும் முறையில் வெற்றி கண்டோர் சிலரே. திரைப்பட உலகில் மூலக்கதை, திரைக்கதை என்ற பிரிவை இன்றும்காணலாம். புராணஇதிகாசக் கதைகளைக் கதாகாலட்சேபக் கலைக்குத் தகுந்தாற் போல் எவ்வாறு அமைத்தனர் என்பதை அறிதல் வேண்டும்.

---

14. வீ. சரஸ்வதிபாய், 'ஹரிகதா பாகவதர்கள்'. The Journal of the Music Academy பக்: 171 – 178

## இயல்-3

# கதாகாலட்சேபத்திற்குரிய கதைப் பொருளும்—அமைப்பும்

கடந்த பல நூற்றாண்டுகளில் எவ்வளவோ கலாச்சாரங்கள் அகிலமெங்கும் தோன்றி வெகு-வாகப் பரவி கால வேகத்தில் அழிந்து விட்டன. காலவேகத்திற்கு ஈடுகொடுத்து,இந்தியக்கலாச்சாரம் சிரஞ்சீவியாக வாழ்ந்து கொண்டு வருகிறது. இந்த கலாச்சாரம் கல்வியறிவு, தைரியம்,தியாகம், சேவை, சங்கீதம், சாகித்யம், சாஸ்திரக்கல்வி போன்றவை நிலைபெறும் பல்கலைக் கழகமாக விளங்குகின்றது. இந்தியக் கலாச்சாரம் மனிதனின் உள்ளத்தில் குடி கொண்டிருக்கும் தெய்வீகத்தை அறிந்து கொள்ள வழிகாட்டுகின்றது.[1]

ஆதிகாலத்தில் பாரத நாட்டுப் பேரறிஞர்களால் உலக அறிவு பற்றிக் கற்பிப்பதோடு மக்களுக்கு ஆன்மீகஅறிவும் கற்றுக்கொடுக்கப்பட்டன.இதிகாசம் புராணம் முதலியவற்றில் கூறப்பட்ட அறநெறி முறைகளை வாழ்க்கையில்கடைப்பிடிக்கவற்புறுத்திக் கூறப்பட்டது.[2] இச்சுவாகுவம்சத்தில் தோன்றியவர்-

1. சத்யசாயிபாபா 'பாரதியப் பண்பாடு' சனாதானசாரதி 12:13 (மொ.பெ.: எஸ். நடராஜன்) பக்.: 9.
2. மே.நூ., பக்.: 13.

கள் சொன்ன சொல்லை மீறமாட்டார்கள் என்பது இராம சரித்திரத்தின் சூத்திரமாகும்.

இராமபிரான் சத்தியத்தின் பொருட்டு அனைத்தையும் துறந்து வெளியேறினார்.சத்தியத்தைத்தவிர வேறு தர்மம் இல்லை என்பதை இராமசரித்திரம் காட்டுகின்றது. மக்களுக்கு நீதி, சத்தியம், தியாகம், அன்பு, கருணை, பக்தி ஆகிய பண்புகளை உணர்த்துவதற்காக ஏற்பட்ட இக்கதாகாலட்சேபக்கலையில் இராமாயணம், பாரதம் ஆகிய இரண்டும் கதைப் பொருளாக எடுத்தாளப்பட்டன. இராமாயணம் இராமவதார மகிமையையும், பாரதம் கிருஷ்ணாவதார மகிமையையும், சொல்கின்றன. பதினெட்டுப் புராணங்களும் கதாகாலட்சேபக் கலைக்கு உரிய கதைகளைப் பெற்று விளங்குகின்றன. புராணம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நீதியைச் சொல்வதாகும். இதிகாசங்கள் எல்லா அறங்களையும் தொகுத்துச் சொல்வனவாகும்.

(பிரம்ம புராணம், பத்ம புராணம், வைஷ்ணவ புராணம், சைவ புராணம், பாகவதம், பவிஷ்யம், நாரதீயம், மாக்கண்டேயம், ஐக்நேயம், பிரம்ம வைத்தம், லிங்கம், ஸ்காந்தம், வாமனம், மைத்யம், சுர்மம், விருசம், கருடம், பிரமாண்டம் ஆகியவை பதினெட்டுப் புராணங்களாகும்.)

வேதவியாசரைப் பின் தொடர்ந்து புராணம் சொல்வதில் சிறந்து விளங்கிய சுதபுராணிகர், சுகாதி

மகான்களுக்குக் கதையாகச் சொன்னார். புராண காலத்திற்குப் பிறகு, பாரத தேசத்தில் சங்கரர், இராமானுசர், மத்துவர் போன்றமகான்கள் மக்களை நல்வழிப்படுத்துவதற்காக, வேத தர்மங்களைக் கதையாகச் சொன்னார்கள். அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் போன்ற பெரியோர்கள் தெய்வீக உண்மைகளை மக்களுக்குக் கதையாகப் பாடிச் சொன்னார்கள். வடநாட்டில் நாமதேவர், துக்காராம், சக்குபாய், மீராபாய் போன்ற அடியார்-கள் இறைவனுடைய புகழைக் கதையாகப் பாடிச் சொன்னார்கள். இவ்வாறு பாடி, கதை சொன்ன பெரியோர்களின் கதைகளே இன்றைய கதாகாலட்-சேபத்திற்கேற்ற கதைகளாக விளங்குகின்றன. இவற்றில் ஏதேனும் ஒரு கதைப் பாத்திரத்தைப் பற்றிக் குறிப்பிட்ட மூன்று அல்லது நான்கு மணி நேரத்திற்குள் இசையோடு சொல்லும் முறையே கதாகாலட்சேபக் கலையாகும்.

**தொடக்க காலகதைப் பொருள் :**

தமிழகத்தில் இக்கலையில் தனியிடம் பெற்றவர் தஞ்சை ஸ்ரீ கிருஷ்ண பாகவதர். இராமாயணம், பாரதம், பாகவதம், பக்த விஜயங்கள் (அடியவர் பெருமைகள்) ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகை-யில்கதைகள் அமைக்கப்பட்டன.ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு கதையே சொல்லப்பட்டது. தொடர் நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை.

இடைக்காலம் :

தொடக்க காலக் கதைப் பொருளே இடைக் காலத்திலும் அமைந்தன. ஆயினும் பாகவதர்கள் கதையைத் தொடர் நிகழ்ச்சியாகவும் சொல்லலா-யினர். பொதுத் தலைப்பில் புராண இதிகாசத் தொடர்பினைச் சொல்லும் அமைப்பு ஏற்பட்டது. தொடர் நிகழ்ச்சிகள் பத்து அல்லது பதினைந்து நாட்கள் தொடர்ந்து நடைபெற்றன. இராமாயணம், பாரதம், பெரிய புராணம், கந்த புராணம் ஆகியவை தொடர் நிகழ்ச்சிக்குப் பயன்பட்டன. கோவில் விழாக்களில் கதை நிகழ்ச்சி முக்கியமாகக் கருதப்-பட்டது

தெய்வீகத்தை மட்டும் தன்னகத்தே கொண்டு விளங்கிய இக்கலை, இடைக்காலத்தில் சமுதாயப் பிரசாரத்திற்கும் பயன்படுத்தப்பட்டது. சுதந்திர உணர்ச்சி பரவுவதற்கு; இக்கலையும், வில்லுப் பாட்டும், நாடகமும் பயன்பட்டன. பாடல்களைப் பாகவதரே இயற்றிப்பாடும் முறையும் ஏற்பட்டது காசியில், "கங்காராம்" என்ற பாகவதர் உணர்ச்சி வசப்பட்டுப் பேசிக் கதை சொன்னதால் மக்களுக்குப் புத்துணர்ச்சி ஏற்பட்டு, சுதந்திர தாகம் அதிகமானது இதன் விளைவாக, அப்பாகவதர் ஆங்கில அரசால் கைது செய்யப்பட்டார். அரசாங்கத்திற்கு எதிரான கொள்கைகளை யார் பேசினாலும் இரகசியக்குறிப் பெடுத்து அரசுக்கு அனுப்புவது இன்றும் வழக்கில் உண்டு, என்பது நோக்கத்தக்கது. தஞ்சை மாமா சாகிப் மூலை என்னும் பகுதியில் இருக்கும்

பிள்ளையார் கோவிலில் சித்திரகவி சிவராம பாக-வதர் கதை சொல்லும் பொழுது காசியில் நடந்த சம்பவத்தை, மக்களுக்குப் பரப்ப எண்ணிக் கதையின் நடுவே, தானே இயற்றிய,

"காசியிலே ஹரிகதைக்கு
கங்காராமிற்கு ஏன்தடை ?
கூப்பனரிசி வயிறு ரொம்பலை
குழந்தை குட்டிகள்
கூக்குவென்று அழுகலாச்சுதே !
மண்ணெண்ணைக்கு மண்டை உடையுதே
மகாஜெனங்கள் வயிறு ரொம்ப எரியுதே"

என்ற பாடலைப் பாடியதால் ஆங்கிலேய அரசின் விசாரணைக்கு ஆளானார். காசியில் ஆங்கிலேய அரசு, அப்பாகவதர் மீது நடவடிக்கை எடுத்தது தவறு என்று சொல்லலாமா ? என்று அதிகாரிகள் விசாரணை செய்ய பாகவதர் தன் மதி நலத்தால், "கோவிலில் வசூல் இல்லை, எப்படி ஹரிகதை நிகழ்ச்சி நடத்துவது? என்று கேட்டனர், நான் காசில்லை என்றால் பரவாயில்லை, கங்கா, ராமா என்று சொல்வதற்கு என் தடை சொல்கிறீர்கள் ? என்பதாகத்தான் "கா சி யி ல் லே ஹரிகதைக்குக் கங்காராமிற்கு ஏன்தடை ?" என்று பாடினேன், என்று விளக்கம் சொன்னார் என்பர்.[3] இராஜராம்

---

3. ஜி. இராமமூர்த்தி பாகவதர், நேர்முகபேட்டி நாள் 6—5—84

பாகவதர் என்ற காந்தியவாதி, காந்தியின் வரலாற்றை ஆறு பாகமாக வகுத்துக் கதா காலட்சேபக் கதை ஆக்கிப் புதுமை செய்துள்ளார்.[4]

இக்காலம் :

இன்றைய விளம்பர யுகத்தில் விவேகம் மறைந்து வேகம் நிறைந்து காணப்படுகின்றது. தொடக்க, இடைக்காலங்களை விட, அதிக அளவு இக்கலை இக்காலத்து நடைபெற்றாலும், இக்கலை சில மாற்றங்களைப் பெற்றே விளங்குகின்றது. இக்கலை அரசாங்கக் கொள்கைகளை இருபது அம்சத் திட்டம், குடும்பக் கட்டுப்பாடு, வரதட்சணை ஒழிப்பு, மரம் நடும் திட்டம், தீண்டாமை ஒழிப்பு ஆகியவற்றைப்—பரப்பப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தீண்டாமை ஒழிப்பிற்கு "நந்தனார் சரித்திரத்தையும்", குடும்பக் கட்டுப்பாட்டிற்கு "குசேலர் கதையையும்", மக்களுக்குச் சொல்வது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

திரைப்படப் பாடல் மெட்டுக்களைக் கதையின் நடுவில் சேர்ப்பது பழைய மரபில்லை என்றாலும் மக்களின் ஆதரவால் மதுரை செல்வி கீதாராணி என்பவர் புதிய உத்தியாக இம்முறையைக் கையாளுகின்றார். இக்கலை இன்று சற்றுத் தொய்வு பெற்று

4. எம்பார் விஜயராகவாச்சாரியார், 'ஹரிகதை' 44-வது தென்னிந்திய சங்கீத மாநாட்டு மலர் பக். 86-90.

இருந்தாலும், திருமுருக கிருபானந்தவாரியார், எம்பார் விஜயராகவாச்சாரியர், திரு. பாலகிருஷ்ண சாஸ்திரியார் போன்றவர்களால் இன்றைக்கும் தெய்வீகத்தன்மையோடு விளங்குகின்றது இன்றைய நாளில் தலைப்புகள் மக்களின் மனத்தைக் கவரும் வகையிலே அமைக்கப்படுகின்றன. திரு. வாரியார் அவர்கள் திருமூலர், பட்டினத்தடிகள், பத்ரகிரியார் அருணகிரியர் போன்ற மகான்களின் வரலாற்றைப் பாமரரும் உணரும் வண்ணம் சொல்லி வருகின்றார். இராமாயணக்கதை என்றால் வால்மீகி இராமாயணம் தான் சொல்ல வேண்டும் என்ற ஒருநிலை மாறிக் கம்பனையும் கலந்துச் சொல்லும் முறை ஏற்பட்டது. மகாபாரதத்தோடு வில்லிபாரதமும் சேர்த்துச் சொல்லப்பட்டது. கந்த புராணமும் ஸ்கந்த புராணத்தோடு சேர்த்துச் சொல்லப்பட்டது கவிதை நடையில் சொல்லும் முறையிலிருந்து பாமர மக்களின் பேச்சு நடை கதைகளில் பயன்படுத்தப் பட்டது. கோவில்களில் நடைபெற்று வந்த இக்கலை திருமண வீடுகளிலும் நடைபெறத் தொடங்கியது. மறைந்த முக்கிய தலைவர்களின் வரலாற்றை, இக் கதையின் மூலம் கூறி வருகின்றார்கள். மாதந் தவறாமல், " இலக்கிய இன்னிசைப் பேருரை " என்ற அமைப்பில் வானொலி நிலையங்கள் இக் கலையைப் பரப்புகின்றன. திரைப்படங்களிலும் கதாகாலட்சேபம் இடம்பெற்றது. நந்தனார் சரித்திரம் என்னும் பழைய கதையை மாற்றி " கிந்தனார் சரித்திரம் " என்று பெயரிட்டு நல்ல தம்பி என்னும் திரைப்படத்தில் அமரர் கலைவாணர்

என்.எஸ். கிருஷ்ணன் அமைத்தார். பிரபல நடிகர்களான பி.யூ. சின்னப்பா, கே.ஏ. தங்கவேலு, எம்.ஜி. இராமச்சந்திரன் ஆகியோர் பாகவதர் வேடத்தில் திரைப்படங்களில் தோன்றி உள்ளனர்.

திருமதி மீரா கிளைம்சு என்பவர் தமிழ்நாட்டில் பிறந்து, வளர்ந்து இக்கலையைக் கற்று அமெரிக்க நாட்டில் குடியேறியவர். தன்னில்லத்தில் அமெரிக்க மாணவர்களுக்கு அரிகதையை ஆங்கிலத்தில் கற்றுத் தருகின்றார். ஆங்கில இசையில் தேவாரம்,சுலோகம் வழிபாட்டுப்பாடல்கள் ஆகியவற்றைக் கற்றுத் தருகின்றார். இவர் மறைந்த நம் பிரதமர் நேருவிடம் தன் சிறுவயதில் பாலமீரா என்று பட்டம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

**கதாகாலட்சேபத்திற்கேற்பக் கதை அமைக்கும் முறை :**

தெய்வீகத் தொடர்பான மூலச் செய்திகள் கதாகாலட்சேபத்திற்கு உரிய முறையில் அமைக்கப் பட்டன. வசனமாக உள்ள பகுதியைப் பாடல், வசனம் என்ற முறையில் அமைப்பதே வழக்கில் உள்ளது. நாட்டிய நாடகத்தின் ஒரு கூறு கதாகாலட்சேபங்களில் இருப்பது கவனிக்கத் தக்கது. சுவாதித் திருநாள் மகாராஜா குசேலரின் கதையைக் கதாகாலட்சேப முறைக்கு மாற்றி, "குசேல உபாக்கியானம்" எனப் பெயரிட்டார். கதையைக் கதாகாலட்சேப முறைக்கு மாற்றி வெற்றி கண்டவர்

கோபால கிருஷ்ண பாரதி நந்தனார் சரித்திரத்தையும், திருநீலகண்டர் இயற்பகை நாயனார், காரைக்காலமையார் ஆகியோரின் சரித்திரத்தையும் இக்கலைக்கு உரியனவாக மாற்றினார். காரைக்காலில் பிரெஞ்சு அதிகாரியாக இருந்த ஆங்கிலேய துரை, கோபால கிருஷ்ண பாரதியின் நந்தனார் சரித்திரத்தை அச்சேற்ற உதவியுள்ளார்.[5]

**நந்தனார் சரித்திர அமைப்பு -**

கற்பக விநாயகர் வணக்கம்

சிவகாமி வல்லி ↓ வணக்கம்

சுப்பிரமணி ↓ தெய்வானை

சரஸ்வதி — லெட்சுமி - விஷ்ணு வணக்கம்

↓

தில்லை மூவாயிரவர் வணக்கம்

↓

அவையடக்கம்

↓

பெரியபுராணப் பாடல்-கதை

↓

மங்கல வாழ்த்து

---

5. திருநாளைப் போவாரென்னும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை பக்-V.

(எ-டு)

வசனம்

சிதம்பரம்போகவேண்டும் என்று வேதியரிடம் நந்தன் வேண்ட அதற்கு வேதியர் கூறுவது.

பாடல்:

இராகம் - அஸாவேரி
தாளம் - ஆதி

பல்லவி

திருட்டுத் தனம் மாத்ரம் வேண்டாமடா — உனக்கு
திருட்டுத் தனம் மாத்ரம் வேண்டாம்.

அனுபல்லவி

முரட்டுத்தனமாய் பேசாதே நீர்மூடா
முன்னும் பின்னு மறியா குடிகேடா
வரட்டித் தவளை போல் விளையாடாதேயடா
வயலை முழுதுஞ் சீர்ப்படுத்திடப் போடா.[6]

(எ-டு)

வசனம்:

நந்தனார் வேதியரைப் பார்த்து நீங்கள் என்னை அடிக்கலாம். நானும் அடிபடலாம், தங்களுக்குக் கை நோகுமென்று வணங்கிச் சொல்லுகின்றார்.

---

6. கோபாலகிருஷ்ண பாரதி, திருநாளைப் போவரென்னும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை பக்-76.

பாடல்:

இராகம் - பெஹாக்
தாளம் - ஆதி

பல்லவி

அடித்தது போதுமையே — அடித்தது போதுமையே

அனுபல்லவி

அடித்தாலும் உங்கள் கைவலியாதோ
அடிமை வேலை செய்யும் என்னுடன் வாதோ
படித்ததெல்லாம் என்மனதில் படாதோ
பாவியெனக்கும் இனிமேல் தெரியாதோ?[7]

(எ-டு)

மங்களம்

பாடல்:

இராகம் - அஸாவேரி
தாளம் - ஆதி

பல்லவி

திருநாளைப் போவாருக்கு ஜயமங்களம் - எங்கள்
தில்லை மூவாயிரவருக்குச் ஜயமங்களம்[8]

நந்தனார் சரித்திரம் சொல்லுகின்ற பாகவதர், தானே வேதியராகவும், நந்தனாராகவும் பேசி நடித்துக் கதை சொல்வார்.

---

7. மே.நூ., பக்.: 78.
8. மே.நூ., பக்.: 187.

கிருத்துவர்கள், பைபிளின் கருத்துக்களைப் பாடலாக்கிக் கதாகாலட்சேபம் செய்கின்றார்கள்.

(எ-டு)

"துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும் பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும்இடத்தில் உட்காராமலும்" என்பது பைபிளின் வாசகம்.

இதனைக் கதாகாலட்சேபத்திற்குரிய முறையில்,

பாடல்
இராகம் - நீலாம்பரி
தாளம் - ரூபகம்

துன்மார்க்கர் ஆலோசனையில் நடவாமல்
தீயவர் வழியில் நில்லாமல்
இன்பமென்ற பரிகாசக்காரர் கூடும்
இருப்பிடந் தன்னில் உட்காராமல்[9]

என்று திரு ஜி. பாலசுந்தரம் என்பவர் அமைந்திருக்கின்றார்.

### பக்கவாத்தியச்சிறப்பு

பக்கவாத்தியத்தின் சிறப்பால் இக்கலையில் சுவை கூடுவதுண்டு. சில நேரங்களில் வாத்தியக்காரர்களின் திறமையால் கதாகாலட்சேபம்

---

9. கீதாவளி (பண்டிகை பாமாலை) பக்.: 76.

சிறப்படையும். பத்மபுராண உத்திர காண்டத்தில், ஸ்ரீ பாகவத மேன்மை ஆறாவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது நாரதரின் வேண்டுகோளுக்கிணங்க சுகாச்சாரியார் கதை செய்ய, பிரகலாதர் தாளம் இசைக்க, உத்தவர் கித்நரி வாசிக்க, நாரதர் வீணை வாசிக்க,அர்ச்சுணன்பின்பாட்டுப்பாட,தேவேந்திரன் மிருதங்கம் வாசிக்க ''ஹரிகதை'' நடந்தது என்று அதில் கூறப்பட்டுள்ளது.[10]

தொடக்க காலத்தில் இக்கலைக்குத்தம்பூராவும் மிருதங்கமும் பக்க வாத்தியங்களாக இருந்தன. இன்றும் சில பாகவதர்கள், பொருட் செலவை முன்னிட்டு இம்முறையைக் கடைப்பிடிக்கின்றனர். நீடாமங்கலம் கிருஷ்ணமூர்த்தி பாகவதர் மிருதங்கம் இல்லாமல், தானே இயங்கும் மின்சார சுருதிப்-பெட்டியை மட்டும் வைத்துக்கொண்டு கதைசெய்தார் பின்னாளில் வயலினோ, ஹார்மோனியமோ பக்க-வாத்தியமாக அமைந்தது. இசைப்பாட்டு நிகழ்ச்சி-களில் மிருதங்கம் வாசிப்பவருக்கு ஓய்வு கிடைப்பது அரிது.கதாகாலட்சேபத்தில் இவ்வாத்தியக்காரருக்கு ஓய்வு கிடைக்கும். திறமையைக் காட்டத் தனி வாசிப்பை அமைப்பர் கதை சொல்லுகின்ற பாக-வதருக்குக் கதையின் நடுவே ஓய்வு கிட்டுவதற்குத் தனி வாசிப்பு அமைப்பு பின்பற்றப்படுகின்றது. இவ்வாறும் அமைக்கப்படும் பக்கவாத்தியக்காரர்கள் பெரும்பாலும் கதை சொல்லுகின்ற பாகவதருக்கு

10. சீ. சரஸ்வதிபாய், 'கதாகாலட்சேபம்' The Indian Fine Arts Society 17 th Souvenir பக்.55

உற்வின்ராக இருப்பது இயல்பாகும். மிருதங்க் வித்வான் கதை சொல்பவரின் மனோபக்குவம் அறிந்து வாசிப்பர். பாகவதர் திடீரென் இரண்டு வரிப்பாடலையும் சில நேரம் முழுப் பாடலையும் பாடுவார். எடுப்பும் தீர்மானமும் சுருக்கமாகவும் நீண்டும் அமையும். இசை நிகழ்ச்சிகளில் மிருதங்க் வித்வான் பாடலுக்குத்தான் தாளமிடுவார். பாடல் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், கதாகாலட்சேபத்திற்கு மிருதங்கம் வாசிக்கும் வித்வான் பாகவதர் பாடும் பாடலை முன்னமேயே அறிந்திருத்தல் வேண்டும். இதன் காரணமாகத்தான் பாகவதர்கள் தனக்கு அமையும் பக்கவாத்தியக்-காரரை மாற்ற விரும்புவதில்லை. பாட்டு இல்லாமல் போனாலும் உணர்ச்சியோடு பாகவதர் பேசும்போது அவ்வுணர்ச்சிக்கு ஏற்ப மிருதங்கத்தைத் தட்டி ஒலி எழுப்புவர். மராட்டிய நாட்டில் மிருதங்க் வித்வான் நின்றுகொண்டேதான் வாசித்துள்ளார். தமிழகத்தில் பாகவதர் மட்டுமே நிற்பார். பக்கவாத்தியக்காரர்கள் அமர்ந்து இருப்பர்.

தஞ்சை ஸ்ரீ கிருஷ்ண பாகவதருக்கு நாராயணசாமி அய்யா என்பவர் மிருதங்கம் வாசித்-துள்ளார்[11] அழகு நம்பியாப் பிள்ளை, தஞ்சை பக்கிரியாப் பிள்ளை, வெங்கட்ராமையர், தாஸ்

---

11 டி.என். சுப்பிரமணிய பாகவதர் நேர்முகப் பேட்டி நாள் 9 4 84.

சுவாமிகள், இராமதாசு அப்பா, வேணு நாயக்கர், சாக்கோட்டை ரெங்கு அய்யர், புதுக்கோட்டை தட்சணாமூர்த்தி, கும்பகோணம் ரெங்கையர் வைத்திய நாதய்யர் போன்றோரின் மிருதங்க சாதனை கலையுலகில் நினைத்தற்குரியது. சிறுபான்மை கதை முடிந்தவுடன் ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்கத் தமிழில் பக்திப்பாடல்கள் பாடுவதற்கு ஹார்மோனியம், தபேலா ஆகிய இரண்டு வாத்தியங்களை அதிகமாகச் சேர்த்துக் கொள்வர். பெண்கள் செய்யும் கதாகாலட்சேபத்திற்குப் பக்கவாத்தியங்களாக பெண்களே சிறுபான்மை அமைவதுண்டு. கதாகாலட்சேபக்கலையில் பக்கவாத்தியமாக மிருதங்கம் இருப்பதே பழமையான மரபாகும் திரு. குணபூஷணம் அவர்கள் தம்முடைய கதைகளின் நடுவே புல்லாங்குழலை இசைத்துப் பக்தர்களை மகிழ்விக்கின்ற காட்சியை இன்றும் காணலாம்.

பின்பாட்டுக்காரரின் இசை ஞானத்தாலும், பக்கவாத்தியக்காரரின் தாள ஞானத்தாலும் கதை சொல்லும் பாகவதரின் சாத்திர அனுபவ ஞானத்தாலும், ஹரிகதை சிறப்புறுகின்றது. பாகவதரின் தகுதியும், கதை அமைத்துச் சொல்லும் முறையும், இத்துறையில் வெற்றி, தோல்வியை நிர்ணயம் செய்கின்றன. இக்கலையின் நடைமுறை இயல்புகளை உணர்தல் அவசியம்.

இயல்-4

# கதாகாலட்சேப நடைமுறை இயல்

ஒரு கலை அதை மேற்கொண்டவர்களின் தகுதிகளால் சிறப்படைகின்றது. மக்கள் பெறுகின்ற சுவைக்கு ஒப்பத் தன் தகுதியை அமைத்துக் கொள்ளுதல் கலைஞர்களின் கடமையாகும். இக்கலை தெய்வீகத்தோடு தொடர்புடையதாக இருத்தலால் மக்கள், பாகவதர்களின் உலகியல் கல்வி நிறுவனங்களின் மூலம் பெறும் பட்டங்களையோ, சான்றிதழ்களையோ தகுதியாக எண்ணுவதில்லை கதைசொல்லும்முறையைத்தான் மக்கள் கவனித்தனர். தமிழகத்தில் இக்கலையில் சிறந்து விளங்கிய ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் பள்ளிச் சென்று பயிலாதவர். இவரைப் பின்பற்றிய பாகவதர் பலரும் அனுபவப் படிப்பில் தான் சிறந்தவர்களாக விளங்கினர். பட்டப்படிப்பும் ஆங்கிலப் படிப்பும் படித்து, இக்கலையை மேற்கொண்ட பாகவதர்களும் இருந்திருக்கின்றார்கள். பாகவதர்கள் எல்லாக் கலைகளிலும் அறிவு பெற்றவர்களாக விளங்கினர். மந்திரம், மாந்திரீகம், சோதிடம், மருத்துவம் ஆகியகலைகளில் குறிப்பாகத்தேர்ச்சி பெற்றிருந்தனர். உயர்ந்த சங்கீத ஞானம், இனிய குரல் வளம் சாத்திரத் தேர்ச்சி பன்மொழிப்புலமை ஆகியவற்றை இக்கலையை மேற்கொண்டோர் பெற்றிருத்தல் வேண்டும்.[1] சபையறிந்து பேசும்

1. எம்பார் விஜயராகவாச்சாரியார், 'ஹரிகதை' தென்னிந்திய சங்கீத மாநாட்டு மலர் பக் : 86-90

ஆற்றல் நாகரிகமான நகைச்சுவை, உரியநேரத்தில் உரிய செய்தியைச்சொல்லும் நினைவாற்றல்ஆகியன பாகவதர்களுக்கு உரிய தகுதிகளாகக் கருதப்பட்டன.

இயற்கையில், மனிதர்கள் மத்தியில், பொது நிகழ்ச்சிகளில்,பேச்சுக்களில்,பாடல்களில் சுவையான இயல்புகள், இரண்டறக் கலந்திருக்கின்றன. இச்சுவையை எல்லோரும் சுவைக்க முடியாது, கூர்ந்த மதி உள்ளோரே சுவைக்க முடியும். இவ்வகைப்பட்ட இரசிகத் தன்மையைப் பெற்றவரே பாகவதர்கள். கதைக்கு நடுவே உவமை சொல்லவும் சம்பவத்தைக் கதையாக்கிச் சுவையூட்டவும் இரசிகத் தன்மை பயன்படும். புராண, இதிகாசப் புலமை, வேத, வேதாந்தத் தேர்ச்சி, உலகியல் அனுபவம் ஆகியவற்றைக் கதாகாலட்சேபக் கலையில் ஈடுபட்டிருப்பவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.[2] இரசிகத் தன்மையோடு கற்பனையும் கலப்பதால் இக்கலை சிறப்புறுகின்றது.

### மேடையமைப்பு

தொடக்க காலத்தில் மேடை இன்றியே இக்கலை நடைபெற்று வந்திருக்கின்றது, மக்களின் நடுவே பாடிக்கொண்டு பாகவதர் செல்ல, பக்க-

---

2. சோமலெ, *தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்*, பக்.: 192-193.

வாத்தியக்காரரும் பின் செல்வர். ஓரிடத்தில் நிலையாக நிற்பதில்லை.[3] பிற்காலத்தில் பாகவதருக்குப் பின்னால் நீண்ட பலகை போடப்பட்டு மேடை அமைக்கப்பட்டது. பாகவதர் பின்பாட்டுக்காரர், தாளம் போடுபவர், சுருதி மீட்டுபவர், மிருதங்கம் வாசிப்பவர் ஆகிய ஐவரும் மேடையிலிருப்பர். மிருதங்கம் வாசிப்பவரைத் தவிர மற்றோர் நின்று கொண்டிருப்பர் ஒரு சில இடங்களில் பாகவதரைத் தவிர மற்றோர் அமர்ந்திருப்பர். இன்றுபெரும்பாலும் அனைவரும் அமரும் அளவிற்கே மேடை அமைக்கப்படுகின்றது. கதாகாலட்சேபம் நின்று கொண்டு செய்தலே மரபாகக் கடைப்பிடிக்கப்பட்டது. வயது காரணமாகச் சிலர் அமர்ந்து சொல்லலாயினர். மேடையில் பாகவதருக்கு வலப்பக்கம் மிருதங்கமும், இடப்பக்கம் வயலினும், பின்பக்கம் பின்பாட்டுக்காரரும், சுருதி மீட்டுபவரும் இருப்பது மரபாகும்.

முன்பு பாகவதர் தம்குழுவினரோடு (பதினைந்து முதல் இருபது பேர் இருப்பர்) ஒரு கிராமத்திற்குச் சென்று கிராமத் தலைவரிடம் அனுமதி பெற்று, வைதீக பூஜை நடத்தி, பகலில் உஞ்சவிருத்தி (காணிக்கை பெறல்) பெற்று இரவில் கதை சொல்வார். அடுத்தநாள் இக்குழு செல்லும் ஊர் முன்னதாக அறிவிக்கப்படுமாதலால், அவ்வூர்

---

3. ரெங்கநாத பட்டாச்சாரியார், நேர்முகப்பேட்டி, நாள் : 25—8—84.

அலங்கரிக்கப்பட்டு அழகுறும். தன் குழு இருக்கும் ஊரில் அங்கு உள்ள மக்களின் ஒற்றுமைக்குத் தன்னால்இயன்ற செயலாற்றுவர். மக்களும் அதற்கு உடன்படுவர்.[4] இன்று பாகவதருக்கு உரிய தொகை முன்னமேயே உறுதி செய்யப்பட்டு முன்தொகை கொடுத்து விடுவதால் கதை நடக்கும் நேரத்திற்கே பாகவதர் தம் குழுவினரோடு வருவர். அடுத்த நாளில் வேறுஊரில் கதைசொல்லவேண்டியிருந்தால் இரவே கதை முடிந்ததும் புறப்பட்டு விடுவார். மற்றவர்களோடு கலந்துபேசுவதற்குப் பாகவதருக்கு வாய்ப்பு இருப்பதில்லை. இக்கலை ஒரு தொழிலாக் மாறியதால்தான் இவ்வகைச் சூழல் உண்டாகி-யுள்ளது.

**ஆடை அணிகலன்:**

காற்றில் ஆடை விலகாது இருக்கும் பொருட்டுப் பாகவதர்கள் பஞ்சகச்சமே இடையில் அணிந்-திருப்பர். (பஞ்சம் - விசாலம், கச்சம் - கட்டுதல்) குடுமியைப் பழமையின் சின்னமாகக் சுருதி வைத்து இருப்பார்கள். அதில் பூச் சுற்றி வைப்பதுமுண்டு. காதணியான கடுக்கன் பொதுவானதாகும். அங்கவஸ்திரத்தைத் தோளில் அணிந்திருப்பர். மார்பில் உருத்திராக்கம் அல்லது துளசிமணி அணிந்திருப்பர்

4. சீ. சரஸ்வதிபாய், 'ஹரிகதாகாலட்சேபம்',
17 th South Indian Music Confrence Souvenir.
பக். 61.

நெற்றியில் திருமண் அல்லது திருநீறு காணப்படும் சபையோர் போடும் மாலைகளைப் பெரும்பாலும் கழற்றாமலே கதை சொல்வர். கையில் தோடா (அணிகலன்) விளங்கும். சட்டையில்லாத மார்பில் சந்தனம் பூசியிருப்பர். மராட்டிய பாகவதர்கள் நீள்-சட்டை அணிந்து வலப்பக்கம் வரிசையாக நாடாவால் முடிச்சு போட்டிருப்பர். பகுடி என்னும் தலைப்பாகை அணிந்திருப்பர் மராட்டிய மாநிலத்தில் தலைப்பாகை இனத்தைக் குறிக்கப் பயன்படும் அடையாளமாகும்[5] தமிழ் நாட்டில் ஆடை அணிகலன் முறையில் பாகவதர்கள் எளிமையைக் கைக்கொண்டனர். பாகவதர்க்குப் பரிசாக அளிக்கும் வேட்டி, துண்டினை, ''பத்துக்கு ஆறு'' என்பர்.

பாகவதர் அணியும் வேட்டி பத்து முழமாகவும், துண்டு ஆறு முழமாகவும் இருப்பதால் இவ்வாறு சொல்லும் வழக்கு ஏற்பட்டது.[6] நாயன்மார்கள், ஆழ்வார்கள் போலவே பாகவதர்கள் காட்சிதந்தனர் தோற்றப் பொலிவு மக்களுக்கு நிறைவைத் தந்தன. தோற்றத்திற்காக இன்று சில இளம்பெண்கள் கதை சொல்ல மேடைக்கு வரும் பொழுது ஒப்பனையோடு வருதலை நினைவு கொள்ள வேண்டும். அந்தணர் குடும்பத்தைச் சார்ந்த திருமணமான பெண்கள்

---

5. எம்பார் விஜயராகவாச்சாரியார், நேர்முகப்பேட்டி, நாள் 2—4—84.
6. ஆர். பாலமுருகதாஸ், நேர்முகப்பேட்டி. நாள் 9-4-83.

மடிசார் புடவை கட்டிக் கொண்டு கதை சொல்வர். பெண்கள் மேடைக்கு வரும்பொழுது பட்டுச் சேலை அணிந்திருப்பது இயல்பாகும். விலை உயர்ந்த அணிகலன்களும் அணிந்திருப்பர்.

**கதை சொல்லும் முறை:-**

**காலம்-தொடக்கம்-நிறைவு.**

இ ர சி க த் தன்மையையும், கற்பனையையும் கலந்தே கதை சொல்வர். பேசும் வசனங்களைப் பாடும் சுருதியின் அளவிற்கே சொல்லுவர். குரலில் ஏற்றஇறக்கம் அமைந்திருக்கும். சொல்லும் பொழுது உணர்ச்சியோடு நடிப்பு ஆற்றலை வெளிப்படுத்தும் முகமாகச் செல்வர். இருபாத்திரம் பேசுவது போல் கதையில் வரும் பொழுது தான் ஒருவரே இரு பாத்திரமாக மாறிப் பேசுவர். மக்கள் புரிந்து கொள்ளும் அளவில் மொழியைப் பயன்படுத்துவர்.

இராமாயணக் கதையைக் கேட்டுக் கொண்டு இருந்த குலசேகர ஆழ்வார் பரதன் இராமனைத் தேடிப் படையோடு வந்திருக்கின்றான் என்று பாகவதர் கூறக்கேட்டதும் தன்னை மறந்து எழுந்து தன் படையினருக்குப் பரதன்மீது படையெடுக்கும்படி உத்தரவிட்டாராம். அப்படி நிகழ்ச்சிகளைக்கேட்பவர் உள்ளத்தில் பதிய வைக்கும் அளவிற்குச் சொல்ல வேண்டும், என்பதற்கு மேற்கண்ட நிகழ்ச்சியைச் சொல்வது மரபாகும். கண்ணனைப் பிரிந்து கோபியர்

வாடும் தன்மைம்யைக் கூறும் பாகவதர் தன்னைக் கோபியராகவும் எதிரே கண்ணன் இருப்பது போலவும் மெய்ப்பாட்டோடு கூறுவர்.

"கிழக்கே கௌளி சொன்னால்
கிழவியும் பாட்டியாவாள்
மேற்கே கௌளி செரன்னால்
மெலிந்தவன் ஒல்லியாவான்"[7]

என்ற பழமொழியின் மாற்று வடிவம் கேட்பவ்ருக்கு மகிழ்ச்சியைத் தரும் இடையிடையே கேட்பவருக்குச் சலிப்பூட்டாவண்ணம் பலவகையான இராகங்களைப் பாடுவர் நகர்ப்புறமானால் ராக ஆலாபனை பாடுவர். கிராமப்புறமானால் கிராமியப் பாடல்களைப் பாடுவர் முன்பு நடந்த கதையாக இருப்பினும், தன் முன்னே நடப்பது போல் கூறுவது கதாகாலட்சேப முறையாகும். இன்னிசை நிகழ்ச்சிகளில் இறுதியாகப் பாடப்படும் தில்லானாவை இக்கதை நிகழ்ச்சிகளில் முதலில் பாடுவர். இன்னிசை நிகழ்ச்சிகளில் மெதுவாகப் பாடலைத் தொடங்கி வேகமாகப் பாடி முடிப்பர். கதைகளில் வேகமாகத் தொடங்கி மெதுவாக முடிப்பர். எந்தப் பாடலைக் கதைக்காக முதலில் தொடங்கினாரோ அந்தப் பாடலைப் பாடிக் கதாகாலட்சேபத்தைமுடிப்பது மரபாகப்பின்பற்றப்பட்டது இம்முறையை மாற்றியவர்களும்உண்டு. வாரியாரின்

7. எம்பார் விஜயராகவாச்சாரியார் நேர்முகப்பேட்டி.
நாள்: 2-4-84.

கதைகளில் ‘ கைத்தலம் நிறைகனி’’...... என்ற விநாயக வணக்கத்தில் தொடங்கி,“குருவாய் .. ... குகனே’’ என்ற முருகன் வாழ்த்தோடு நிறைவு செய்வது கவனிக்கத்தக்கது. இவர் தொடங்கிய பாடலைப்பாடி கதையை நிறைவு செய்ய வேண்டும் என்ற மரபை மாற்றிப் புதுமை செய்தவர்.

**காலம்:**

தொடக்க காலத்தில் இரவு முழுவதும் இக்கலைநிகழ்ச்சி நடைபெற்றது. வேறு பொழுதுபோக்கு இல்லாத அக்காலத்தில் இக்கலைக்கு ஆதரவு அதிகமாக இருந்தது. கிருபானந்த வாரியாரின் தந்தை சிவத்திரு மல்லையாதாஸ் பாகவதர் எட்டு மணி நேரம் கதை சொல்லுவாராம்.[8]

தொடர் நிகழ்ச்சியாக இருக்குமேயானால் ஒவ்வொரு நாளும் இரண்டுமணி நேரம் நடைபெறும் இன்று இக்கலை இரண்டு மணி நேரத்திலிருந்து மூன்று மணி நேரம் வரையிலும் பெரும்பாலும் நடைபெற்று வருகிறது.

**தமிழகத்தில் இக்கலையின் அளவு:**

கதை சொல்லும் முறையில் ஏற்படும் எல்லா மாற்றங்களையும் மக்கள் ஏற்பதில்லை. பழைய

8. கிருபானந்த வாரியார், நேர்முகப் பேட்டி. நாள் 28-4-84

முறையை மாற்றிக் கதை சொன்ன தில்லையாடி பாண்டுரங்க பாகவதரும், தங்கவேல் செட்டியாரும் புகழடையாமல் போயினர். கிருபானந்த வாரியார், எம்பார் விஜயராகவாச்சாரியார் ஆகிய இருவரும் முறையை மாற்றி வெற்றி கண்டனர். தம்முடைய மதிநுட்பத்தைக் காட்டுவதற்காக முறைமாற்றினால் அது தோல்வியைத்தான் நல்கும். மக்கள் விருப்பத்திற்கேற்ப மாற்றத்தைச் செய்தால் வெற்றியை நல்கும். கதாகாலட்சேபப் பள்ளி மாணவர்களுக்குக் கொடுத்த குறிப்புரையில் "சாகி திண்டி ஓவி போன்ற பாடலமைப்பு கதையில் இல்லையானால் அது கதாகாலட்சேபமாகாது என்று விளக்கம் தரப்பட்டுள்ளது இக்கோணத்தில் தான் வாரியாரின் கதையைக் கதாகாலட்சேபம் இல்லை என்பர். இன்று பெரும்பாலும் சாகி, திண்டி, ஓவி போன்ற பாடல்கள் கதாகாலட்சேபங்களில் பாடப்படுவதில்லை. அதற்காக அது கதாகாலட்சேபம் இல்லை என்றாகிவிடுமா? என்ற கேள்வி சிந்திக்கத் தக்கதாகும். கிருபானந்த வாரியாரின் கதையமைப்பைத் தமிழகத்துப் புதிய கதாகாலட்சேபமுறையாகக் கருதலாம்.

**கதாகாலட்சேபத்தில் இடம் பெறும் இராகமும் தாளமும்:**

மராட்டிய கதாகாலட்சேபப் பாடல் வகைகள் அனைத்தும் தொடக்க காலத்தில் தமிழகத்துக் கதாகாலட்சேபங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டன. தமிழகத்திலுள்ள பாடல் வகைகளோடு அவை

போட்டியிட்முடியாமல் விடைபெற்றன. தமிழ்நாட்டில் சுலோகங்களையும், மந்திரங்களையும் சொல்ல 'பியாக்' இராகத்தைப் பயன்படுத்தினர் கானடா, எதுகுலகாம்போதி, தோடி, சங்கராபரணம், ஆகிய இராகங்களை கதாகாலட்சேபங்களில் அடிக்கடி பயன்படுத்துவர்.[9] கதை நடுவே இன்ப நிகழ்ச்சி-யைச் சொல்வதற்கு, மோகன ராகத்தையும், சோக நிகழ்ச்சியை சொல்ல, சுபபந்துவராளி அல்லது சிந்து பைரவி இராகத்தையும் வீரத்தின் பெருமை-யைச்சொல்ல, அடாணா இராகத்தையும் தாலாட்டுச் சொல்ல நீலாம்பரி இராகத்தையும் பயன்படுத்துவர்.

குறவஞ்சி, பள்ளு, கும்மி, தெம்மாங்கு, கூவடிச் சிந்து ஆகிய கிராமியப் பாடல்களையும் பயன்-படுத்துவது வழக்கிலுண்டு. கதையின் தொடக்கத்தில் கானடா' நாட்டை, தன்யாசி கௌளை, ஆரபி, வராலி, ஸ்ரீ ராகம் ஆகிய ரரகங்களையும் கதை முடிவில் சௌராட்ரா, சுருட்டி, மத்தியமாவதி ஆகிய ராகங்களையும் பயன்படுத்துவர். தமிழ்நாட்டில் இக் கலையை மேற்கொண்டவர்கள்: துளசிதாசர், ஜய-தேவர், சமர்த்த இராமதாசர், கபீர்தாஸ், துக்காராம், பத்ராசலராமதாசர், சேசத்ரஞ்கர், தியாகையர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி ஆகியோரின் பாடல்களைப் பாடுவதோடு அருணாசல கவிராயர், கோபாலகிருஷ்ணபாரதியார், இராமலிங்கஅடிகளார்,

---

9. ஜி. இராமமூர்த்தி பாகவதர் நேர்முகப் பேட்டி,
நாள் : 6—5—84.

ஆனந்தபாரதி, கவிகுஞ்சரபாரதி, மழவை சிதம்பர பாகவதர் ஆகியோர் இயற்றிய பாடல்களையும் பாடுவர்.

கதாகாலட்சேபத்தில் ஆதிதாளம், ரூபகதாளம், மிசுரசாப்புத் தாளம், செம்பை தாளம், அட தாளம், உசி தாளம் ஆகியவற்றையே பயன்படுத்துவர். பெரியோர்கள் இயற்றிய பாடல்கள் பெரும்பாலும் மேற்கண்ட தாள வகைகளில் அடங்குவதால் அப்படியே பின்பற்றிப்பாடி வருகின்றனர். இன்றும் இதே தாளங்கள் தான் கதாகாலட்சேபத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தியாகையர் தனது பாடல்களைப் பெரும்பாலும் ஆதிதாளத்திலேயே அமைத்துள்ளது குறிப்பிடத் தக்கது. கிருபானந்த வாரியார் தம் கதைகளில் மேற்கண்ட தாளங்கள் மட்டுமன்றி, திர திரிபுடை, கண்டதிரிபுடை ஆகிய தாளங்களையும் பயன்படுத்துகின்றார்.

இக்கலையில் பயன்படுத்தும் உத்திகள்:

ஒரு கலையை வெற்றிகரமாக செயல்படுத்த வேண்டுமேயானால் சில நுணுக்கங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும் அந்நுணுக்கங்களை உத்தி என்று அழைப்பர். கதாகாலட்சேபக் கலையில் ஒவ்வொரு பாகவதரும் ஒவ்வொரு விதமான உத்தியைக் கையாளுவர் இலக்கணம், சோதிடம், மருத்துவம், உலகியல், நடப்பியல் ஆகியவற்றைச் சொல்லுவது ஒருவகை உத்தியாகும். ஆங்கிலப்

பழமொழகளைக் கூடச் சில பாகவதர்கள் உத்தியாக கையாளுவர். நீண்டதொரு பாடலைச் சொல்லுவது சிறந்த உத்தியாகும். கடினமான சந்தங்களைக் கொண்ட, திருப்புகழை வாரியார் சொல்லும்பொழுது கேட்போர் வியப்பர். நாகரிகமான நகைச்சுவை ஒருவகை உத்தியாகும். ஏற்ற, இறக்கம் கொடுத்து பேசுவது ஒரு உத்தியாகும். அரியகருத்தை எளிமைப் படுத்திச் சொல்லுவதும், சிறிய கதைகளை எடுத்-துக்காட்டுக்குப் பயன்படுத்துவதும் கதையில் வரும் பாத்திரம் அழுவதாக வந்தால் தான் அழுதலும், சிரிப்பதாக இருந்தால் தான் சிரிப்பதும், வயதான கிழவி பேசுவது போல் வரும் பொழுது குரலை மாற்றி நடுக்கத்தோடு பேசுவதும் உத்திகளாகும். இராமகிருஷ்ண பரமஹம்சர் சிறிய கதைகளின் மூலமாகவே இறைத்தன்மையை உணர்த்தி இருக்-கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. கதையின் நடுவே சபையோரைப்பார்த்துக் கேள்விகள் கேட்பது சிறந்த உத்தியாகக் கருதப்படுகின்றது. கிருபானந்த வாரியார் கதையின் நடுவே சிறு,சிறு கேள்விகளைக் கேட்டுச் சரியான விடையைச் சொல்கின்ற சிறுவர், சிறுமியர்களுக்குப் பரிசுகளை வழங்கி ஊக்குவிப்பார் இது வாரியார் மேற்கொண்ட உத்திகளுள் சிறந்-ததாகும். இவருடைய கதைகளுக்குச் சிறுவர், சிறுமியர் அதிகமாக வருவதற்கு இதுவே காரணம்.

**பின்பாட்டுக்காரர்:**

தொடக்க காலத்தில் மிருதங்கம் ஒன்றையே பக்கவாத்தியமாக வைத்துக் கதை செய்யப்பட்டது.

இராக ஆலாபனைக்குப் பின்பாட்டுக்காரர் பயன்பட்டார். பாகவதர் பாடலின் முதலடியை எடுத்துப் பாட, பின்பாட்டுக்காரர் அந்த அடியிலிருந்து பாகவதரின் கதை சொல்லும் அமைப்பிற்கு ஒப்பக்கூட்டியோ,குறைத்தோ பாடுவார். பின்பாட்டுக்காரர் பாடும் பொழுது சிப்ளாக் கட்டையால் தாளத்தைப் பாகவதர் போடுவார் கதையின் தொடர்ச்சி,கெடாமல் பாகவதர் கதை சொல்வதற்குப் பின்பாட்டுக்காரர் பயன்பட்டார்.பாகவதரின் பொருளாதாரத்தன்மைக்கேற்ப ஒருவரோ, இருவரோ பின்பாட்டுக்காரராக அமைவதுண்டு. இன்று சிலர் பின்பாட்டுக்காரர் இன்றியே கதை சொல்வதைக் காணலாம். வாரியாரும், எம்பார் விஜயராகவாச்சாரியாரும் சுழலுக்கு ஏற்பப் பின்பாட்டுக்காரரை வைத்தும், வைக்காமலும் கதை சொல்லி வருகின்றனர்.

குருகுல பாரம்பரியத்தில் வளர்ந்த இக்கதாகாலட்சேபக் கலையில் பின்பாட்டுப் பாடுபவர்கள் பாகவதரின்சீடராகவோ,உறவினராகவோ இருத்தல் உண்டு. நாளடைவில் பின்பாட்டுக்காரர் தம் அனுபவத்தால் கதை சொல்ல ஆரம்பித்து விடுவார். அதனைத் தலைமை பாகவதரும் அனுமதிப்பதுண்டு கதை நடுவே இசையுணர்வை எழுப்பும் கடமை பின்பாட்டுக்காரருடையதுஆகும்.தஞ்சைஸ்ரீகிருஷ்ண பாகவதருக்கும், முக்கிய சீடரான பஞ்சாபிகேச பாகவதர், ஸ்ரீ கிருஷ்ண பாகவதரின் இறுதிக்காலம் வரை பின்பாட்டுக்காரராக விளங்கியுள்ளார். ஸ்ரீகிருஷ்ண பாகவதருக்கு, துரைசாமி பத்தரும்

பின்பாட்டுக் காரரர்க விளங்கியுள்ளார். பாகவதரை விட, சங்கீத ஞானமும், நினைவாற்றலும் இருந்தால் தான் சிறந்த பின்பாட்டுக்காரர் என்னும் பெயர் பெற இயலும். கதையின் வெற்றிக்கும், பாகவதரின் புகழுக்கும் காரணமாக அமைவது பின்பாட்டு. இக்கலையைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்த பெருமைக்குரிய மேதையான மூர்கூர் இராமச்சந்திர பாவாவின் கதைகளில் இவர் மகன் விஷ்ணு பாவா என்பவர் பின்பாட்டுக்காரராக இருந்துள்ளார். மூர்கூர் இராமச்சந்திர பாகவதர் மறைந்த பிறகு விஷ்ணு பாவா கதை செய்ய ஆரம்பித்தார், உ.வே சாமிநாத அய்யரும், உ.வே.சா.-வின் சிறிய தந்தையாரும், உ.வே.சா. தந்தையாரின் இராமாயணக் கதை-களுக்குப் பின்பாட்டுக்காரர்களாக இருந்துள்ளனர்[10]. என் சரித்திரம் என்னும் நூலில் உ.வே. சாமிநாத அய்யரின் இக்கூற்று நினைக்கத் தக்கதாகும். தஞ்சை டி.என். சுப்பிரமணிய பாகவதருக்கு அவருடைய இரு சகோதரர்களும் இரு பின்பாட்டுக்காரர்களாக விளங்கினர். நீடாமங்கலம் கிருஷ்ணமூர்த்தி பாகவதர் கதைகளில் இவரின் மூத்த மருமகளே பின்பாட்டுக் காரராக விளங்கியுள்ளார். வாரியாரின் தந்தை மல்லையதாஸ் பாகவதரின் கதைகளில் வாரியாரே பின்பாட்டுப் பாடியிருக்கின்றார்.[11] சிறந்த பாக-வதராக விளங்க வேண்டுமானால் சிறந்த பின்பாட்-டுக்காரராக விளங்கி இருத்தல் வேண்டும். இளம்

---

10. ஆனந்த விகடன் 20 : 94.

11. கிருபானந்த வாரியார், திருமுருக கிருபானந்த வாரியார் வாழ்க்கை வரலாறு. பக்.: 218.

பெண்கள் செய்யும் கதாகாலட்சேபங்களில் அவர்களின் தாயோ, அல்லது தமக்கையோ பின்பாட்டுக் காரராக அமைவதுண்டு. சிறுபான்மை ஒரு குடும்பத்திலுள்ள அனைவரும் இக்கலையில் ஈடுபடுவது வழக்கமாகும். பொருளாதார நிலையைக் கட்டுப்படுத்த இம்முறையை அமைத்துக் கொள்வர். இதற்காகவே தம் பெண்களுக்கு மிருதங்கபயிற்சியும் வயலின் பயிற்சியும் பெற்றுக்கொள்ளச்செய்வர். சில இடங்களில் மிருதங்கம் வாசிக்கும் பெண்கூட கதாகாலட்சேபக்கலையில் தேர்ச்சி பெற்றவராய்த் திகழ்வதுண்டு.

பிற்காலத்து, வய்லின் அல்லது ஆர்மோனியம் பக்கவாத்தியமாக அமைந்து பின்பாட்டுக்காரர்கள் செய்யும் ராக ஆலாபனையை இவ்வாத்தியக்காரரே செய்து விடுவதால் பின்பாட்டு அவசியம் இல்லாது போய்விட்டது, பின்பாட்டுக்காரர் கதை சொல்லும் பாகவதருக்கு உறவாக இருப்பதால் அந்தரங்கக் காரியதரிசியாகவும் செயல்படுவர். கதைக்குரிய தொகையையும், கதைக்குரிய நாளையும் இவரே தீர்மானிப்பார் ஒரு ஊரிலிருந்து ஒரு ஊருக்குச் செல்லும் பயணஅமைப்புக்களை இவரே கவனிப்பார் உறவாக இல்லாத போதும் இன்றும் வாரியார் நிகழ்ச்சிகளில் பக்கவாத்தியக்காரராக இருக்கும் திரு. இராசேந்திரன் என்பவர் வாரியார் பேசிக்கொண்டே இருக்கும் பொழுது அவர் சொல்லும் அரிய கருத்துக்களைத் தாங்கியிருக்கும் புத்தகப் பகுதியை உடனே எடுத்துத் தருவார். வாரியாருக்கே

சில செய்திகளை நினைவு படுத்துவார். வாரியார் எழுதிய புத்தகங்களைப் பக்கவாத்தியக்கர்ரர் ஊன்றிப்படிந்திருக்கும் தன்மையினை, இச்செயல் எடுத்துக் காட்டுகின்றது.

**இக்கலையைப் பற்றிய நூல்கள்:**

இக்கலை குருகுல முறையில் வளர்வதால் நூலின் செய்திகளை விட செவிவழிச் செய்திகளே அதிகமாக காணப்படுகின்றன. டி.எஸ். சிதம்பர பாகவதர் அவர்கள் "காலக்ஷேபம் என்ற வியாஸம்" என்ற முதல் தமிழ் நூலை 1928-ஆம் ஆண்டு வெளியிட்டார். இக்கலையைப் பற்றிப்பிறர் அறிந்து கொள்ளும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. மராட்டிய நாட்டில் கீர்த்தனமாலா, அரிகீர்த்தன், இரத்னமர்லா ஆகிய நூல்கள் காணப்படுகின்றன.

இசை மாநாட்டு மலர், நாடக மாநாட்டு மலர், கலைவிழா மலர், நூற்றாண்டு விழாமலர் ஆகிய சிறப்பு வெளியீடுகளில் பாகவதர்களால் எழுதப்பட்டுள்ள கட்டுரைகள் இக்கலையைப்பற்றி அறிய வகை செய்கின்றன. ஹரிகதையைப் பற்றிய வானொலி பேச்சுக்களும், பாகவதர்களின் பேட்டிகளும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் இக்கலையைப் பற்றிய செய்திகளை நமக்குத் தருகின்றன. குருகுலமுறையின்றி நினைவாற்றலும், படிப்பறிவும் மிக்கவர்கள் தாமே கதாகாலட்சேபம் செய்யும் அளவிற்குச் சில தனியார் புத்தக நிறுவனங்கள்

அச்சடித்துப்புத்தகங்களை வெளியிட்டுஇருக்கின்றன "ஹரிஹர ரத்னாவ்ளி" என்னும் மாத இதழ் மாதம் ஒரு கதையைக் குறைந்த விலையில் கதை, பாடல், ராகம், தாளம் ஆகிய குறிப்புகளோடு வெளியிட்டு வந்தது,

பாகவதர்கள் தம்முடைய மாணவ மாணவியருக்குக் கற்றுத்தரும் பொழுது காலத்திற்கேற்றபடி பாரதியார்,பாபநாசம்சிவன், ஆகியோரின் கீர்த்தனை பாடல்களை இணைத்து அமைத்து தருகின்றனர். முதிர்ச்சி பெற்ற ஒவ்வொரு பாகவதரும் ஒரு புத்தகமாகவே காட்சி தருகின்றனர். "வள்ளித்திருமணம்" என்ற கதையமைப்பை வாரியார் சொல்வது ஒருவகையாகவும், எம்பார் விஜயராகவாச்சாரியார் சொல்வது ஒருவகையாகவும், திரு. பாலகிருஷ்ண சாஸ்திரி சொல்வது ஒருவகையாகவும் இருப்பது கவனிக்கத்தக்கது.

நாடு மகிழ்ச்சியாக இருப்பதன் தன்மையை வெளிக்காட்டுவது திருவிழாக்கள். கலையை வளர்த்துக் களிப்படைவது தான் திருவிழாக்களின் முக்கிய நோக்கமாகும். கிராமங்களில் கோடை நாட்களில்தான் திருவிழாக்களை வைத்தனர். வயல் வேலைகள் செய்து செயலிழந்த மனத்திற்கு ஊக்கம் தரவே திருவிழா நடைபெற்றது. ஓய்வுப்பொழுதினை இறை சிந்தனையோடு கழித்தல் வேண்டும் என்ற நோக்கத்தில் எழுந்த இக்கதாகாலட்சேபக்கலை

திருவிழாக்காலங்களிலே நடைபெறுவது கவனிக்கத்-தக்கது கலையின் வடிவம்தான் நாட்டுக்கு நாடு வேறுபடும். கலை உணர்வு என்பது எல்லா மனி-தருக்கும் ஒரே அமைப்பில் இருப்பது இயல்பாகும் ஒரு நாட்டுக்கலை இன்னொரு நாட்டுக் கலையோடு இணைகிறது என்றால், இரு கலைகளின் அடிப்-படைக் கூறுகள் ஒன்றாக இருத்தல் வேண்டும். மராட்டிய மாநிலக்கலையான, இக்கதாகாலட்சேபம் தமிழகத்தில் வந்து சிறப்புப் பெற்றது என்றால் அக்கலையின் கூறுகள் தமிழ் நாட்டுக் கலைக்கூறு-களோடு இணைந்தவை என்றே பொருளாகும். கதாகாலட்சேபக் கலைகளின் அடிப்படைக் கூறுகள் தமிழ்நாட்டு நாட்டுபுறக் கலைகளில் பொருந்தி-யிருக்கும் தன்மையினை உணர்தல் அவசியமாகும்.

இயல்-5

# தமிழக நாட்டுப்புறக் கலைகளில் கதாகாலட்சேபக்கலையின் அடிப்படைக் கூறுகள்

ஒரு நாட்டின் பழைய பண்பாட்டைத் தாங்கி நிற்பது அந்நாட்டின் கிராமங்களேயாகும். நகர்ப்-புறங்கள் நாகரிகத்தின் பிடியில் சிக்கி அவதியுறும் நேரத்தில் கிராம மக்கள் பழைய நாகரிகத்தில்

மகிழ்ச்சி அடைவதைக் காணலாம். தமிழகத்துக் கிராமியக் கலைகளில் இசை முதலிடம் பெறுகின்றது. கதாகாலட்சேபக்கலையும் இசையை முதன்மையாகப் பெற்று விளங்குகின்றது. தமிழகத்து வீடு, வயல்களில் தான் குறவஞ்சி, கும்மி, நொண்டிச்சிந்து, காவடிச் சிந்து ஆகிய இசைப்பாடல்வகைகள் பிறந்துள்ளன.

## நாட்டுப்புறக்கலையின் பாகுபாடு

அன்பு என்ற சொல் தமிழுக்கு உரிமையானது போல அதன் குணமும் தமிழருக்கே சிறப்பாக உரியது. பத்மபுராணம் வடமொழிப் புராணங்களில் ஒன்று. அப்புராணத்தில், மூன்று பெண்கள் துவாரகைக்குப் பயணம் செய்கின்றனர். வழியில் நாரதர் அவர்களைச் சந்தித்தார். நீங்கள் யார்? என்று வினவினார். அவர்களில் ஒருத்தி நாங்கள் இருப்பது திராவிட தேசம், என் பெயர் பக்தி, இவர்கள் என் மக்கள். ஒருத்தியின் பெயர் ஞானம், மற்றொருத்தியின் பெயர் வைராக்யம் என்றாள். இதைக்கேட்ட நாரதர் நீ தாயா! இவர்கள் உன் மக்களா? உன்னை விட வயதான தோற்றத்தோடு இருக்கின்றார்களே! என்றாராம். இதில் என்ன தெரிகின்றது? பக்தி என்ற குணத்தின் பிறப்பிடம் தமிழகம் என்று தெரிகின்றது.[1] பக்தியை மையமாகக்கொண்ட இக்கலை தமிழகக் கலையோடு சேர்ந்தது பொருத்தமே.

---

1. ச. தண்டபாணி தேசிகர், 'பக்திமொழி தமிழ்', மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர். பக். 15.

ஒரு நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தின் முக்கியக்கூறுகளை அந்நாட்டில் வழங்கும் நாட்டுப்புறப்பாடல்களில் காணலாம். இக்கதாகாலட்சேபக்கலை இசையை மையமாகக் கொண்டது. தமிழ் நாட்டு நாட்டுப்புறப்பாடல்களின் அடிப்படை, இசையில்தான் அடங்கி இருக்கிறது. தமிழன் பிறப்பு முதல் இறப்பு வரை பாட்டின் ஓசையைக் கேட்டு வளர்ந்தவன். தாலாட்டு முதல் ஒப்பாரி வரை மனித வாழ்வைக் கண்டான். நாட்டுப்புறப்பாடல்களில் புன்னாகவராளி, நாதநாமக்கிரியா, ஆனந்தபைரவி, செஞ்சுருட்டி, குறிஞ்சி, நௌரோஜ், நீலாம்பரி ராகங்களும் ஆதி, ரூபகம், சாப்பு ஆகிய தாளங்களும் இணைந்திருக்கும். ஒருவர் பாட மற்றவர் அதனைத் தொடரும் அமைப்பிலேயே பாடல்கள் அமைந்து இருக்கும். இக்கூறு கதாகாலட்சேபத்தில் இருப்பதை நினைத்தல் வேண்டும். கதையைப் பாடலாகச் சொல்வதே கதாகாலட்சேபக்கலை, தமிழகக் கலைகளில் கதைப்பாடல் என்னும் அமைப்பும் உள்ளது, சாதாரண மனிதனைப் பற்றிப் பாடாமல் சாதனை மனிதனைப் பற்றியே கதைப்பாடல்கள் தோன்றின. வசனமில்லாது பாடலாகவே அமைவது கதைப் பாடலாகும்.

தமிழக நாட்டுப்புறக் கலைகளை, தொன்மைக் கலை, நாட்டுப்புறக்கலை, திருந்திய கலை என்று மூன்று வகையாகப் பிரிப்பர்.[2] எல்லாக் கலைகளும்

2. ஏ.என். பெருமாள், தமிழக நாட்டுப்புறக்கலைகள் பக்.6

ஆட்டத்தையும், பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றன. ஒருவர் இயற்றும் கலை பலர் இயற்றும் கலை என்றும் பாகுபடுத்தப்படும்[3]. மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், இன்னிசைச் சொற்பொலிவு (இசையுடன் கதை கூறுதல் —இதனையே கதாகாலட்சேபமென்பர்) வில்லுப்பாட்டு, தேவராட்டம், நாட்டார் நாடகம், (தெருக் கூத்து) உடுக்கடிப்பாட்டு ஆகிய கலைகள் குழுக்கள் நடத்தும் கலைகளாகும்.

கலைகள் நடத்தப்படும் காலம், சூழல் ஆகியவற்றைக் கொண்டு சமூகச் சார்புக் கலைகள், சமயச் சார்புக் கலைகள், போரியல் கலைகள் என்று பாகுபடுத்துவர்.[4] சமயச் சார்புக்கலைத் தொகுதியும் கதாகாலட்சேபக்கலையை அடக்கலாம்.

சமயச்சார்புக்கலைகள்

↓

வழிபாட்டுக்கலைகள் | தொன்ம விளக்கக்கலைகள்

**தொன்ம விளக்கக்கலைகள்:**


பழைமையை விளக்கும் கலைக்குத் தொன்ம விளக்கக் கலைகள் என்று பெயர். நாட்டுப்புற

3. மே.நா. பக்.: 19.
4. மே.நா பக்.: 20.

மக்கள் பல தெய்வங்களை வணங்குபவர்கள். ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒரு கதை உண்டு. இதிகாச நிகழ்ச்சிகளைக் கலையின் வாயிலாகவே மக்கள் கேட்க விரும்புவர். ஆடல்,பாடல் மூலமாகவே இச்செயல்கள் மக்களுக்குத் தரப்பட்டன. முன் வரலாற்றை அறியும் ஆர்வமும், பெரும் நம்பிக்கையும், இறை வரலாற்றைப் புனிதமாகக் கருதும் பண்பும், இசைப்பற்றும், நுட்பமான ஆய்வுக்கு இடம் கொடாத தன்மையும், நாட்டுப்புற மக்களிடையே இருப்பதால் தொன்ம விளக்கக் கலைகள் இன்றும் வாழ்கின்றன.[5] கதாகாலட்சேபக் கலையைத் தொன்மவிளக்கக் கலையாகக் கருத வேண்டும். பழமையான தெய்வக் கதைகளை விளக்கும் நோக்குடைய நாட்டுப்புறக் கலைகள் தமிழ்நாட்டில் நெடுங்காலமாக வளர்ந்து வந்துள்ளன. வழிவழியாக மக்களிடம் வழங்கி வரும் கலைகளை மக்கள் விரும்புவது இயல்பாகும். வாய்மொழியாகக் கேட்பதைவிட இசையாகவோ, கூத்தாகவோ, கதை மெருகேற்றப்படுவதை மக்கள் விரும்பினர். இதன் மூலமாக ஒரே கதையைப் பல கலைகளின் மூலமாகச் சுவைக்க வாய்ப்பு நேருகின்றது. இதிகாச நாயகர்களை மக்கள் தெய்வங்களாக மதித்துப் போற்றுவர். நாட்டுபுறக்கலைகளின் அமைப்புகளைக் கீழ்காணும் வரைபடத்தின் மூலமாகக் காணலாம்.

---

5. மே.நூ. பக்.: 29.



நாட்டுப்புறக்கலைகள்
சமூகம்
சமயம்
வாழ்க்கைப்பருவம்
தொழில்
போர்
சீரமைப்பு
வழிபாடு
தெய்வமேறல்
நோயகற்றல்
தொன்மம்
குறிசொல்லல்
மனித உருவம்
விலங்குருவம்
பூதஉருவம்
தடுப்பு
தீர்ப்பு
இதிகாசபுராணம்
தெய்வக்கதை
முன்னோர்வரலாறு[6].


6., மே.நூ பக்.: 82.

வீர வரலாற்றை மக்கள் விளக்கமாகக் கேட்க ஆர்வம் கொள்வது இயற்கையாகும். கோவில் விழாக்களில் இதிகாச புராணங்களை, ஒருவர் படிக்கவும், ஒருவர்விளக்கவும் கேட்டுஇன்புற்றனர்[7]. இதனை, ''பாரதம் வாசித்தல்'' அல்லது ''பாரதம் படித்தல்'' என்பர். இன்றும் பாடுவதை படித்தல் என்று சொல்லும் வழக்கு உண்டு. இந்நிலையே பல வடிவில் மாறி, மராட்டியக் கலையோடு சேர்ந்து கதாகாலட்சேபக் கலையாகப் பிற்காலத்தில் வளர்ந்தது. இன்றும் பாகவதரை விட பின்பாட்டுக் காரரே அதிகம் பாடுவார். ஒருவர் படிக்க, ஒருவர் விளக்கம் தந்த பழைய நிலையை நினைவுபடுத்-துவதை நோக்குதல் வேண்டும். தென் ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய ஊர்களில் திரௌபதி அம்மன், தருமராசர் ஆகியோர் கோவில்களில் பாரதக்கதை படித்தல் இன்றும் நடைபெறுகின்றது பாரதம் படிப்பது என்று சொன்னாலும் வசனத்தைக் கூட இசை போலவே சொல்வர். பதினெட்டு நாட்கள் மாலையில் இக்கதை படித்தல் நடைபெறும். கதை படிப்பவர் நோன்பு நோற்றுக் கதை முடியும் வரை தம் இல்லம் செல்லாமல் கோவிலிலேயே தங்குவார் தஞ்சை, திருச்சி ஆகிய ஊர்களில் இராமாயணமும் படிப்பதுண்டு.

வாழ்வுக்குவழிகாட்டும் மாந்தர்களாக இதிகாசப் பாத்திரங்களைக் கருதியதோடு, தங்களுக்கு அருள் பாலிக்கும் தெய்வங்களாகவே கிராமமக்கள் நம்பினர்

---

7. மே.நூ. பக் : 127.

இதன் வளர்ச்சியே அருணாசலக் கவிராயரின் இராம நாடகமாகவும், கோபாலகிருஷ்ண பாரதியின் நந்தனார் சரித்திரமாகவும் வடிவு பெற்றது.[8] கதை படிப்பவர்கள் சுருதிப் பெட்டி இன்றி ஒரே தோற்கருவியை (பம்பை) மட்டுமே பக்கவாத்தியமாக அமைத்துக் கொள்வர். கதாகாலட்சேபத்தில், தோற்கருவியான மிருதங்கம் அமைவது பழைய மரபு என்பதுசிந்திக்கத்தக்கது. பாரதம் படிப்பவர்களையும் பாகவதர்கள் என்றே அழைத்தனர் இப்பாகவதர்கள் விசேட ஆடை அணிவதில்லை. சட்டை இல்லாமல இருப்பதே மரபு. ஒரு சில இடங்களில் முப்பது நாள் முதல் நாற்பத்தெட்டு நாள் வரை இக்கதை நடைபெறுவதுண்டு சட்டத்தால் மக்களைத்திருத்துவதை விட சமயத்தால் திருத்த முடியுமென்று பண்டைய மன்னர்கள் நம்பினர். தமிழகக் கோவில்களில் இதிகாச புராணம் படிப்பவர்கள் அரசனிடம் நிதியும் பெற்றிருக்கிறார்கள் என்று 'பரமேஸ்வரன் கூரம் செப்பேடு'கூறுவதுநினைக்கத்தக்கது.[9] திருவையாறு தியாகபிரும்மம் நாட்டுப்புறச்சந்தங்களைத் தம் பாடல்களில் பயன்படுத்தியுள்ளார் என்பதால் நாட்டுப்புறப் பாடல்களின் திறம் உணர முடிகின்றது. குறவஞ்சி, கும்மி, நொண்டிச்சிந்து போன்ற நாட்டுப்புற இலக்கியங்கள் இன்றைய கதாகாலட்சேபங்களில் நிரம்பிக் கிடப்பதைக் காண்கின்றோம். மனித உணர்ச்சிகள் எல்லாவற்றையும் நாட்டுப்புறப்பாடல்கள் எதிரொலிப்பதால் கேட்பவருக்குச்

8. மே நூ பக்.: 129.
9. கல்வெட்டு ஓர் அறிமுகம்: (தொகுப்பு: நடனகாசிநாதன் கு. தாமோதரன்) பக் : 4.

சுவையைக் கூட்டும்.[10] தமிழகக் கோவில்களில் இதிகாச புராணங்களைப்படித்து விளக்குவதற்காகப் படன மண்டபம் அமைக்கப்பட்டிருப்பது சிந்திக்கத் தக்கது.[11]

**வில்லுப்பாட்டு:**

கதாகாலட்சேபத்தின் அடிப்படைக் கூறுகள் முழுமையாக வில்லுப்பாட்டில் காணக்கிடக்கின்றன. பழந்தமிழரின் வீர்வழிபாட்டு மரபில்வந்த இக்கலையில் ஒரு பகுதியை ஒருவர் பாட மற்றவர் தொடர்ந்து பாடுவர். குறைந்தது ஐவர் இக்கலையில் பங்கு பெறுவர். கதாகாலட்சேபக்கலையிலும் ஐவர் இடம் பெறுவது கவனிக்கத்தக்கது. தெய்வமான வீரர்களைப் பற்றியே கதைப்பொருள் அமையும். இரவு முழுதும் நடைபெறும் இக்கலை கி.பி.16-ஆம் 17-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டது.[12] இக்கலையில் கிளைமொழியும், பழமொழியும் கலந்து இருக்கும். கோவில் திருவிழாக்களை ஒட்டியே இக்கலை நடைபெற்று வந்தது. இன்று அரசாங்கப் பொது நிகழ்ச்சிகளில் முக்கியமான தலைவர்களின் சிறப்புகளை வில்லுப்பாட்டாக நடத்துகின்றனர். கரந்தைத் தமிழ்ச் சங்க நூற்றாண்டு விழாவை

---

10. ர. அய்யாசாமி, 'நாட்டுப்புறப்பாடல்களும் நடனங்களும் தமிழிசைச் சங்க ஆண்டுமலர், பக்.: 91.
11. ந.ரா முருகவேள் 'தமிழகத்திருக்கோயில்கள்' மூன்றாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர், பக்.: 10.
12. சி கோமதிநாயகம் 'வில்லுப்பாட்டு' பக் : 16.

1984 இல் தமிழக அரசு ஏற்று நடத்திய, பொழுது இத்தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்த தமிழவேள் த. வே. உமாமகேஸ்வரன் பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்றை கலைமாமணி திரு. சுப்பு ஆறுமுகம் வில்லுப்பாட்டு மூலம் நடத்தினார் என்பது கவனிக்கத்தக்கது. இக்கலையின் பிறப்பிடம் திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய ஊர்களாகும். எளிய சந்தம் கலந்த பாடலையே இக்கலைக்குப் பயன்படுத்துவர். நையாண்டி, சிந்துவகை,கிளிக்கண்ணி, கும்மி,தெம்மாங்கு, உலக்கைப் பாட்டு, ஒப்பாரி பாட்டு ஆகிய பாடல் வகையைப் பயன்படுத்துவர். இக்கலை மட்டுமன்றி உடுக்கடிப்பாட்டு என்றகலையும் தமிழகத்தில் இருந்திருக்கின்றது,பாடுபவரே 'உடுக்கு' என்னும் இசைக்கருவியை இசைத்துப் பாடுவார். வில்லுப்பாட்டுக்கலையில் தொடக்கம் காப்புப் பாட்டில் ஆரம்பித்து குருவணக்கம்,அவையடக்கம், நாட்டுவளம், கதைக்குரிய பாடல், மங்கள வாழ்த்து என்ற அமைப்பிலே நடைபெறுகின்றது. இக்கலைக்கு நகர்ப்புறங்களைக் காட்டிலும் கிராமப்புறங்களில்தான் அதிக வரவேற்பு கிடைக்கின்றது. வில்லுப்பாட்டுக்கலையில் பெண்களையும் பங்கு பெறச் செய்வதுண்டு. கதாகாலட்சேபக்கலையில் ஆணும், பெண்ணும், சேர்ந்து பங்கு பெறுவதில்லை. ஐயன் கதை, வள்ளியம்மன் கதை, இரண்யன் கதை, கிருஷ்ணசாமி கதை, பார்வதி அம்மன் கதை, சீதா கல்யாணம் மதனகாமராசன் கதை ஆகியதலைப்புகள் இதிகாசத்தொடர்புடையன சுடலைமாடன், இசக்கியம்மன் கதை ஆகியவை கொடுந் தெய்வக்கதைக்குரிய தலைப்புக்களாகும்,

முத்துப்பட்டன் கதை, தடிவீரன் கதை ஆகியவை சமுதாயப்பாங்கான கதைத் தலைப்புக்களாகும். ஐவர் ராஜாக்கள் கதை, ராஜா தேசிங்கு கதை, கட்டபொம்மன் கதை ஆகியவை வரலாற்று வீரர் கதைத் தலைப்புகளாகும். வில்லுப்பாட்டும், கதாகாலட்சேபக்கலையும் ஒரே அடிப்படையில் இயங்குமாயினும், வில்லுப்பாட்டுக் கலையை நடத்துபவர்களைக் கலைஞர்களாகவே மக்கள் கருதினர். கதாகாலட்சேபம் செய்யும் பாகவதர்களைத் தெய்வநிலை பெற்றவராக மக்கள் நினைப்பது சிந்திக்கத்தக்கது. சைவத்தையும் வைணவத்தையும் இணைக்கும் பாலமாக இக்கலை விளங்குகின்றது. திருமாலின் நினைவாக 'வில்லும்' சிவனின் நினைவாக 'உடுக்கை'யும் இக்கலையில் பயன்படுகின்றது என்று வில்லுப்பாட்டுக் கலைஞர் திரு. சுப்பு ஆறுமுகம் கூறுவது நினைக்கத் தக்கது.[13] வில்லுப்பாட்டின் மாற்று அமைப்பைக் "கலை நிகழ்ச்சி" என்று அழைப்பர். அரசியல் பொதுக்கூட்டம் முடிந்ததும் இந்நிகழ்ச்சியை அமைப்பர். இதில் பாட்டும், வசனமும் முக்கிய இடம் பெறுகின்றன. தம்கட்சியின் மேன்மையையும், மாற்றுக் கட்சிகளின் குறைபாடுகளையும் சொல்வதற்கு இந்நிகழ்ச்சி அமைக்கப்பட்டது. பல தலைவர்கள் போல் ஒருவரே பேசுவது இக்கலையின் சிறந்த உத்தியாகும். பெண் பாடகியோடு இரு குரலிசை பாடுவது இக்கலையின்

---

13 ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டு மலர். 'வில்லுப்பாட்டு' பக்: 396.

சிறப்புச் செயலாகும். அரசியல் கொள்கைகளைப் பரப்புவதற்கு இக்கலை பயன்படுகின்றது. இதிகாச புராணங்களை மக்களிடையே பரப்புவதற்காகக் கதாகாலட்சேபக்கலை தோன்றியது என்பதைத் நினைவில் கொள்ள வேண்டும்.

**நாட்டிய நாடகம்:**

கதாகாலட்சேபக்கலையின் அடிப்படைக்கூறுகள் தமிழகத்து, நாட்டிய நாடகங்களில்காணப்படுகின்றன கி.பி. 1725 இல் தோன்றிய குற்றாலக்குறவஞ்சியும் 1734 இல் தோன்றிய கும்பேசர்குறவஞ்சியும் சிறந்த நாட்டிய நாடகங்களாகும். நாட்டிய நாடகங்கள் அபிநயம், ஆட்டம், பாட்டு, வசனம் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகின்றன. சில நாடகங்களில் வசனமின்றிப் பாட்டாகவே உரையாடல்கள் அமைந்திருக்கும். கதாகாலட்சேபக்கலையில் அபி-நயமும், ஆட்டமும், பாட்டும், வசனமும் கலந்திருப்பது நினைக்கத்தக்கது. தமிழகத்து நாட்டிய நாடகங்கள் இதிகாச புராணக்கதைகளை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றன.

கி.பி. 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டில் இக்கலை மிலட்டூர் வெங்கட்ராம சாஸ்திரிகளால் 'பாகவத-மேளா'' என்று தெலுங்கில் புதுப்பிக்கப்பட்டு மீண்டும் நடத்தப்பட்டது. சரபோஜி மன்னன் வடுவூருக்கு அருகே, ''பாகவதமேளா'' என்னும் ஊரை நாட்டிய

நாடகக்கலைஞர்களுக்கு முற்றூட்டாக வழங்கியுள்ளான்.[14] இந்நாட்டிய நாடகங்கள் சாலியமங்கலம், நீடாமங்கலம், தேப்பெருமாள்நல்லூர், சூலமங்கலம், ஒரத்தநாடு, ஊத்துக்காடு, மிலட்டூர் ஆகியஊர்களில் சிறப்பாக நடைபெற்று வந்தன. இன்று சாலியமங்கலத்திலும்,மிலட்டூரிலும் பாகவதமேளா நடைபெற்று வருகின்றது. மிலட்டூர் பெருமாள் கோவிலின் வாயிலில் நரசிம்ம ஜெயந்தி அன்று பக்த் பிரக்லாதன் கதையையே நடத்தி வருகின்றனர்.

**தெருக்கூத்து:**

பாட்டும், வசனமும் கலந்து மெய்ப்பாட்டோடு நிகழ்த்தப் பெறுவது தெருக்கூத்துக்கலையாகும். நாட்டார் நாடகம் என்றும் இதனை அழைப்பர். நடிப்பவரே பாடுதல் மரபாகும். நடிகர்கள் பாடும் சுருதியிலேயே பேசுவார்கள். கதாகாலட்சேபத்தில் பாகவதர் பாடும் சுருதியில் பேசுகின்ற அமைப்பைக் காணலாம். வசனத்தையே சில நேரங்களில் பாடல் போன்று தெருக்கூத்துக்கலைஞர் தாளமின்றிப் பாடுவார். இம்முறையைத்தான் பாகவதர்கள் பின்பற்றுகிறார்கள். தெருக்கூத்து நாட்கங்கள் பெரும்பாலும் புராண, இதிகாசக்கதைகளாகவே அமைந்து இருக்கும். சங்க இலக்கியங்களுள் கூத்தர்கள் பற்றிப் பரவலான குறிப்புகள் காணப்படுகின்றன. மேடையின்றித்தெருவிலேயே இக்கலை நடைபெற்றதால்

14. சேர்மலெ, 'தஞ்சை மரவட்டம்'. பக். 158.

தெருக்கூத்து எனப்பட்டது. தொடக்க காலத்துக் கதாகாலட்சேபக் கலையும் மேடை இன்றியே நடத்தப்பட்டது என்பதை நினைத்தல் வேண்டும். தெருக் கூத்தின் பயனும், கதாகாலட்சேபத்தின் பயனும் ஒன்றாகவே உள்ளன. அரசாங்கத் திட்டங்களை இன்று தெருக்கூத்தின் வாயிலாகவும் சொல்லுகின்றனர். தற்கால நடைமுறைகளைத் திருமால், நாரதர் போன்ற தெய்வங்களைப் போல் ஒப்பனை செய்துகொண்டு சொல்வது தெருக்கூத்துக்கலையின் மரபாகும். இக்கலையிலும் ஒருவர் பாடலின் முதல் வரியைப் பாட, பக்கவாத்தியக்காரர்களும் சேர்ந்து பாடுவர். இக்கூறு கதாகாலட்சேபத்திலும் இருக்கக் காணலாம். எவ்விதமான கலையானாலும் மக்களுக்கும், சமுதாயத்திற்கும் பயன்பட வேண்டும் சமுதாயத்தால் கலையும், கலையால் சமுதாயமும் வளர்வதே சிறப்பாகும். மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தில் தான் கிராமப்புறங்களில் வயல் வேலைகள் இல்லாத கோடைக் காலத்தில் திருவிழாக்கள் நடத்தப்பெறுகின்றன இறைவனை நினைத்துப் பொழுது போக்க வேண்டுமென்ற நோக்கில் எழுந்த கதாகாலட்சேபக் கலையால் சமுதாயமும், சமுதாயத்தால் அக்கலையும் அடைந்த பயனை உணர்தல் அவசியமாகும்.

## இயல் - 6

# கதாகாலட்சேபக்கலையால் சமுதாயம் பெற்ற பயன்

கலையின் பயனும் அக்கலையினால் விளையும் பயனும் ஒருங்கிணைவது தான் வளர்ச்சியின் முதிர்ச்சி நிலையாகும்.

**இக்கலை பெற்ற பயன்:**

கதாகாலட்சேபக்கலை என்பது பாரதநாட்டின் பண்பாட்டை வெளிக்கொணர்வதாகும். கலையின் வளர்ச்சியே, கலை பெற்ற பயனாகக் கருதப்படுகின்றது. மனிதன் சாதிக்கும் சகல காரியத்திலும் பகவத் பிரேமையே பிரதானமானதாகப் போற்றப்படுகின்றது. பகவத் பிரேமைக்குச் சம்பந்தப்பட்டது பாகவதம். பகவத் பிரேமையை அனுஷ்டானத்தில் அனுபவித்தவர்களையே பாகவதர்கள் என்கின்றோம்.[1] பாகவதர்கள் இறைவனின் தொண்டராகக் கருதப்படுவர். கடவுளை அறிந்த மகான்களின் சக்தியே பெரிதானது. இக்கருத்தைத்தான், ''தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே', என்றாள் ஔவை.

---

1. சத்யசாயிபாபா, 'பிரேமை', சனாதனசாரதி. (மொ பெ.: எஸ். நடராஜன்.) 12 : 13, பக்.: 18.

நமது நாட்டில் சரித்திரமும், பண்பாடும் உண்மையான பெற்றோர்கள். புனிதக் கதைகளான இதிகாசமும், புராணங்களும் இவ்வுண்மைகளை வெளிக்கொண்டு வந்தன. இவ்விரண்டையும் இரு கண்களாகவே நாம் போற்றி வந்திருக்கின்றோம். பகுத்தறிவு இல்லாதது மிருக சக்தி, பகுத்தறிவுடன் கூடியது மனித சக்தி இவை இரண்டிலும் மிக்கது தெய்வ சக்தி. இம்மூன்று சக்திகளால் ஆக்கப்பட்டவன் மனிதன். கதாகாலட்சேபக்கலை மிருக சக்தியை நீக்கி, மனித சக்தியைத் தெய்வசக்தியாக மாற்றவே வந்தது.[2] தெய்வீகத்தைக் காட்டும் முயற்சியில் விளைந்த கதாகாலட்சேபக்கலை உலகியலையும் ஒதுக்கவில்லை. தெய்வீகமும், உலகியலும் இணைந்தது தான் முழு வாழ்க்கை என்பதை வலியுறுத்திக் கூறி வந்தது.[3] தெய்வீகத்தில் நம்பிக்கை, நம்பிக்கையில் அன்பு, அன்பில் அமைதி, அமைதியில் சத்தியம், சத்தியத்தில் ஆனந்தம், ஆனந்தமே தெய்வம் என்ற கோட்பாட்டைக் கொண்டது தான் கதாகாலட்சேபக்கலை. மனிதன் இயல்பாகவே ஆனந்த தாகம் உடையவன்.[4] எனவேதான் ஆனந்தத்தால் ஈர்க்கப்பட்டுத் தெய்வீகத்தை உணர்கின்றான்.

---

2. சத்யசாயிபாபா, 'பிரேமை', சனாதன சாரதி. (மொ.பெ.: எஸ். நடராஜன்.) 12 : 13, பக்.: 18.
3. சத்யசாயிபாபா, 'பிரேமை', சனாதனசாரதி. (மொ.பெ.: எஸ். நடராஜன்.) 12 : 13, பக்.: 9.
4. மே.நூ., பக்.: 9.

இன்று உலகில் நம்மைத் துன்புறுத்தும் பல பொருளாதாரச் சிக்கல்களுக்குக் காரணம் என்ன? அவ்வகைச் சிக்கல்கள் எப்படி ஏற்படுகின்றன? என்பதை ஆன்மீகக் கோணத்தில் ஆராய வேண்டும். நமக்குக் கிடைக்கும் பொருள்கள் குறைவானவை. நமதுதேவைகளோ எல்லையற்றவை. தேவைகளைக் குறைத்துக் கொண்டால் பொருளாதாரச் சிக்கல்கள் அடங்கி விடும். வேதாந்த முறையில் இதனை ''வைராக்கியம்'' என்பர்.[5] இந்த வைராக்கியத்தை மக்களுக்குச் சட்டத்தின் மூலம் பரப்ப முடியாது. கலையின் மூலமாகத்தான் பரப்ப இயலும். இவ்வகையில் உலகிற்கே நம் பாரத நாடு ஆன்மீகச் செல்வத்தைக் கொடுத்து உதவியுள்ளது. உலகைப் படைப்பவரும் அதனுள்ளிருந்து ஆட்டுவிப்பவரும் கடவுள் என்ற நம்பிக்கையைத் தொன்று தொட்டு பாரத நாட்டு மக்கள் பெற்றுள்ளனர். பாரத நாடு புண்ணிய பூமி, அருள் நிறைந்த தேசம் என்று பலவாறு இன்றும் போற்றப்படுகின்றது.[6] ''மனிதத் தன்மை தெய்வீகத் தன்மையில் ஊறிவிட்டது. எந்த பெயரில் தொழுதாலும் ஒவ்வொருவனும் கடவுளைக் காண்கின்றான். கடவுளின் சொல்லைச் செவியுறுகின்றான். கடவுள் அவனின் ஓர் அங்கமாகவே இருக்கின்றார். அவனுடைய வாழ்வின் ஒவ்வொரு வினாடியிலும் கடவுள் இருந்து வருகின்றார்'' என்று

---

5. சத்யசாயிபாபா, நீலகிரியில் நிமலகருத்துக்கள். (மொ.பெ.: என். கஸ்தூரி.) பக்.: 111.
6. பி.ஆர். சீனிவாசன், 'நாம் வணங்கும் தெய்வங்கள். பக்.: 3.

"ஸைல்வியன்லிவி" என்பவர் பாரத நாட்டு மக்களின் மன ஓட்டத்தைக் கூறியிருப்பது சிந்திக்கத்தக்கதாகும்.[7]

பல்லாண்டுக் காலமாகத் தர்மத்தையும், நீதியையும் பிரச்சாரம் செய்து இறைநெறியைக் காட்டியதன் விளைவுதான் இன்றும் அக்கொள்கையில் மக்களுக்கு பிடிப்பு இருக்கின்றது. புனிதமான கதைகளைச் செவியுறுவது புண்ணியம் என்ற நமது பழைய பண்பாடே இக்கலையை வாழ்விக்கின்றது. மற்ற கலைகள் மனமகிழ்வுக்காகவே அமைக்கப்பட்டன. கதாகாலட்சேபக்கலை மக்களின் மனத்தை நல்வழிக்கு அழைத்துச் செல்வதற்காக அமைக்கப்பட்டது. இப்படிப்பட்ட தெய்வீகக்கலை மூலம் ஒரு கதையைக் குறிப்பிட்ட காலத்திற்குள் பலரும் விரும்பி ஏற்கும்படி பல நிலைகளில் ஒரு செய்தியை விளக்கிக் கூறி, சிறந்த நீதியை, தர்மத்தைப் பெரியோர்கள் சொல்லி வந்தனர். இத்துறையில் பங்கு பெற்றோர் பலர் இருப்பினும் சிலரே நிலைத்து நிற்கின்றனர்.[8] இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றையும் தன்னகத்தே கொண்டு விளங்குவது இக்கலை. கூட்டு வழிபாட்டில் தொடங்கி நாம சங்கீர்த்தனமாக வளர்ந்து, பாரதம் வாசித்தலாக உருமாறி, இயல் இசை நாடகம் ஆகிய

---

7. மே.நூ , பக்.: 8.
8. எம் வி இராமானுச ஆச்சார்யா, **Smt. C.SaraswathyBai Commoration Volume**, பக்.: 40.

கலைகளை இணைத்துக்கொண்டு கதாகாலட்சேபக் கலையாக விளங்குகிறது.

ஒரு கலையின் பயன் அக்கலையை மேற்கொண்டவர்களின் கைகளில் உள்ளது. கதாகாலட்சேபக்கலையை மேற்கொண்டோர் தூய்மையாக இருந்ததால்தான் இக்கலையும் தூய்மையாகக் கருதப்பட்டது. கலை மக்களின் ஆதரவை இழக்கும் பொழுதுதான் தொய்வு விழும் நிலை அடைகின்றது. மனிதனின் மனம் மாற்றத்தை விரும்பும் இயல்பு உடையதாகும். ஒரே மாதிரியான அமைப்பில் கதாகாலட்சேபம் இருந்து வந்ததால் தொய்வு ஏற்பட்டது. இந்நிலை கிருபானந்த வாரியாரின் நுழைவால் நீங்கியது. வாரியாரின் கதைஉலக வெற்றிக்குக் காரணம் அவர் பெற்ற தெய்வீக அனுபவமே. இன்றைய நாளில் பாகவதர்கள் சொல்லுகின்ற கருத்துக்களை உணர்ந்து சொல்லும் அனுபவத்தைப் பெற்றிருக்கின்றார்களா? என்பதை மக்கள் அறிய முற்படுவர். அனுபவம் கலந்துவரும் கருத்துக்களுக்குத்தான் மக்கள் செவி சாய்ப்பர்.

**இக்கலையால் சமுதாயம் பெற்ற பயன்:**

மக்களுக்குப் பயன்படும் பொழுதுதான் கலை உயர்ந்த நிலையை அடைகின்றது. கதாகாலட்சேபக்கலையை மேற்கொண்ட பாகவதர்கள் தம் வாழ்நாளில் பலருக்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறார்கள். இத்துறையில் கிருபானந்த வாரியார்

அவர்களின் பணிகள் மறக்க முடியாத ஒன்றாகும். திரைப்படத்திற்கும், அரசியல் கூட்டங்களுக்கும் வரும் மக்கள் தொகை இவர் கதை நிகழ்ச்சிக்கும் கூடுவதைக் காணலாம். சமுதாயச் சிக்கலையும், அதைத் தீர்த்து வைக்கும் வழிகளையும் இதிகாச புராணங்களிலிருந்து இவர் எடுத்துக் காட்டும் நயமும், சிலேடை இன்பமும் மக்களைத் தன்வசப்படுத்தியுள்ளன. இவர் கூறிய "அனுசூயா" கதையைக் கேட்டுக் குடும்பப் பூசலை மறந்து வாழ்ந்தவர்கள் உண்டு.[9] உயிர்ப் பலியிடுவதைத் தம் மதி நுட்பத்தாலும், பேச்சுத் திறமையாலும் உயிரைத் துச்சமாக மதித்துப் போராடி மாற்றி அமைத்தார்.[10] இவர் அறிவுரையால் புலால் உணவை விட்டவர்கள் ஏராளம்.[11] முரடர்களைக் கருணை மறவனாக மாற்றிய வரலாறு இவர் வாழ்வில் காணப்படுகின்றது.[12] வாரியார் புதிய கோயிலை உருவாக்கவும், பழைய கோயிலை புதுப்பிக்கவும் காரணமாக இருந்திருக்கின்றார். திருப்பணிகள் செய்வதற்குக் கதாகாலட்சேபக்கலை காரணமாக இருந்திருக்கின்றது. தன் கதையின் மூலம் கிடைக்கும் பொருளையும், செல்வந்தர்களின் அன்பளிப்பையும் திருப்பணிக்கே இவர்பயன்படுத்துகின்றார். அறுபத்து நான்காவது நாயனராக

---

9. கிருபானந்த வாரியார், திருமுருக கிருபானந்த வாரியார் வாழ்க்கை வரலாறு. பக்.: 66.
10. மே.நூ., பக்.: 31.
11. மே.நூ., பக்.: 63.
12. மே.நூ., பக்.: 85.

இவரை மகிக்கக் ''திருப்பணிக் தொண்டர்'' என்று காஞ்சிப் பெரியவர் போற்றியுள்ளார்.[13] வாரியார் தமிழர் பண்பாட்டை கீழை, மேலை நாடுகளில் பரப்பினார். வாரியாரின் க ரு ணை த் திறத்தால் திருப்பராய்த் துறையிலிருக்கும், ''திக்கற்ற மாண-வரில்லம்'' சிறப்பாக இயங்கிவருகின்றது.வாரியாரின் கதைகள் பொருள் பெற்ற செல்வர்களின் உள்-ளத்தில் அறச்சிந்தனையை விதைத்தது எனலாம்.

''பொறுத்தார்பூமியாள்வார்'' என்ற கொள்கைக் கிணங்க பொறுமையின் இருப்பிடமாக பாகவதர்கள் விளங்கியிருக்கின்றனர். ''பகைவனுக்கு அருள்வாய்'' என்னும் நமது பழைய கோட்பாட்டை வாரியார், கடைப்பிடித்திருக்கும் திறம் வியப்பிற்குரியதாகும். இவர் நயமாகப் பேசிய அ ர சி ய ல் செய்தியை, விபரீதமாக எடுத்துக் கொண்ட, தொண்டர்கள் நெய்வேலி என்னும் ஊரில் வாரியாருக்கு இடையூறு செய்தனர் பொறுமையைக் கடைப்பிடித்த வாரியார், அவர்கள் மீது வழக்குத் தொடுப்பதற்குச் சம்மதிக்க-வில்லை. இவர் பொறுமைக்குச் சா ன் றா க ப் பின்னாளில் முன்பு இடர் செய்த கூட்டத்திலிருந்த ஒருவன், ''சுவாமி தங்களுக்கு இடர் செய்த பாவி ஆகிய நான் மிகப் பெருந்துயரில் சிக்கித் துடித்து ம ர ண ப் ப டு க் கை யி ல் இருக்கிறேன். என்னை மன்னித்தேன் என்று எழுதி, விபூதி பி ர சா த ம்

---

13. மனிதனும் தெய்வமாகலாம், கீ. பாலசுப்பிரமணியன் அணிந்துரை.

அனுப்புங்கள்'' என்று கடிதம் எழுதினான் அதற்கு வாரியார் பதிலெழுதி விபூதிப்பிரசாதம் அனுப்பி வைத்தார்.[14] நாத்திகர்களையும் தமது தமிழ் உணர்வால் மகிழ வைத்தார். இவர் புலமையில் மனத்தைப்பறிகொடுத்தபுரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஒருமுறை இவரைக் கட்டித் தழுவினார்[15]

ஒவ்வொரு புராணக் கதைக்குள்ளும் ஆழ்ந்த பேருண்மைகளும், அரும்பெரும் தத்துவங்களும் இலைமறை, காய்மறையாக மறைந்து புதைந்து கிடக்கின்றன. மறைந்துகிடக்கும்அழகியசெய்திகளை வெளிப்படுத்துவது கதாகாலட்சேபக் கலைக்குரிய செயலாகும் படிக்காதவர்கள் வாரியார் கதைகளின் வாயிலாகவும், படித்தவர்கள் இவர்எழுதிவெளியிட்ட நூல்களின் மூலமாகவும் அறிவு விளக்கம் பெறுவர். மக்களுக்கு அறிவு விளக்கம் தருவதற்காகவே, ''திருப்புகழமிர்தம்'' என்னும் பதிப்பகத்தை நடத்திச் சமுதாயத் தொண்டாற்றி வருகின்றார். பழைய கருத்துக்களுக்குப் புதிய விள்க்கம் சொல்லுகின்ற பாகவதர்களுக்கு, மக்கள் தங்கள் ஆதரவைக் காட்டினர். புதிய செய்திகளின் மூலமாகக் கிட்டும் இன்பமும், சிந்தனைத் தெளிவும் சமுதாயப் பயனாகும். படித்தவர்கள் சிலசொற்களுக்கு விளக்கம் கேட்டு வரும்பொழுது வாரியார் சொல்லும் புதிய

---

14. கிருபானந்தவாரியாரின், திருமுருக கிருபானந்தவாரியார் வாழ்க்கைவரலாறு. பக் : 182

15. ஜி. இராமமூர்த்தி, நேர்முகப்பேட்டி. நாள்: 6-5-84;

முறையை அருகிலிருந்தே பலர் சுவைத்திருக்கின்றனர். வாரியாரின் கதை கேட்க வருவோரில் பலர் குறிப்பெடுத்துப்பத்திரிக்கைகளுக்குஅனுப்புவது உண்டு. மறைந்த நிலையிலிருக்கும் நமது பெருமைகளை வெளிக்கொணரும் தொண்டில் இவர் ஈடுபட்டிருக்கின்றார்.கல்லாதமனிதர் மனத்திலிருந்து அறியாமையை நீக்கவும், மற்றவர் மனத்திலுள்ள குழப்பத்தை நீக்கவும் வாரியாருக்கு இக்கலை ஒரு சாதனமாக அமைந்துள்ளது.

**பழைய சொல்லும் புதிய பொருளும்:**

அவர், 1.''காசியிலிறந்தால்முத்தி'' என்பதனை, காசி என்பது புருவ மத்தியைக் குறிக்கும்(காசி-ஒளி) புருவ நடுவில் நினைவை வைத்து உயிரைவிட்டால் முக்தி கிடைக்கும், என்று தன் தெளிந்த சித்தாந்த அறிவினைக் காட்டுகின்றார். நினைவலையை ஒடுக்கி, மன ஒருமைப்பாட்டைப் பெறும் சமுதாயம் சிறந்து ஓங்கும். இவ் ஒருமைப்பாட்டிற்கே இசை பயன்பட்டதுஎன்பதை நினைவில்கொள்ளவேண்டும்.

2. ''தனது தவசக்தியால் உடம்பிலிருந்து உயிர்ச்சக்தியை (சுக்கிலம்) விடாது பாதுகாத்து வந்தால் இறக்கும் தருவாயில் தலையின் உச்சி வெடித்து இவ்வுயிர்ச் சக்தி சிறிய மணி போன்று வந்து விழும். அதற்குத்தான், ''சிரோண்மணி'', என்று பெயர். அதனை, வடக்கே நான் யாத்திரை சென்றபோது ஒரு மகான் வைத்திருக்கக்கண்டேன்''

என்றார். உணர்ச்சிகளை அடக்குவது இன்பம் என்னும் கொள்கையை மேற்கண்டகருத்தால் அவர் விளக்குகின்றார்.

3. ''விட்ட எழுத்தை விடாத எழுத்தால்
கட்ட வல்லார் காலனைக் கட்ட வல்லார்''

என்ற திருமூலரின் பாடல் வரிகளுக்கு விளக்கம் தரும்பொழுது, ''விட்ட எழுத்து என்பது விடுகின்ற மூச்சு, விடாத எழுத்து என்பது உள்ளிழுக்கும் மூச்சு நாம் மூச்சை உள்வாங்கும் பொழுது எட்டு அங்குலக் காற்று உள்ளே செல்கின்றது. வெளியிடும் மூச்சுக் காற்றில் பன்னிரெண்டு அங்குலம் செல்கின்றது. வரவு நான்கு, செலவு எட்டு என்றால் நட்டம் நான்கல்லவா, ஒரு நாளைக்குச் சராசரியாக மனிதன் 21600 முறை மூச்சு விடுகின்றான். ஒருமுறை மூச்சு விடும் பொழுது நான்கு அங்குலக் காற்று நட்டம் என்றால் 21600 க்கு என்ன ஆயிற்று? என்று கூட்டத்தைப் பார்த்துக்கேட்பார். இயல்பாகவே நான்கு அங்குலம் நட்டம் இதற்குமேல் ஆசை, கோபம், காமம், பொறாமை ஆகிய உணர்ச்சிகளால் உந்தப்படும்பொழுது மூச்சுகாற்றுஅடையும் நட்டத்திற்கு கணக்கில்லை. எனவே ஆசையை, கோபத்தை, காமத்தை, பொறாமையை விட்டு விடுங்கள். அப்படி விட்டவர்கள் தான் எமனைக் கட்டிப்போடும் ஆற்றல் வாய்ந்தவர்களாக மாறுவர். இல்லை என்றால் எமன் எப்போது வேண்டுமானாலும் நம்மை வந்து கட்டுவான்'' என்று விளக்கம் சொல்வார்.

மனித சமுதாயத்தின் ஆரோக்கியத்தைக் கெடுப்பது ஆசை, கோபம், காமம் ஆகிய மூன்றும் ஆகும். இந்த மூன்றையும் நோக்கித் தீவிரமாக மனத்தைச் செல்லவிடாது கட்டுப்படுத்தினால் பேரின்பம் காணலாம் என்பார். ஆசைக்குத் துரி-யோதனனையும்,கோபத்திற்குவிசுவாமித்திரனையும் காமத்திற்கு இராவணனையும் எடுத்துக்காட்டுவார். மனித குணங்களை இதிகாச. புராணங்கள் பாத்-திரங்களாக்கிக் காட்டியிருக்கின்றன என்பதை மக்கள் உணரும் வணணம் சொல்வார். சமுதாயத்தைப் பிடித்திருக்கும் கொடிய வியாதிகளை நீக்கும் வழி-களைக் கண்டறிந்து அவற்றைத்தொகுத்து இதிகாச புராணம் எனப் பெயரிட்டனர். இதிகாச புராணச் செய்திகள் அனைவரும் அறிந்தவைதாம் என்றாலும் பாகவதர்கள் தருகின்ற எளிய பொருள் வளக்கத்-தைக் கேட்கும் சமுதாயம் திருந்தும் என்பதில் ஐயமில்லை.

சமுதாயச் சிக்கலைத் தீர்க்கும் முறைகளைச் சொல்வதாலும், இதிகாச புராணங்களின் வாயிலாக நன்னெறியைக் காட்டுவதாலும், சமுதாயம் நல்-லறிவை எய்த வேண்டும் என்ற அடிப்படை எண்ணம் உள்ளதாலும் கதாகாலட்சேபக் கலையை மேற்கொண்ட பாகவதர்களை ஆசிரியர்கள் என்றே கூறலாம். நன்னூலாசிரியர்பவணந்தி, ஆசிரியர்களின் தகுதிகளை,

"குன்றுள், தெய்வம், கொள்கை, மேன்மை,
கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை,
நிலமலை நிறைகோல், மலர்நிகர்மாட்சியும்
உலகியல் அறிவோடு, உயர்குணம் இணையவும்
அமைபவன் நூலுரையாசிரியன்னே" (நூற்பா: 26)

என்று இலக்கணமாகக் கூறியுள்ளார்.

பவணந்தி கூறுகின்ற அத்தனை குணங்களும் பாகவதர்களுக்குப் பொருந்துவதாகும் என்பதைக் காட்டுவதற்காக இந்நூற்பா இவ் ஆய்வில் எடுத்-தாளப்பட்டுள்ளது. சமுதாயத்தை வழி நடத்த வந்த பாகவதர்களைத் தெய்வமாகப் போற்றுவதற்கு இதுவே காரணமாகும்.

1945-ஆம் ஆண்டு வாரியார் தம் ஊரான் காங்கேயநல்லூரில் தேவாரம் பாடும் முதியோர்-களுக்கு மாதந்தோறும் உதவித்தொகை வழங்கினார் இன்றும் அத்தொண்டு தொடர்கின்றது. தமிழக அரசின் "முதியோர்உதவித்தொகை"த்திட்டத்திற்கு முன்னோடியாக வாரியார் திட்டம் விளங்குகின்றது.

வாரியாரின் சொல்வயப்பட்ட கிருத்துவ பாதிரி-மார்கள் தங்கள் சபையில் பேச அழைத்தனர். அங்கு சென்று உரையாற்றும் பொழுது "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற நமது பழைய பண்பாட்டை ஆன்மீகக் கண்ணோட்டத்தோடு விளங்கினார் எல்லா மதமும் அன்பை வற்புறுத்துகின்றன.அன்பு

ஒன்றாலே இறைவனை அடையலாம். "அன்பெனும் பிடிக்குள் அகப்படும்மலையே", என்று இறைவனை வள்ளலார் பாடுகின்றார். விபூதி பூசுபவர்கள் தான் சைவர் என்று எண்ணாதீர்கள். சைவம் என்றால் அன்பு, அன்புள்ளவர்கள் எல்லோருமே சைவர்கள். நீங்கள் அன்பு உடையவர்கள் தானே? என்று கூறினார்.[16] ஒரு இறைவனைப் பலவிதமாக வழிபடுவதாலே மதங்கள் பல தோன்றின. மதங்கள் பலவானாலும் இறை ஒன்றேஎன்று அடிப்படையான கொள்கையை வாரியார் சொல்லி விடுகின்றார். இந்த உணர்வைச் சமுதாயம் பெறுமேயானால் மதச் சண்டைகள் நீங்கி விடும். இம்முறையினைக் கதாகாலட்சேபம் செய்யக்கூடிய பாகவதர்கள்தாம் செய்ய இயலும். பாகவதர்கள் சமயப்பணியை மட்டும் செய்வதாக நினைத்தல் கூடாது. உண்மையில் அவர்கள் செய்வது சமுதாயப் பணியே ஆகும். இக்கொள்கையை நாளடைவில் பாகவதர்கள் மறந்த காரணத்தால்தான் இக்கலையில் தொய்வுஏற்பட்டது சமுதாய வளர்ச்சியின் மீது பாகவதர்கள் பற்றுக்கொள்வார்களேயானால் இக்கலை மீண்டும்தழைக்க வாய்ப்பு உண்டு.

நீண்டதொரு வரலாற்றைப் பெற்ற கதாகாலட்சேபக்கலை வடிவம்மாறி, பெயர் மாறி இருந்தாலும்

---

16. கிருபானந்த வாரியார், 'மனிதனும் தெய்வமாகலாம்'. பக்.: 25.

தற்போது இந்தக் கதைக்கலை வாழும் நிலையை அறிந்தால்தான் கால வேறுபாட்டையும், மனித உள்ளங்களின் உணர்ச்சி வேகத்தையும் அறிந்து கொள்ள இயலும்.

இயல் - 7

# கதாகாலட்சேபக்கலையின் இன்றைய நிலை

முற்காலத்தில் கதை சொல்பவர்களுக்கு எடுத்துச் சொல்லும் ஆற்றல் சக்தி இருந்தால் போதும். இக்காலத்தில் அந்த ஆற்றல் இருந்தால் மட்டும் போதாது. பொதுமக்களுக்கு ராக ஆலாபனை, உலகியல் நகைச்சுவை முதலியவற்றோடு, சிறந்த கீர்ந்தனங்களையும் கதை சொல்பவர் சொல்லியாக வேண்டும். மக்கள் இதனையே விரும்புவர். சங்கீத வித்வான் தன் நிகழ்ச்சிகளில் இசைப்புலமையைக் காட்டினால் மட்டும் போதுமானதாக இருக்கிறது. கதை செய்பவர் அப்படியன்று. ஆரம்பம் முதல் மங்களம் வரை நவரச பாக்களினால் கேட்பவரை வசப்படுத்த வேண்டும்.[1]

---

1. எம்.வி. இராமானுச ஆச்சார்யா, Smt C.SaraswathyBai, Commoration Volume. பக்.: 41.

முன்பு பத்து இடத்தில் இசை நிகழ்ச்சி என்றால் இருபது இடத்தில் ஹரிகதை நடைபெறும். திருமண விழாக்களில் ஹரிகதையே முதலிடம் பெற்றது[2]. இன்று இசைநிகழ்ச்சிகள் முதலிடம் வகிக்கின்றன. இசைநிகழ்ச்சி என்றால் அவை வெறும் தெய்வீகப் பாடல்களை மட்டும் கொண்டு பாடப்படுவன அல்ல நவீன இசைக்கருவிகளைக் கொண்டு திரைப்படப் பாடல்களை சிலர் பாடுகின்றனர்.

தெய்வீக நிலைக்கு மக்களைக் கொண்டு சென்ற இக்கலையின் நிலை, இன்று பொருளாதாரநோக்கை மட்டுமே மையமாகக் கொண்டு விளங்குகின்றது. தன்னலத் தியாக உணர்வோடு செய்யப்பட்ட கலை இன்று தன்னல உணர்வோடு செய்யப்படுவதைக் காண்கின்றோம். கலிகாலத்தில் தர்மத்திற்கு ஏற்பட்ட சரிவைப் பாகவதர்கள் தான் செப்பம் செய்ய இயலும் என்ற உண்மையை அவர்கள் உணர்ந்திருக்கின்றார்களா? என்பது ஐயத்திற்குரியது. திருமணமாகாத இளம்பெண்களே இன்றைய நாளில் கதை உலகில் நிறைந்திருக்கின்றனர். சீ.சரஸ்வதிபாய் என்னும் பெண்மணி இவ்வுலகில் நுழைந்த போது இருந்த எதிர்ப்பு இன்று இல்லை மக்களின் மனநிலை மாறிவிட்டதை இந்நிலை காட்டுகின்றது. பிறவிப் பயணமாக இருந்த கதாகாலட்சேபக்கலை

2. எம்பார் விஜயராகவாச்சாரியார், ஹரிகதை பேட்டி, திருச்சி வானொலி நிலைய ஒலிபரப்பு நாள்: 28-5-84

இன்று கோவில் விழாக்களில் சடங்காகவே நடை-பெற்று வருகின்றது.

மராட்டியத்தில் கீர்த்தன் என்று பெயர் பெற்றுத் தமிழகம் வந்த போது கதாகாலட்சேபமாகி, இன்று ''இலக்கிய இன்னிசைப் பேருரை'' என்ற பெயருடன் விளங்கி வருகின்றது. மராட்டியர்கள் தமிழகத்தை ஆண்டபோது மராட்டிய சாதுக்களுக்கு மடங்கள் அமைக்கப்பட்டன. அவர்களில் பீமராஜ்கோஸ்வாமி, அனந்தமௌனி, இராகவஸ்வாமி ஆகியோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் இவர்களுக்கு முறையே தஞ்சை, மன்னார்குடி. மாரியம்மன் கோவில் ஆகிய ஊர்களில் மடங்கள் ஏற்பட்டன. தஞ்சையிலுள்ள பீமராவ் மடம் மட்டும் சிறந்து விளங்குகின்றது. இந்த மடத்தில் இராமநவமியின் பொழுது பத்து நாட்களுக்கு மராட்டிய பாணியில் கதாகாலட்சேபம் செய்து வருகின்றனர். மராட்டிய கதாகாலட்சேப முறையை உணர்வதற்கு இம்மடத்தில் நடக்கும் கதாகாலட்சேபம் சான்றாகும்.

மனிதன் கடவுளிடத்துச் செலுத்தும் பக்தியை நமதுமுன்னோர்கள் சிரவணம்,கீர்த்தனம், ஸ்மரணம் பாதஸேவனம், அர்ச்சனா, வந்தனம், தாஸ்யம், சாகியம், ஆத்மநிவேதனம் என்று ஒன்பதுவகையாகப் பிரித்திருக்கின்றார்கள். இரண்டாவதாகவரும் கீர்த்-தனையின்விளக்கமே கதாகாலட்சேபம் ஆகும். மற்ற எண்வகைபக்திகளும் இதனோடுஇணைந்து வரும்[3].

3. பி. ஸ்ரீ., 'அன்பு வளர்த்த அறிவுப்பயிர்'. பக்.: 95.

பாகவதர் குணாதிசயம்:

குற்றம் செய்தவர் பக்கல் பொறையும், கிருபையும், சிரிப்பும், உகப்பும், உபகாரஸ்மிருதியும், பாகவதரின் குணங்களாகக் கருதப்பட்டன.[4] பக்தியும், கைங்கர்யமும் (பாகவதருக்குத் தொண்டு செய்தல்) மக்களுக்கு இன்றியமையாதனவாகக் கருதப்பட்டன.[5] பாகவத அபச்சாரமே மோட்ச விரோதம். லெட்சுமி அருள் வடிவானவள். அந்த லெட்சுமியே பாகவதர்களைப் பற்றித் தவறாகக் கூறினாலும் விஷ்ணு நம்பமாட்டார் என்பர்.[6]

பாகவதர் பெருமை

தொண்டரடிப் பொடியாழ்வார் தாம் செய்த தவற்றிற்குப் பரிகாரம் தேட முற்பட்டுப் பெரியோர்களைக் கலந்து ஆலோசிக்க, அவர்கள் பல நூல்களை ஆய்ந்து, "சகல பாவங்களுக்கும் பிராயச்சித்தம் பாகவதர்களுடைய ஸ்ரீ பாத தீர்த்தத்தை உட்கொள்வதே" என்று கூறினார். அங்ஙனமே ஆழ்வார் உட்கொண்டு பாவத்திலிருந்து மீண்டார். பாகவதர்கள் தவறு செய்ய மாட்டார்கள் என்ற நம்பிக்கை மக்களிடம் அன்று அதிக அளவில்

---

4. மே.நூ., பக் : 125.
5. மே.நூ., பக் : 131.
6. ரெங்கநாத பட்டாச்சாரியார், நேர்முகப்பேட்டி, நாள் : 6—5—84.

நில்வியது. குலசேகர ஆழ்வார் பாகவதர்களோடு பழகுவதை உணர்ந்த சிலர் வஞ்சகமாகப் பாகவதர்கள் மீது திருட்டுக்குற்றம் சுமத்தினார். கோபமுற்ற குலசேகர ஆழ்வார் குடத்திற்குள் பாம்பை விட்டு பாகவதர்கள் திருடியது உண்மையானால் பாம்பு என்னைக் கடிக்கட்டும் என்று சொல்லி குடத்திற்குள் கையை விட்டார். பாம்பு கடிக்கவில்லை. குலசேகர ஆழ்வார் பாகவதர்கள் மீது கொண்ட நம்பிக்கையை உணர்த்துவதற்காக இக்கதையைச் சொல்வர்.[7]

தமிழகத்தில் கதை சொல்பவர்களைப் 'புராணிகர்கள்' என்று அழைப்பர். புராணங்களைச் சொல்வதாலே இப்பெயர் பெற்றனர். இவர்கள் தூய வாழ்வை மேற்கொண்டதால் வாழ்வில் தவறு செய்வதில்லை. தவறு செய்தாலும் அக்கால மன்னர்கள் தண்டிக்க மாட்டார்கள் என்ற வழக்கினைத் திருவேங்கடசதகம் என்னும் நூல் பின்வருமாறு கூறுகின்றது.

---

7. ஜி. இராமமூர்த்தி பாகவதர், நேர்முகப்பேட்டி.
நாள் : 6—5—84.

தூதாகி வந்தபேர், மிக்கதானா பதியர்
துதி பெற்ற தந்தை தாயர்
சொல்லுமா சாரி யர், புரோகிதர், புராணிகர்
சுகந்தந்த போக மடவார்
வேதாகமங் கற்ற வைதிகர், தபோதனர்கள்
விகடப்ர சங்க மிடுவோர்
வித்தையா லுயிர்கின்ற கவிராஜர் சுத்தரண
வீரர்மர பினிலுயர்ந் தோர்
தீதான வெம்பிணியடைந்து ளோர் வறுமையோர்
சிறுவரோடு தனை நம்பினோர்
செய்யுமிவர் பதினெண்மர் மதியாத குற்றங்கள்
செய்யினும், பொறுப்பதி ல்லால்
வாதாடி யெதிர் செய்கை மன்னர்நெறி யன்றுகாணவே. 8

**பாகவதர்களும் கலையுணர்வும்:**

மனிதனின் முழு உணர்வுக்கும் விருந்தாவது கலை. நல்ல இரசிகன் நல்ல கலைஞன் ஆவான் என்பது அனுபவ மொழியாகும். அறிவைப்பெற்ற மனிதன் உணர்வைப் பெறவில்லை என்றால் அவன் மரத்திற்கு சமமானவன். உணர்ச்சியைப் பெற்று அறிவில்லைஎன்றால் அவன்விலங்குக்குசமமானவன். அறிவும் உணர்வும், மக்கள் பண்பும் சேர்ந்தால் ஒருவன் கலைஞனாகவிளங்குவான் மனிதன்கற்பனை கலந்த உணர்ச்சியோடு பிறக்கின்றான். அறிவால் மனிதன் சோர்வடையும் பொழுது கலையே மருந்தாகப் பயன்பட்டு வந்திருக்கின்றது, வருகின்றது. நல்ல கலைகள் புலன்களை வளர்ப்பதோடு பண்படுத்தும் ஆற்றலும்கொண்டவையாகும். நவநாகரிக

8 வெண்மணி நாராயண பாரதி, பாட்டு-18.

உலகில் வாழ்ந்தாலும் பழங்கால மனிதர்களின் உணர்ச்சிகளைத்தான் நாம் இன்றும் பெற்றிருக்கின்றோம். தாம் அனுபவித்த உணர்வுகளை முறையாக வெளிப்படுத்தத் தெரிந்தவர்கள் கலைஞராகத் திகழ்வர். சுவை உணர்வும், கலைஉணர்வும் அனைவருக்கும் பொதுவானதெனினும் கலைஞர்கள் பெற்ற விழுக்காடு அதிகமாகும். சான்றோரை நம்பியோ, அறநெறியில் உறுதி அமையப்பெற்றோ கலைஞராவர். பிற உயிரின் துன்பத்தைத் தன் துன்பம் போல் கருதும் இயல்பு கலைஞர்களிடத்தில் விளங்குவதைக் காணலாம். இவ்வகை உணர்வுக்கு இரக்க குணமே காரணமாகும். இவ்வரிசையில் முதலிடம் பெறுபவர்கள் பாகவதர்கள். நாட்டுப்பற்றும், சமயப்பற்றும் பெற்றுவிளங்கும் பாகவதர்கள் மற்ற கலைஞர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

**பாகவதர்கள் பெற்ற பட்டங்கள்**

ஒரு கலை சிறப்புற்று விளங்குகின்றதெனில் மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கின்றது என்று பொருளாகும் மக்களின் ஆதரவால்தான் கலைஞர்களின் வாழ்க்கை உயரும். கதாகாலட்சேபம் செய்யும் பாகவதர்களுக்கு மக்கள் அளித்த பட்டங்களே சிறப்பாகக் கருதப்பட்டன. "ஹரிகதா திலகம்", "ஹரிகதா ரத்னம்", "ஹரிகதா சாம்ராட்", "ஹரிகதா பூஷணம்" ஆகியவை பொதுப் பட்டங்களாகும். "ஹரிகதா பிரசங்கி", "மார்க்கதர்சினி", "கீர்த்தன-

கண்டீரவ'', 'சங்கீத மானசினி''போன்றபட்டங்களை அபிநயசரஸ்வதியாய் பெற்றார். ''ஹரிகதாப் ரவீணார்'' என்னும் பட்டத்தை அண்ணாசாமிப் பாகவதரும், ''கீர்த்தன குலசேகர'' என்னும் பட்டத்தை எம்பார் விஜயராகவாச்சாரியாரும், 'ஹரி-கதா கலைவாணி'' என்னும் பட்டத்தை டி. ஆர். கமலாமூர்த்தியையும்,''நவரசபாவாகமிர்தபூஷணம்'' என்னும் பட்டத்தை மூ. இராமசுப்பிரமணிய சர்மா-வும் பெற்றனர். கலைஞர்களை ஊக்குவிக்கும் முறையில் தமிழக அரசு வழங்கிய ''கலைமாமணி'' என்னும் பட்டத்தைப் பெற்ற முதல் கதாகாலட்-சேப பாகவதர் தஞ்சை கிருஷ்ண பாகவதராவார். [இவர் பிற்காலத்துப் பாகவதர்.]

**கதாகாலட்சேப வளர்ச்சிக்குச் செய்யவேண்டியவை:**

கதாகாலட்சேபம் செய்பவர்களை மூன்று வகை-யாகப் பிரிக்கலாம்.

1. பொருள் வரவைப் பற்றிக் கவலைப்படாமல் பொருளைத் துச்சமாக நினைத்து இக்கலையைச் செய்பவர். இத்தன்மையே முதல் வகையாகும்.

2. தன் கடமையை உணர்ந்து நாட்டு மக்கள் இடையே பக்தியையும், ஞானத்தையும் பரப்புவதைக் குறிக்கோளாகக்கொண்டு கதை சொல்லிமுடிந்ததும் ஏற்பாடு செய்தவர்கள் திரட்டுக் கொடுத்தப் பொருள் நிலை எதுவாயினும் மகிழ்வோடு பெற்றுக்கொள்வது இரண்டாவது வகையாகும்.

3. முதலில் தொகையைச் சொல்லி முன் தொகையைப் பெற்றுக்கொண்டு ஒப்பந்த முறையில் இன்று கதை சொல்லி வருகின்றனர். இது வருந்தத்தக்க நிலையாகும்.[9]

தெய்வீகத்திற்கோ, சனாதன தர்மத்திற்கோ, பழைய பண்பாட்டிற்கோ, ஊறுவராத அளவிற்கு இக்கலையைமேற்கொள்பவர்கள் வாழ்தல்வேண்டும் மனத்தூய்மை, புலனடக்கம் ஆகிய இரண்டு பண்புகளையும் பாகவதர்கள் பெற்றிருக்க வேண்டும். கதாகாலட்சேபப் பள்ளியில் படித்துத் தேறியவர்களுக்கும் கோவில்களில் முதலுரிமை வழங்கப்படவேண்டும். கதாகாலட்சேபங்களில் அரசியல், சினிமா ஆபாசத் துணுக்குகள் போன்றவற்றை வாரிவிட்டுத் தெய்வீகத் தன்மைக்குச் சிலர் கேடு செய்கின்றனர். முறையாகக் கதையைச் சொல்வதென்றால் மூன்று மணி நேரம் நின்றுகொண்டே நடத்துதல்வேண்டும். சிலர் உட்கார்ந்து கொண்டு ஆர்ப்பாட்டமாகத் தலைப்பின் பக்கம் கூட போகாமல் சம்பந்தமின்றி ஊர்க்கதையைப் பேசி முடிவில் நிறைவு செய்கின்றனர். தெய்வீகத் தன்மையைச் சிதைத்துச் சிலர் வியாபாரமாக்கி விடுகின்றனர். இந்நிலை மாறினால் இக்கலை மீண்டும் செழித்து வளரும். கதாகாலட்சேபம் செய்கின்ற பாகவதர் குற்றமற்ற சாதனை-

9. டி. பி. இராமச்சந்திரகோஸ்வாமி,
The Kirthan The maratha Education Fund Madras Silver Jubilee Souvenir (Cultural and Economic Studies).
P.: 147.

களைச் செய்து ஆன்மீக அனுபவத்தைப்பெற்றவராக இருத்தல் வேண்டும். அதுதான் கேட்பவருக்கும், சொல்பவருக்கும் மகிழ்வை உண்டாக்கும்.

மனித சமுதாயம் முழுவதும் மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும்இருக்கவேண்டும்என்று தலைமுறை தலைமுறையாகப் பிரார்த்தனைசெய்யும் சான்றோர்கள் நிறைந்தது இந்தப் பாரத நாடு. இக்கருத்தைப் பாகவதர்கள் ஆழ்மனத்தில் வைத்தல் வேண்டும்[10].

அரசாங்க சட்டத்தின் மூலம் சமுதாயத்தைத் திருத்த முடியாது. மக்கள் மனத்திலே நீதிநெறியைப் பரப்பினால்தான் ஒழுக்கம் நிலைக்கும். நீதிநெறி முறைகளைப் பரப்புவதற்காகத்தான் கதாகாலட்சேபக்கலை ஏற்பட்டது. தமிழகத்தில் குறிப்பாகத் தஞ்சையில் ஒரு கதாகாலட்சேபப்பள்ளி இருந்து மூடப்பட்டு விட்டது. அரசாங்கம் முயற்சி செய்து, மீண்டும் கதாகாலட்சேப பள்ளியைத் தோற்றுவிக்கலாம். கலைமாமணி தஞ்சை ஜி. இராமமூர்த்தி இம்முயற்சியில் ஈடுபட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

கலாசாலைகளும், கல்லூரிகளும் நமக்குப் பல நன்மைகள் புரிந்தாலும், மனம் பண்பட, மதமே பெரிதும் துணை புரிகின்றது. சமய உணர்வும், பண்பாட்டு ஈடுபாடும் குறைவதால்தான் பதட்ட

---

10. "சத்யசாய்பாபா, அவதார மொழியமுதம்-2. (மொ.பெ.: என். கஸ்தூரி) பக்.: 105.

நிலை சமுதாயத்தில் ஏற்படுகின்றது. பிறரோடு நாம் நடந்து கொள்ளும் முறையையும், புலனறிவுக்கு எட்டாத இறைவனிடத்துக் கொள்ளும் பக்தியையும் சேர்த்தே மதம் என்று பெயரிட்டு இருக்கின்றனர். குணத்தைக்கொடுப்பதுமதம். இராமாயணத்தையும், பாரதத்தையும் படிக்கலாம், இல்லையென்றால் கேட்கலாம். அக்கதைகளைக் கேட்பதால், ஒருவனது நடத்தையிலும், குணத்திலும் இருக்கும் கெடுதல்கள் நீங்கும். எழுதப் படிக்கத் தெரிவது மட்டும் அறிவு ஆகாது. உண்மையைக் கடைப்பிடித்து வாழ்ந்ததால் மகாத்மா என்று தேசத்தந்தை காந்தி அழைக்கப்பட்டார். அவரை மகாத்மாவாகமாற்றியது அரிச்சந்திரா என்னும் புராண நாடகம் என்பதை நினைத்தல் வேண்டும்.

சமயப்பற்றினை அதிகரிக்கச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அமைதியைச் சமுதாயத்தில் காண முடியும். மத நம்பிக்கை அதிகரிக்க, அதிகரிக்க மனிதனின் திருட்டுப்புத்தி குறைந்து விடுகின்றது. கடவுளைப் பற்றிய உணர்ச்சியும், மரண பயத்தைப் பற்றிய நினைப்பும், மறுபிறப்பைப்பற்றிய தோற்றமும், பாவபுண்ணியம் பற்றிய விளக்கமும் பயங்கரப் பாவிகளை மாற்றி அமைத்திருக்கின்றன.[11] தண்டிக்கப்படுவதால் மட்டும் பாவிகள் திருந்துவதில்லை. போதனைகளாலேயே மீட்சிபெறுகின்றார்கள். தவறு

---

11. கவிஞர் கண்ணதாசன், 'நம்பிக்கை மலர்கள்'. பக்.: 37.

செய்தவர்களுக்குச் சிறையில் தண்டனை தருகின்றார்கள். அத்தண்டனை உடலுக்குத்தானே ஒழிய மனத்திற்கல்ல. அதனால்தான் ஒருவனே மீண்டும் மீண்டும் சிறைச்சாலைக்கு வருகின்றான்.

நமது சிறைச்சாலைகளில் மாலை ஆறுமணிக்கே கைதிகளைப்பூட்டி அடைத்துவிடுகின்றனர். இதனை விடுத்து ஆறு மணி முதல் எட்டு மணி வரை சமயச் சொற்பொழிவுகள், கதாகாலட்சேபங்கள், புராணப் படங்கள் காட்டுதல் போன்ற நிகழ்ச்சிகளை அமைத்தால் கைதிகள் திருந்துவதற்கு வாய்ப்பாய் இருக்கும்.[12] பழங்காலத்தில் போரில் புண்ணுற்ற வீரர்களுக்கு அந்நோயின் துன்பம்தெரியாது இருக்கும் பொருட்டுப் பாணர்கள் இசை பாடினர். உடல்ஓம்பும் வழி தெரியாமலும், மன உளைச்சல் காரணமாகவும் எத்தனையோ பேர்கள் மருத்துவமனையில் தஞ்சம் புகுந்து விடுகின்றனர். நோயின்றி மனிதன் வாழும் வழியைத்தான் நமது முன்னோர்கள் கூறி இருக்கின்றனர் மாதம் ஒரு கதாகாலட்சேப நிகழ்ச்சியைச் சிறைச்சாலைகளிலும், மருத்துவமனைகளிலும் பொதுவாக நடத்தலாம். நல்ல பயன் விளைவதோடு கலையும் வளரும்.

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'', என்று ஔவை மொழிந்தகாலத்தில் கோவிலுக்குச் செல்லும் மக்கள் தொகை அதிகமாயிருந்தது. இன்று கோவி-

---

12. மே நூ., பக்.: 38.

லுக்குச் செல்லும் மக்கள் தொகை அந்த அளவில் இருக்கின்றதா? என்பதுஐயத்திற்குரியது. கோவிலில் மட்டுமன்றி, இக்கலை பள்ளிகள், கல்லூரிகள் ஆகிய இடங்களில் நடைபெறுதல் வேண்டும். கல்லூரிகளில் பதட்டநிலை ஏற்படக்காரணம் வயிற்றுப்பிழைப்பைக் கொடுக்கும் ஏட்டுக்கல்வியே. உண்மையான கல்வி ஆன்மீகக் கல்வியே. முன்பு பள்ளிகளில் கால அட்டவணையில் "நீதிபோதனை வகுப்பு" என்று வாரத்திற்கு ஒரே வகுப்பை அமைத்திருப்பர். இன்று அவ்வகுப்பு நடைபெறுவதில்லை. மாதந்தோறும் ஆன்மீகக் கல்வியைக் கதாகாலட்சேபத்தின் மூலம் புகட்டலாம்.

தமிழ்நாட்டில் சொல்லும் கதைகளில் தமிழ் நாட்டுப் பாடல்களையும், தமிழ்ப்பாடல்களையும் பாடினால்தான் இக்கலை உயரும்.[13] தமிழ்நாட்டில் வாரியாரின் கதைகள் சிறப்புற்று விளங்குவதற்குக் காரணம் அவருடைய தமிழறிவு என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மந்திரங்களை வடமொழியில் சொன்னாலும் தமிழின்இனிமையை வாய்ப்புநேரும்பொழுதெல்லாம் சொல்லத் தவறுவதில்லை. அவர் கம்பன்பெருமை, வில்லிபுத்தூர் ஆழ்வாரின் இலக்கிய இன்பம், வள்ளுவத்தின் மேன்மை, ஆழ்வார்கள் நாயன்மார்கள் ஆகியோர்களின் உண்மை வரலாறு ஆகியவற்றைச் சொல்வதில் தனியிடம் பெற்று விளங்குகின்றார்.

---

13. ரெங்கநாத பட்டாச்சாரியார், நேர்முகப்பேட்டி.
நாள் : 25-8-84.

கதாகாலட்சேபத்தின் பாடல் இலக்கணம் உறுதியானமுறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இம்முறையைக் கொஞ்சம் தளர்த்தினால் இக்கலை வளரும்.[14] சங்கீத சபைகள் இக்கலைப் பற்றி நினைக்காதிருப்பது வருந்தத்தக்கது. இச்சபைகளில் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறுமளவிற்குக் கதாகாலட்சேபம் நடைபெறுவதில்லை. வாழ்வியல் கருத்துக்களை மறைமுகமாகக் கதையாகச் சொல்கின்ற இதிகாச புராணங்களை வெளிக்கொணரும் வகையில் அரசு ஒரு கல்விக்கூடம் அமைத்தல் வேண்டும். அப்படி அமைக்கப்படும் கல்விக்கூடங்களில் தீவிரப்பயிற்சி அளித்தல்வேண்டும். வாழ்வைத் தியாகம் செய்யும் மனப்பக்குவம் உடையவர்களே கதாகாலட்சேபக்கலையை மேற்கொள்ளவேண்டும். தற்காலத்தில் மக்களின்உணர்வுகளை அடக்குகின்ற கலை இல்லாதிருப்பது வருந்துதற்குரியதாகும். மக்களிடம் கீழ்த்தரமான உணர்வைத் தருகின்ற பணியை இன்றைய நாளில் கலைகள் செய்து வருகின்றன. மக்களைவாழ்விக்கவந்த கதாகாலட்சேபக்கலை மக்களின் அதிக ஆதரவைப் பெற்று விளங்கும் காலம் வெகுவிரைவில்உருவாகும் திரைப்படக் கலையோடு போட்டியிடமுடியாமல் தடுமாறும்நிலையைக் கதாகாலட்சேபக்கலைஅடைந்திருக்கின்றது. உலகியல் மோகத்தில் ஈடுபட்டுச் சலித்து விடும் காலத்தில் சோர்ந்த மனத்திற்கு மீண்டும் மகிழ்ச்சியைத்தருவது கதாகாலட்சேபக்கலைதான்.

---

14. ஆர். பாலமுருகதாஸ்,நேர்முகப்பேட்டி. நாள்: 9-4-84.

# முடிவுரை

பாரதப்பண்பாட்டின் தலைமைப்பண்பாடுகளான இதிகாச புராணங்களின் அமைப்பை வெளிப்படுத்த வந்த தெய்வீகக்கலையேகதாகாலட்சேபம். நேர்மையாக சிந்தனை செய்வதும், உண்மையைப் பேணிப் போற்றுவதும் தான் அறிவு. இராமாயணத்தையும், மகாபாரதத்தையும் திரும்பத் திரும்பக் கேட்பதால் நம்மைச் சிறந்த மனிதர்களாக ஆக்கிக்கொள்ள முடியும்.

தமிழகத்தில் கதாகாலட்சேபம் என்னும்தலைப்பின் கீழ் அமையப்பெற்ற 'முடிவுகள்'.

1. திருமாலின் அவதார மகிமைகளைச் சொல்லப் பயன்பட்ட கலை என்பதால் 'ஹரிகதை' என்ற பெயர் பெற்றது.

2. மராட்டிய மாநிலத்தில் தோன்றிய கதாகாலட்சேபக்கலை 18 ஆம் நூற்றாண்டில் தஞ்சையில் காமாட்சிசாகேப் ஆட்சிக்காலத்தில் சிறப்புற்றது

3. மூர்கூர் இராமச்சந்திரபாவா என்னும் மராட்டிய பாகவதர் மூலமாகத்தமிழகமக்கள் இக்கலையை உணர்ந்தனர்.

4. தஞ்சையில் ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் மராட்டிய முறையை சற்று மாற்றி, தமிழில் முதன்முதலாக கதாகாலட்சேபம் செய்திருக்கின்றார்.

5. மக்களைத்திருத்தச் சட்டங்கள் மட்டும்போதாது மக்களின் மனமும் மாற வேண்டும். இதிகாச புராணங்கள் மனமாற்றத்தைச் செய்யும் கருவி-களாகும்.

6. பாகவதர்களோடு பின்பாட்டுக்காரர்களும் பக்க வாத்தியக்காரர்களும் இணைந்ததால்தான்கதா-காலட்சேபம் சிறப்புற்றுள்ளது.

7. மராட்டிய கதாகாலட்சேபக்கலையின் அடிப்-படைக் கூறுகள் தமிழக நாட்டுப்புறக்கலையான வில்லுப்பாட்டின் அடிப்படைக் கூறுகளோடு பெருமளவு பொருந்தியுள்ளது.

8. தற்காலச் சமுதாயச் சீர்கேடுகளைச் செப்பம் செய்யும் ஆற்றல் மதங்களுக்கு உண்டு.

9. சமயப் பணியைச் செய்ய வந்த இக்கலை சமுதாயப்பணியையும் செய்துள்ளது.

10. புத்தக அறிவை விட தெய்வீகஅனுபவங்களைக் கேட்கவே மக்கள் விரும்புவர்.

11. சிறைச் சாலைகளிலும், மருத்துவ மனைகளிலும் மனச்சிக்கலால் பாதிக்கப்பட்டவர்கள் உணரும் வண்ணம் இக்கலை வழி வாழ்வியல்செய்திகளை இதிகாச புராணங்களின் வாயிலாக வெளிப்-படுத்துதல் அவர்களுக்கு மனச்சிக்கலையகற்றும் மருந்தெனத் திகழும்.

## துணை நூற்பட்டியல்

**நூல்கள்:**


1. கண்ணதாசன், கவிஞர், 'நம்பிக்கை மலர்கள்' சென்னை, வானதி பதிப்பகம். 1981 (மு.ப.).

2. கிருபானந்த வாரியார், 'திருமுருக கிருபானந்த வாரியார் வாழ்க்கைவரலாறு', சிதம்பரம்தில்லை திருப்புகழ் சபை, 1979 (மு.ப.).

3. கிருபானந்த வாரியார், திருமுருக, 'மனிதனும் தெய்வமாகலாம்' நாகர் கோயில், இ ல வ ச வெளியீடு-2, 1983.

4. கோமதிநாயகம் சி, 'வில்லுப்பாட்டு', சென்னை தமிழ்ப் பதிப்பகம், 1979 (மு.ப.).

5 கோபாலகிருஷ்ணபாரதி, 'திருநாளைப் போவா-ரென்னும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை' சென்னை, இரெத்தின நாயகர் அன்சன்ஸ், 1968 (மு.ப.).

6. சண்முகம் ஔவை, தி. க, 'நாடகக் கலை' சென்னை, தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், 1967 (மு.ப.).

7. சிதம்பர பாகவதர் டி.எஸ்., 'காலக்ஷேபம் என்ற வியாஸம்', திருச்சி, ஜெகம் அன் கோ, 1928 (மு.ப.)

8. சீனிவாசன், ஆர்., 'நாம்வணங்கும் தெய்வங்கள்' சென்னை, இளங்கோ பதிப்பகம், 1959 (மு.ப.)

9. சோமலே, 'தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்', சென்னை, நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா.

10. சோமலே, 'தஞ்சை மாவட்டம்' சென்னை, பாரி நிலையம், 1961 (மு.ப.)

11. பெருமாள், ஏ. என்., 'தமிழக நாட்டுப்புறக்-கலைகள்', சென்னை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 1980 (மு.ப.)

12. பி. ஸ்ரீ., 'அன்பு வளர்த்த அறிவுப்பயிர்' சென்னை, கலைமகள்காரியாலயம், 1959(மு.ப.)

தொகுப்பு நூல்கள்:

1. இராமானுஞ்சலு, 'கதாமோகனரஞ்சிதம்', ஸ்ரீரங்கம், ஸ்ரீரங்க நிலையம், 1915 (மு.ப.)

2. 'கலைக்களஞ்சியம்,' மடலம்-3. சென்னை, தமிழ் வளர்ச்சிக்கழகம், 1959 (மு.ப.)

3. கஸ்தூரி என், 'அவதார மொழியமுதம்' - 11 ஆந்திரா, பிரசாந்தி நிலையம் 1970 (மு.ப.)

4. குப்புசாமி சி., 'நீலகிரியில் நிமல கருத்துக்கள்', சென்னை, 1972 (மு.ப.)

5. நடனகாசிநாதன், தாமோதரன் கு., 'கல்வெட்டு ஓர் அறிமுகம்', சென்னை, தொல்பொருள் ஆய்வுத்துறை, 1980 (மு.ப.)

6. 'பன்னிரு சதகத்திரட்டு', சென்னை, இரத்தின நாயகர் அண்ட் ஸன்ஸ், 1963 (மு.ப.)

7. Ramasamy M.S., Smt. C. SaraswathyBai Commoration Volume, Madras : The Jaganatha Baktha Sabha, 1939.

இசை நூல்:

1. பாலசுந்தரம் ஜி., 'கீ தா வ ளி' (பண்டிகை பாமாலை), தஞ்சை, 1972 (மு.ப.)

சிறப்பு மலர்கள்:

1. 'ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டுமலர்' மதுரை, 1981.

2. 'கரந்தைத் தமிழ்ச் சங்க மணிவிழா சிறப்பு மலர்' கரந்தை, கரந்தைத் தமிழ்ச்சங்கம், 1973.

3. 'சமரச சுத்த சன்மார்க்க சங்க நூற்றாண்டுமலர்' வேலூர், தொரப்பாடி, 1965.

4. 'தமிழிசை விழா மலர்' சென்னை, 1956-57.

5. 'தமிழிசைச் சங்க ஆண்டுமலர்', சென்னை 1974.

6. 'மூன்றாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்', சென்னை, 1968.

7. 17 th South Indian Music Conference Souvenír, Madras : 1977-78·

8. 44 th South Indian Music Conference Souvenir, Madras : 1977-78.

9. The Maratta Education Fund Madras Silver Jubilee Souvenir (cultural and economic studies) Madras : 1937.

இதழ்கள்:

1. ஆனந்தவிகடன்.

2. சனாதனசாரதி (தமிழ்).

3. ஹரிஹர ரத்னாவளி.

4. The Journal of the Musicacademy (A quarterly devoted to the advancement of the science and art of Music) Madras-1932.

## நேர்முகப்பேட்டி

1. இராமமூர்த்தி பாகவதர் ஜி. நாள் : 6-5-84.
2. கிருபானந்தவாரியார் திருமுருக. நாள்:28-4-84

3. சுப்பிரமணிய பாகவதர் டி.என். நாள்: 9-4-84.

4. சூடாமணிசடகோபன் நாள் : 5-3-84.

5. பாலமுருகதாஸ் ஆர். நாள் : 9-4-83.

6. விஜயராகவாச்சாரியார் எம்பார். நாள்: 2-4-84.

7. ரெங்கநாத பட்டாச்சாரியார் நாள் : 25-8-84.

ஒலிபரப்புகள்:

1. திருச்சி வானொலி நிலையம், 'இசைவுலகம்' எம்பார் விஜயராகவாச்சாரியார் நாள்: 30-5-83

2. திருச்சி வானொலி நிலையம், 'ஹரிகதை' எம்பார் விஜயராகவாச்சாரியார் நாள்: 28-5-84.

ஸ்ரீ வெங்கடாஜலபதி பிரிண்டர்ஸ், தஞ்சை. போன்: 20038.

# ஹரிஹர கதா ரத்னாவளி

[ஓர் ஹரிகதாகாலட்சேப ஸீரிஸ்]

தாமே சுலபமாய் பிரசங்கிக்க உபயோகிக்கும் படி (1) கதாஸங்கிரக சுலோகங்கள் (2) தமிழில் கதைச்சுருக்கம் (3) நாம சித்தாந்த நிருபணம் (4) சரித்திர நிருபணம் இவைகளை அர்த்ததுடன் தெளிவாகஅச்சிடப்பட்டு மாதம்ஒருஹரிகதையுள்ள ஒரு ஸஞ்சிகை வெளிவரும். வருடசந்தா உள்நாட்டிற்கு தபால் சார்ஜ் உள்பட (ரூபா) 5-0-0. வேண்டியவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளவும்.

அச்சிட்டிருக்கும் புஸ்தகங்களின் விபரம்

| | |
|---|---|
| 1. ராதா கல்யாணம் | 0 - 8 - 0 |
| 2. கணேச ஜன்ம | 0 - 8 - 0 |
| 3. கிருஷ்ண ஜன்ம | 0 - 8 - 0 |
| 4. கிருஷ்ண பாலக்ரீடா | 0 - 8 - 0 |
| 5. துருவ சரித்திரம் | 0 - 8 - 0 |
| 6. வள்ளீ கல்யாணம் | 0 - 9 - 0 |
| 7. வத்ஸலா கல்யாணம் | 0 -10 - 0 |
| 8. கருடகர்வஹரணம் | 0 - 8 - 0 |
| 9. ருக்மாங்கத உபாக்யானம் | 0 - 8 - 0 |
| 10. அம்பரீஷ உபாக்யானம் | 0 - 8 - 0 |
| 11. குசேல உபாக்யானம் | 0 - 8 - 0 |
| 12. கௌரீகௌரீக்ருத சரித்திரம் | 0 - 8 - 0 |

சந்தாதாரல்லார்க்கு ஷ விலைக்குக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
ஹரிஹரகதாரத்னாவளி ஆபீஸ்,
15. வெள்ளாழத்தெரு, வேப்பேரி,
மதராஸ்.

# ஆசிரியரைப் பற்றி......

உள்ளங் கவர் நண்பர் இரா. குருநாதன் தஞ்சையில் வீ. இராமு-கண்ணம்மாள் தம்பதியருக்கு 1950 இல் தோன்றியவர். மன்னர் சரபோசி கல்லூரி, பூண்டி புட்பம் கல்லூரி, திருச்சி தேசியக் கல்லூரி, குடந்தை அரசு ஆடவர் கல்லூரி, திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி ஆகியவற்றின் மூலம் கல்வியறிவு பெற்றவர். தமிழவேள் உமாமகேசுவரனாரின் தமிழ்க்கனவு பலிக்குமிடமான கரந்தைக் கலைக்கல்லூரியில் துணைப்பேராசிரியராக விளங்குபவர்.

ஆசிரிய நண்பர் கடக லக்கினக்காரர். இரண்டாமிடத்தில் சனி இருப்பதால் பேச்சுத்திறனும், ஆறாமிடத்தில் சூரியன் இருப்பதால், கூர்ந்தமதியும், ஏழாமிடத்தில் சுக்கிரனிருப்பதால் கலைத்தன்மையும் உடையவராக விளங்குகின்றார்.

இவரது அறிவில் குறிஞ்சியின் உயரம் தென்படும், பழக்கத்தில் முல்லையின் பசுமை விளங்கும், பேச்சில் மருதத்தின்சிலேடை தோன்றும், மனம் நெய்தலின்ஆழத்தைக் காட்டும். கவிஞர், பாடகர், நடிகர், இசையமைப்பாளர் என்ற நிலைகளில் தன்னை அமைத்துக்கொண்டவர். பழமையைப் புதியக் கண்ணோட்டத்தில் நோக்கும் அவருடைய இயல்பில் அமைந்திருக்கும் நகைச்சுவை உணர்வு யாவராலும் விரும்பப்படும். •

இவர் ஒரு திறந்த புத்தகம். அகத்தில் வஞ்சம் படியாத இயல்பினர். புது இலக்கணம் படைக்கும் அழகியக் கவிதை ஊற்று காலத்தைச் சேதப்படுத்தாத இவரதுசிந்தனை, உலகை வாழ்விக்கும்.

இரா. சந்தானம் எம்.ஏ.
முதுநிலை ஆய்வாளர்,
கூட்டுறவுச் சங்கம்
தஞ்சாவூர்.